
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்.
ஆவணி
212 ஆவது மலர்
2015
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்**
**அறங்கூறு மாக்கந் தரும்.**

**பொருள் :** பிறனைக் காணாதவிடத்து இகழ்ந்துரைத்துக் கண்டபோது அவனைப் புகழ்ந்து வாழ்தலைக் காட்டிலும், அவ்வாறு செய்யாது சாதல் மேலானது. (183)

**கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்னின்று பின்னோக்காச் சொல்.**

**பொருள் :** ஒருவன் உன் முன்னிலையில் உனக்கு வருத்தம் தரத்தக்கதைத் தாட்சணியமறச் சொன்னானாயினும், அவன் எதிரே இல்லாதபோது அவனது குற்றத்தைச் சொல்லுதலாகாது. (184)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்




ஒன்றா யிரண்டாய் மூன்றாயோ ரைந்தாய்
நின்றாய் நின்னை நினையவல் லார்கள்
பொன்றாத் துணையும் போகமும் பொருந்துவர்
என்றார் பெரியோ ரிறைஞ்சுதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 38

ஓங்காரத் துட்பொரு ளானவுத் தமனை
நீங்கா தெங்கும் நிறைந்த வஸ்துவைப்
பாங்கார் பஞ்சாட் சரப்ப ரமனைத்
தூங்காது நாளுந் தோத்திரிப் போமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 39

ஔவிய மனத்தின ரறியா வறிவைச்
சௌபாக் கியமுடைத் தற்பர வஸ்துவை
நௌவியு மழுவு மேந்து நம்பனைக்
கௌரவத் துடனே கழறுதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 40

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்



வெளியீடு - 2 சுடர் - 212

2015 ஆவணி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நமக்கு ஏன் இந்தச் சரீரம்? | செல்வி பா. வேலுப்பிள்ளை | 01 -05 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 06 -07 |
| நலிவடையும் தார்மீகத்துக்கு... | இ. சிவராசா | 08 -12 |
| வித்தகா உன் ஆடல் ஆர்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 13 -15 |
| தேரேறி வரும் செல்வச்... | எம்.பி. அருளானந்தன் | 16 -17 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 18 -20 |
| நீக்கமற நிறைந்திருக்கும்... | ஆர்.வீ. கந்தசுவாமி | -21 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 22 -23 |
| பசுவின் உடலில்... | செல்வி செ. ஜடா | 24 -25 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 26 -31 |
| சூரிய வழிபாடு | திருமதி பொ. செல்வக்காந்திமதி | -32 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 33 -36 |
| இந்து மதத்தில்... | வி. செல்வரத்தினம் | 37 -38 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 39 -42 |
| எதிர்த்து நில் | அ. சுப்பிரமணியம் | -43 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 44 -45 |
| சன்மார்க்க போதங்கள் | கா. சின்னப்பா | 46 -48 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 49 -51 |
| தமிழகத் திருக்கோயில் வரிசை | வல்வையூர் அப்பாண்ணா | 52 -54 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் 2015 ஆவணி மலர்

# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஆடிமாத வெளியீடாகிய 211ஆவது ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை வில்லிசைக் கலைஞரும், சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகால தொடர்பு கொண்டவருமாகிய திரு க. சத்தியதாஸ் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் ஆச்சிரமம் ஆற்றிவரும் பலவித சமய, சமூகப் பணிகளை சபையில் உள்ளோருக்கு தெளிவுபடுத்தியதோடு மாதாந்தம் வெளியிடும் ஞானச்சுடர் மலரின் வளர்ச்சி பற்றியும் அதற்கமைவாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பேரவையினரையும், மலருக்குரிய ஆக்கங்களை எழுதுவோரையும் பாராட்டி இம்மலர் மென்மேலும் பிரகாசிக்க சந்நிதி வேற்பெருமான் அருள் சுரக்க வேண்டும் என பிரார்த்தித்து தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஆடிமாத ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளஞ் சைவப்புலவரும் ஆசிரியையுமாகிய திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர்கள் தமதுரையில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு தாம் ஆரம்பகாலந் தொட்டு தொடர்பைப் பேணிவந்ததாகவும், அதனடிப்புடையில் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்குரிய ஆடிமாத வெளியீட்டுரையினை பலவருடகாலமாக செய்து வருவதையும் அதற்கு ஆச்சிரம சுவாமி அவர்கள் படிப்படியாக எனது பேச்சாற்றலை வளர்ப்பதற்கு ஊன்றுகோலாக விளங்கியுள்ளமை நான் செய்த பாக்கியம் என்றே கூறவேண்டும்.

அதற்கமைவாக இம்மாத மலருக்கு வெளியீட்டுரை ஆற்ற வந்த எனக்கு மதிப்பீட்டுரை ஆற்ற வருகைபுரிபவர் வராத காரணத்தால் இம்முறை சுவாமிகள் மதிப்பீட்டுரையை ஆற்றுமாறு கூறியிருந்தார். அதனடிப்படையில் மலருக்குரிய மதிப்பீட்டுரையை முதன் முதலாக ஆற்றுகின்றேன் என்று சபையில் உள்ளோருக்கு கூறியதோடு மலரில் இடம்பெற்ற கட்டுரை, கவிதைகளை தனக்கேயுரிய வகையில் வருகைபுரிந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறினார். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதி பெறுவோருக்குரிய பிரதிகளை வழங்கி இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்கும் வேலவனை வேண்டி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

ஞானச்சுடர் உ 2015 ஆவணி மலர்

# சுடர் தரும் தகவல்

நடைமுறையிலுள்ள எமது சமய சமூக வாழ்க்கை தொடர்பாக இன்று எமது மண்ணில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் மத்தியில் ஒரு குழப்பமான சிக்கல்தன்மை வாய்ந்த போக்குகள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

எமது சமயம், பண்பாடு தொடர்பாக ஒழுக்கமான சீரான வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ள மூத்த வயதுள்ள பிரிவினர் ஒரு பக்கமும், ஆத்மீக ஈடுபாட்டில் நாட்டமின்றி வேண்டத்தகாத பண்புகளுடன் வளர்ந்து வருகின்ற ஒருபகுதி இளம்சமுதாயத்தினர் மறுபக்கமும், இவற்றைவிட நிகழ்கால யுத்தச்சூழல் குழப்பமான வாழ்க்கைமுறை என்பவற்றால் எப்படியும் வாழலாம் என்ற சிந்தனையுடன் தர்மத்திற்குப் புறம்பாக பண்பாட்டிலிருந்து விடுபட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற பிரிவினர் இன்னொரு வகையினர் என்று பலகோணங்களில் எம்மவரின் சமூக வாழ்க்கை திசைமாறிப் போவதாக எண்ணத் தோன்றுகின்றது.

இந்த நிலைமைகளைச் சீர்திருத்துவது, ஒரு சீரான சமுதாயமாக மாற்றுவ தென்பதெல்லாம் இன்றுள்ள அரசியல் பிரச்சினையைப்போல மிகவும் சிக்கல் வாய்ந்த தாகவே காணப்படுகின்றது. ஆனால் இந்த நிலைமைகளை மேலும் வளரவிடாது மற்றவர் களால் நாம் பழிக்கப்படும் ஓர் கீழான சமுதாயம் என்ற நிலைக்கு நாம் செல்லாதவாறு காப்பாற்றப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இந்தச் செயற்பாடுகளிலிருந்து நாம் காப்பாற்றப்பட வேண்டுமானால் மானிட நேயத்துடன் மானிடப் பண்புள்ளவர்களாக சிந்தித்துச் செயற்பட முதலில் நாம் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு மனித நேயத்துடன் நாம் சிந்தித்துச் செயற்படுவோமானால் அது எம்மை ஓர் உயர்வான நிலைக்கு ஆற்றுப்படுத்தும்.

ஒருவன் தனது உள்ளத்தை, சிந்தனையை தூய்மையானதாக ஆக்கிக்கொள்வா னாகில் அதனூடாக அவனிடம் அன்பு ஊற்றெடுத்து அந்த அன்பின் வழியாக பண்பான வாழ்வும் பக்குவமான வாழ்க்கையும் அவனிடம் குடிகொள்ளும். இவற்றை நாம் அனைவரும் கருத்தில் எடுப்போமானால் எமது சமூகம் மேன்மையுறும். சிந்திப்போமாக.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

## 1. காப்புப் பருவம்

(தொடர்...

### உமையம்மை

அரிய பெரும் பாலகன்
உபமஞ்சு அந்தநாள்
அகங் குழைந் தழுத போதே
அன்புக்கடல் சிவபிரான்
அரியபாற் கடலீந்த
அருங் கருணைத் திறமதென்ன
ஒருமகன் சீர் காழித்
திருமகன் சம்பந்தன்
ஒலிட்டன் றழுத போதே
ஒப்பில்லா னப்பாலைச்
சுரந்தமுதா யூட்டிய
உமையேயுன் பாதம் பணிந்தேன்
பெருமைசேர் சரவணனாக
துதித்துக் கார்த் திகைமாதர்
பெருமுலைப் பாலருந்தி
பெட்புடன் விளையாடி
அற்புதம் பல செய்தான்
பிறங்குவா னுலக மெல்லாம்
உரிமைசா ரீமத்நின்
தொண்டை மானாற்றங்கரை
உயர் கோயில் வடி வேலவன்
உமைமகன் சிவகுரு
உயர் செல்வச் சந்நிதிவாழ்
ஒருகுகனைக் காக்க வென்றே.

-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**
(லண்டன்)

**Dr. G. பவானி**
(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**
(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S.S. ரஜீந்திரன்**
(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**சி. சிவமூர்த்தி**
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**திருமதி கி. மாலினி**
(கலாச்சார உத்தியோகத்தர், கோப்பாய்)

**A. நாகரெத்தினம்**
(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**
(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**
(சட்டத்தரணி, நவிண்டில்)

**Dr. V. சச்சிதானந்தராஜா**
(கண்ணா கிளினிக், சித்தங்கேணி)

**திருமதி கௌரி சுரேசன்**
(ஆசிரியர், ஆவரங்கால்)

**செ. கந்தசாமி**
(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

**நா. சிவசிதம்பரம்**
(கோணாவளைலேன், கொக்குவில்)

**நவீந்திரன் மகிழினி**
(மீசாலை மேற்கு)

**S. அருளையா**
(கொழும்பு)

**ச. பத்மநாதன்**
(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**சி. சிவயோகநாதன்**
(விக்னேஸ்வரா வீதி, கரணவாய்)

**தே. தேவராஜேந்திரன்**
(திகிரி லேன், தும்பளை)

**பொ. நாகலிங்கம்**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

**இ. நிர்த்தனசுந்தரம்**
(ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)

**முத்து கணேஷ்**
(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**
(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**
(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**
(பண்ணாகம், சுழிபுரம்)

**சி.து. கலைச்செல்வம்**
(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**வ. ரவிச்சந்திரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**வை.ச. பரஞ்சோதி**
(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

ச. ஸ்ரீவிவேகானந்தராசா
(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
கிருபாகரன் திவ்வியா
(மந்துவில் மேற்கு)
கிருபாகரன் கீர்த்திகா
(மந்துவில் மேற்கு)
சீ.சி. கந்தையா (பலாலி)
(ஆவரங்கால்)
மு. முருகதாஸ்
(சிறுப்பிட்டி தெற்கு)
T. தியாகலிங்கம்
(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)
S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்
(மானிப்பாய் தெற்கு)
இ. தயாபரன்
(கோண்டாவில்)
S. சாம்பவி
(யாழ்ப்பாணம்)
அருளையா சுப்பிரமணியம்
(நீர்வேலி மேற்கு)
த. புவனேந்திரன்
(அந்திரானை, ஈவினை)
ஆ. விநாயகமூர்த்தி
(சாளம்பை, கரணவாய் மத்தி)
ச. சிவகுமாரன் G.S.
(அமுதசுரபி, கட்டுடை)
K. நடராசா
(பொறியியலாளர், பத்தமேனி)
சி. நவரெத்தினம்
(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

**உரிமையாளர்**

(லக்ஷி தொலைத் தொடர்பகம், அச்சுவேலி)

**சி. சுப்பிரமணியம்**

(சமரபாகு, உடுப்பிட்டி)

**M.P. தர்மலிங்கம்**

(பத்திரிகை முகவர், உடுப்பிட்டி)

**சிறி மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ந. பொன்னுத்துரை**

(தொம்பை வீதி,. உடுவில்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**திருமதி ஜெகதீஸ்வரன் குமுதாதேவி**

(சுண்ணாகம் மேற்கு)

**வ. சிவலிங்கம்**

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(அச்சுவேலி)

**வே. இராஜேந்திரா**

(ஆவரங்கால்)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)

# நமக்கு ஏன் இந்தச் சரீரம்?

- செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் -

சரீரம் என்பது உடம்பு. யாக்கை, மெய் எனச் சொல்வதும் உண்டு. இந்த உடம்பை இறைவன் ஏன் படைத்தான்? இதை நாம் சிந்திக்க வேண்டும். நாம் சிந்திப்பதில்லை. எமது எண்ணமெல்லாம் நல்ல சத்தான ஆகாரத்தைச் சாப்பிட்டு உடம்பை வளர்ப்பதே. நமது உடம்பு இயங்குகிறதே எப்படி? உயிர்தான் உடம்பை இயக்குகிறது. அப்படி உயிர் இயங்க வேண்டுமாயின் உயிருக்கு ஒரு உயிர் (சக்தி) வேண்டும். அதுவே இறைவன்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பிலே உறு பொருள் கண்டேன்
உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்பது திருமூலர் அருள் வாக்கு.

"வாழ்த்த வாய் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும்
தந்தவன் இறைவன்"

"வணங்கத் தலை வைத்து வார்கழல்வாய் வாழ்த்த
வைத்து இணங்கத் தன்சீரடியார் கூட்டமும் வைத்த
எம்பெருமான்" இவை தமிழ் வேதவாக்கு.

ஆகவே இந்த மானிட சரீரத்தைத் தந்த இறைவனை நாம் மனம் வாக்கு காயம் (மனம், மொழி, மெய் (உடம்பு) இம்மூன்றினாலும் மெய்யன்போடு வழிபட வேண்டும்.

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்"

இது நாவலர் ஐயாவின் அருள்வாக்கு. முத்தியின்பம் என்பது பிறவாப் பெரும்பேறு. தலை, கண், மூக்கு, வாய், செவி, கைகள், கால்களைக் கொண்டு அமைந்ததே உடம்பு (சரீரம்) ஆகவே இவ்வுறுப்புகள் ஒவ்வொன்றும் இறைவனை வணங்க வேண்டியவையே.

1. மனம்:- மனதினால் இறைவனுடைய பெருமைகளை, திருவிளையாடல்களை, நால்வர் பாடிய பாடல்களை நினைந்து வழிபடலாம்.

2. வாக்கு (மொழி):- இறைவனை வாழ்த்திப் பாடலாம். / (வாழ்த்தவாய்)

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க! இவை மணிவாசகரின் வாழ்த்து.

ஈசனடி போற்றி! எந்தை அடி போற்றி! என்பது அவர் செய்யும் வணக்கம்.

3. காயம்:- உடம்பு. உடம்பிலுள்ள அத்தனை உறுப்புக்களும் வழிபடுவதற்குரியவை. கை, கால்கள், சரியைத் தொண்டுகள் செய்வதற்குரியன. பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் செய்வது காயத்தினால் செய்யும் வழிபாடாகும்.

தாழ்த்தச் சென்னியும் நினைக்க நெஞ்சையும், வாழ்த்த வாயையும் தந்த இறைவனை நாம் வாயார வாழ்த்தி வணங்கவேண்டும். மனதால் நாம் சிந்திக்கும்போது மனதால் செய்யும் பாவங்களாகிய பொறாமை, கோபம், ஆசை, சூது என்பனவும், வாக்கால் பொய் கூறல், புறஞ் சொல்லல், வன்சொல் கூறுவதும், காயத்தால் கொலை, களவு, பிறன்மனை சோரல், சண்டை ஆகிய குணங்கள் குறைந்து இறைசிந்தனை மேலோங்கும்.

நாவுக்கரசு சுவாமிகள் சைவசமயியாக இருந்து இறையருள் பெற்றவர். ஊழ்வலியால் சைவம் விட்டு சமணம் சார்ந்து சமண நூல்கள் கற்று சமணராயினர். திலகவதியார் தம்பி யின் நிலைகண்டு சிவபெருமானை வேண்ட சூலைநோய் கொடுத்து வருத்தியபோது "கூற்றாயினவாறு..." பதிகம் பாடி மீண்டும் சைவசமயியாயினர். வெகுண்டெழுந்த சமணர் சுண்ணாம்பறையில் அடைத்தும், கல்லோடு கட்டிக் கடலில் விட்டும், நஞ்சு கலந்த சோற்றினை உண்ணக் கொடுத்தும், மதயானையை ஏவிவிட்டபோதும் அடியார் "....ஈசன் எந்தை இணையடி நீழலே, நற்றுணையாவது நமச்சிவாயவே, கங்கையைச் சடையில் வைத்தும் பாம்பை ஆபரணமாகக் கொண்ட இறைவனின் அடியவன்யான், அவன் என் நெஞ்சில் நிறைந்திருப்பதால் அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதுமில்லை எனக்கூறிச் சமணரை விட்டகன்றார்.

தனக்கு நிகழ்ந்த துன்பங்களிலும் தீராத நோய் வருத்தியபோது, "ஈன்றாளுமாய், எந்தையுமாய் உடன் தோன்றியவருமாய் எனைக் காத்தவருமாகிய இறைவன் தோன்றாத் துணையாக நின்று அருளிய திறத்தை நினைந்து நினைந்து நெக்குருகினார்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகப் பணி செயுமாறே"

பணி உடம்பாலும் நாவினாலும் செய்வதுதான் என் கடனென்றெண்ணி கையில் உழவாரம் கொண்டும், நாவினால் பாடல்கள் பாடி ஊர்தோறும் சென்று மக்களை நல்வழிப் படுத்தினார். அவர் பாடியருளிய திருவங்கமாலையில் உடம்பிலுள்ள உறுப்புக்கள் இறைவனை வழிபடவேண்டுமெனக் கட்டளையிடுகிறார்.

தலையே நீ வணங்காய்
கண்காள் காண்மின்களே
மூக்கே நீ முகர்வாய்
வாயே வாழ்த்து கண்டாய்
செவிகாள் கேண்மின்காள்
நெஞ்சே நீ நினையாய்
கைகளால் பயன் என்ன கூப்பி வணங்கு
கால்களாற் பயன் என்ன கோயிலை வலம் வரல்

எனத் தனியே உறுப்புகளுக்குக் கூறியவர். முடிவில் "ஆக்கையாற் பயன் என் அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றியெனா ஆக்கையாற் பயனென்ன"? என்று கேட்கிறார். கேட்டுப் பின்னும் சொல்கிறார்.

"உற்றார் ஆர் உளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார் ஆருளரோ"

எனக் கேட்கின்றார். உள்ளத்தாலும் உடலாலும் இறைவனை வாழ்த்தி வணங்குங்கள்

எனக் கூறிய அப்பர் சுவாமிகள் சொல்கிறார்,

“திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெரு நோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே”

அதாவது இறைவன் திருநாமமாகிய ஐந்தெழுத்தையும் சொல்லாதவர்கள், தீவண்ணர் புகழைப் பேசாதவர்கள், ஒரு நாளாவது கோயிலுக்குப் போகாதவர்கள், உண்பதன்முன் மலர் பறித்திட்டு உண்ணாதவர்கள், அருநோய்கள் கெட விபூதி அணியாதவர்கள் பெரு நோய்கள் (பிறவிப்பிணி, பீடிப்பதற்கே மீட்டும், மீட்டும்) பிறப்பதும் இறப்பதுவுமாக வாழ்கின் றார்கள். இவ்வாறு இறைவனை நினையாது, வணங்காது விபூதி அணியாதவர்கட்கெல்லாம் என்ன செய்யவேண்டுமென இன்னோர் பாடலில் சொல்கிறார்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே”

இப்பாடலில் சரியைத் தொண்டுகள் செய்வது பற்றியும் சங்கரா போற்றி ஆரூரா போற்றி என வணங்கவேண்டுமெனவும் கூறுகிறார்.

அருணகிரி நாதரும் பரமாதர் வலையிற்பட்டு அதனால் தொழுநோய் கண்டு, “இனி நான் வாழ்வதாற் பயனில்லை என வாழ்வை வெறுத்தார். தற்கொலை செய்யத் துணிந்து திருவண்ணாமலைக் கோயில் கோபுரத்தின்மீது ஏறிக்குதிக்கும் சமயம் முருகப் பெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டவர். அவரது கொடிய நோய் மறைந்தது. பிரணவ உபதேசம் பெற்று “முத்தைத்தரு...” என முருகன் அடியை எடுத்துக் கொடுக்க பாடும் பணியே பணி யாகக் கொண்டு திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதியைப் பாடியவர்.

அருணகிரியார் பாடிய கந்தரலங்காரத்தில் ஒரு பாடல்,

“கோடாத வேதனுக் கியான் செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாளனே தென் றணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணும் தொழாத கையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே”

1. தாள் சூடாத சென்னி:- இறைவனுடைய திருவடிகளே அணிகலம்.

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து...."
"....பாதமலர் சூடுகின்றிலை...." இவை மணிவாசகர் வாக்கு.

2. நாடாத கண்:- முருகன் திருவடியையும், திருமேனியையும் கண்டு மகிழாத கண்.
"....கண்ணினை நின்பாதப் போதுக் காக்கி" இதுவும் மணிவாசகர் வாக்கு.

3. தொழாத கை:- இறைவனைக் கைகூப்பி வணங்கியும், பூக்களால் அர்ச்சித்தும், ஏனைய சரியைத் தொண்டுகள் செய்ய வேண்டும்.
"....எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க" மணிவாசகர் வாக்கு.

4. பாடாத நா:- இறைவனின் அருட்குணங்களை நாவாற் புகழ்ந்து பாடவேண்டும். இப்படி இறைவனைத் தலையாரக் கும்பிடாத தலையையும், நின் திருமேனியழகைக் காணாத கண்களையும், கூப்பித் தொழாத கையையும், நாவாரப் பாடியும், நினைக்காத நெஞ்சையும் ஏன் படைத்தாய் எனக் கேட்கின்றார். இன்னுமோர் கந்தரலங்காரப் பாடலில்,

சிந்திக்கி லேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனொன்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனை
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கிலேலுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே.

புந்திக்கிலேசம்- மனதிலுண்டாகும் துன்பங்கள்.
காயக்கிலேசம்- உடம்புக்குண்டாகும் நோய்கள்.

போக்குவதற்கு மயில்வாகனனை, சிந்திக்கிலேன்- நினைக்கவில்லை நின்று சேவிக்கிலேன்- முருகனின் சந்நிதியை தரிசிக்கவில்லை, தண்டைச் சிற்றடியை வந்திக்கிலேன்- அவன் சிறிய திருவடியை வணங்கவில்லை ஒன்றும் வாழ்த்துகிலேன்- அவன் பெருமைகளைச் சொல்லி வாழ்த்தவில்லையேயென்பது அருணகிரியின் காலங்கடந்த ஆதங்கம்.

பட்டினத்தடிகளும், "கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்க கசிந்துருகிப் பண்ணுண்டு பாட செவியுண்டு கேட்க பச்சிலையால் எண்ணுண்டு சாத்த எதிர் நிற்க ஈசன் இருக்கையில் மானிடனே நீ ஏன் கெட்டுப் போகின்றாய்? என எடுத்துரைக்கிறார்.

நவாலியூர்ப் புலவர் அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி அன்புடன் சிவாய நமவென அருள்நீறு பூசிக் கதிரமலை காணாத கண்ணென்ன கண்ணே அது புண். கந்தனின் பெருமை, புகழ் கேளாத செவி இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியென மனிதனின் ஒவ்வொரு உறுப்பும் இறைவனை நினைந்து வழிபடவேண்டுமென்கிறார்.

திருவள்ளுவர் சொல்வதையும் கருத்திலெடுப்போம்.

1. "கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

2. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட உடம்பும், உறுப்புகளும் இறைவனை மனதார நினைந்து, திருமேனியழகைக் கண்டு ரசித்து, அவன் பெருமைகள் கல்யாண குணங்களைக் கேட்டும், வாயார வாழ்த்தியும் கைகளால் கோயிற்றொண்டுகள் செய்தும், கால்களால் திருக்கோவிலை வலம் வந்தும் தலையால் வணங்கி, போற்றி போற்றி என வாழ்த்தி

வணங்கி இறைவன் அருளால் பிறவியாகிய நோய் நீங்கப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வை (முத்தி) அடைய வேண்டுமென்பதை,

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்"

என நாவலர் சுருக்கமாகச் சொல்லியுள்ளார்.

ஆகவே நாம் எல்லோரும் கோவிலுக்குப் போவோம். பஞ்சப்புலன்களும் லயிக்க வணங்குவோம்; சரியைத் தொண்டுகள் செய்வோம். எடுத்த இப்பிறவியில் முத்தியின்பம் கிடைக்கும் என்பதற்கில்லை. இது மறுபிறவிகட்கு வித்தாகும். பிறவிகள்தோறும் நம் வினைகள் சிறிது சிறிதாகக் குறையும். பிறந்தும் இறந்தும் மீண்டும் மீண்டும் பிறக்கமுடியாத களைப்பு வர இறைவன் திருவடி அடையும் பேற்றைப் பெறுவோம்.

---

## எது மதிப்புடையது?

பல நாடுகளைத் தன் ஆட்சியின்கீழ் வைத்திருந்த ஒரு பேரரசர். அவருக்கு ஆலோசனைகள் கூற பல மந்திரிகள் இருந்தனர். அரசருக்குப் பணிவிடை செய்ய சேவகன் ஒருவன் இருந்தான். அரசர் அந்தச் சேவகனிடம் அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். அரசர் சேவகனிடம் கொண்ட அன்பைச் சகிக்காத மந்திரிகள் அவன்மேல் பொறாமை கொண்டார்கள்.

அறிவுக்கரிய பல ஆலோசனைகள் கூறும் நம்மிடம் காட்டாத அன்பை, ஒரு சேவகனிடம் போய் அரசர் காட்டுகிறாரே என்ற எரிச்சலும் அவர்களுக்குள் இருந்தது. மந்திரிகள் இவ்வாறு பொறாமைப்படுவது அரசருக்குத் தெரியவந்தது. மந்திரிகளுக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்று அரசர் திட்டமிட்டார். அரசவையைக் கூட்டினார். அவைக்கு மந்திரிகள் அனைவரும் வந்திருந்தனர்.

அரசரின் சிம்மாசனத்துக்கு முன்பாக மிகவும் விலை உயர்ந்த ஓர் இரத்தினக் கல்லும், ஒரு சுத்தியலும் வைக்கப்பட்டிருந்தது. அரசர் தமது முதல் மந்திரியை அழைத்தார். அரசர், அவரிடம் அந்தச் சுத்தியலை எடுத்து பெரும் மதிப்புள்ள இரத்தினக்கல்லை உடையுங்கள் என்றார். முதல் மந்திரி, விலைமதிப்பற்ற இரத்தினக்கல்லை உடைத்தால் அது பயனில்லாமல் போய்விடுமே? என்று யோசித்தபடி அப்படியே நின்றுவிட்டார். அரசர் அவரை அவரது இருக்கைக்குச் செல்லும்படி சொன்னார். முதல் மந்திரியும் அவர் இருக்கையில் சென்று அமர்ந்தார்.

அரசர் அடுத்த மந்திரியை அழைத்து இரத்தினக் கல்லை உடைக்கக் கட்டளையிட்டார். முதல் மந்திரியே இரத்தினக் கல்லை உடைக்காதபோது அவர் உடைப்பாரா? அவரும் உடைக்காமல் திரும்பிவிட்டார். இப்படியே அரசவையிலிருந்த மந்திரிகள் எவரும் அந்த இரத்தினக் கல்லை உடைக்கத் துணியவில்லை. எல்லோருடைய சிந்தனையிலும் அந்த இரத்தினக் கல்லின் மதிப்பே முதன்மை யாகத் தெரிந்தது. இறுதியாக அரசர் தனது சேவகனை அழைத்து, இரத்தினக்கல்லை உடைக்கும் படி கட்டளையிட்டார்.

அரசரின் வாயிலிருந்து கட்டளை பிறந்தவுடன், அவன் எவ்விதத் தயக்கமுமின்றி சுத்தியலை எடுத்து இரத்தினக்கல்லை உடைத்தான். இதைப் பார்த்த மந்திரிகள் அனைவரும், அட முட்டாளே! விலைமதிப்புள்ள இரத்தினக்கல்லை இப்படி உடைத்து வீணாக்கி விட்டாயே? என்று சத்தம் போட்டனர். அந்தச் சேவகன் எவ்வித பதட்டமுமில்லாமல், மந்திரிகளே, தாங்கள் விலைமதிப்புள்ள இரத்தினக்கல்லை உடைத்ததைப் பார்த்து, அது வீணாகிப் போய்விட்டதே என்று கவலைப்படுகிறீர்கள்... நான் அப்படியில்லை, இந்த இரத்தினக்கல்லை விட நம் அரசரின் சொல்லையே மதிப்புள்ளதாக நினைக்கிறேன். அவர் எதைச் சொன்னாலும், அதைச் செய்வதே என்னுடைய பணி என்றான். அரசன் மந்திரிகளைப் பார்த்து பார்த்தீர்களா...! இதனால்த்தான் இவன்மேல் எனக்கு அன்பு அதிகம்... உண்மைச் சேவகனுக்கு இதுவே அழகு.

*பொறுமை காத்தல் எண்ணங்களைப் பலிக்க வைக்கும்.*



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி
புரம்பல வெரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி



**பதவுரை:-**

தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி- நின்னை வணங்குவாரது மயக்கத்தினை அறுப்பவனே வணக்கம்; பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன்- பிழைபடுதலும் பிழை படாமையும் சிறிதும் அறியாத நாயினேனது, குழைத்தசொல் மாலை கொண்டருள் போற்றி- மனத்தினைக் குழைவித்த சொற்களால் ஆகிய மாலையினை ஏற்றுக்கொண்டருள்க நினக்கு வணக்கம்; புரம் பல எரித்த புராண போற்றி- முப்புரங்களை எரித்த பழையோனே நினக்கு வணக்கம்; பரம் பரம் சோதி பரனே போற்றி- ஒளியையுடைய மேலான பொருள்களுக்கெல்லாம் மேலான ஒளியையுடைய மேலோனே நினக்கு வணக்கம்; புயங்கம் பெருமான் போற்றி போற்றி- பாம்பை அணியாகவுடைய பெருமானே நினக்கு வணக்கம்; புராண காரண போற்றி போற்றி- பழைமையான காரணப் பொருளாயுள்ளவனே நினக்கு வணக்கம் வணக்கம்; போற்றி போற்றி சய சய போற்றி- வணக்கம் வணக்கம் வெல்க வெல்க நினக்கு வணக்கம்.

மையல் துணிப்பாய்- மயக்கத்தினை அறுப்பவனே, "மரணம் பிறப்பென் றிவை யிரண்டின் மயக்கறுத்த, கருணைக் கடலுக்கே" (கோத்9) "மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி மறுமையோ டிம்மையுங்கெடுத்த பொருளனே" (அருட்9) என அடிகள் அருளியமையுங் காண்க. மையல்- மயக்கம். இப்பொருட்டாதல் "மையல் கொண்டு மொய்யெனவுயிர்த்தும்" (முல்லை 83) என்புழியுங் காண்க. அது பிறப்புக்கேது வானதென்பது "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும் மருளானாம் மாணாப்பிறப்பு" (குறள்351) என்பதனாலுமறிக.

"பிழைப்பு- தப்பு; தவறுபடுதல். "யாதென் பிழைப்பென நடுங்கி" (கலி 128:10) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வாய்ப்பு- பிழையாமை. "அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் 948) என்புழி வாய்ப்ப என்பதற்குப் 'பிழையாமல்' எனப் பரிமேலழகர் உரைத்தமையுங் காண்க.

பிழைபடுதலும் பிழையின்றி வாய்ப்புறுதலும் ஆகிய ஒன்றனையும் அறியாத எளியேனைக் குழையச் செய்த சொன்மாலையை ஏற்றுக்கொண்டருள்க என அடிகள் அருளுமாற்றால் அடிகள் தற்போதம் நீங்கித் திருவருள்வழி நின்று இத்திருப்பாடல்களை அருளிச் செய்தனர் என்பதும், அத்திருப்பாடல்கள் அடிகளின் மனத்தினைக் குழையச் செய்தன என்பதும் போதருமாறு காண்க.

ஒன்று- சிறிதும். "இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவென" (கலி 2:19) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. குழைத்த- குழைவித்த, "அலமர லுண்கண்ணா ராய்கோதை குழைத்தநின்"(கலி 73:12) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சொன்மாலை- சொல்லாகிய மாலை, "ஆராதசொன் மாலைகள்" (ஞான 37:11) "ஊரனுரைத்த சொன் மாலைகள்" சொன்மாலை (சுந் 11:10) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. குழைத்த என்றது ஈண்டு திருவாசகம்.

இறைவன் எரித்த புரங்கள் மூன்றாதலின் "புரம்பல எரித்த" என்றார். "புரம்மூன்றும் எரித்த விமலன்" (ஞான 171:2) புரம்மூன்றும் எரிசெய்தான் காண்" (நாவு 243:9) என வருவன காண்க. இரண்டின் மேற்பட்டவற்றைப் பலவென்றல் "ஒன்றிரண்டலபல" (பதிற் 41:15) என்புழியுங் காண்க.

புராணன்- பழையோன் "புராணன்றான்காண்" (222:3) "புதியனவுமாய் மிகவும் பழையான்றன்னை" (225:7) "பாலர் சாலப் பழையர்" (231:7) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

ஒளியையுடைய பொருள்களுள் மேலான ஒளியையுடைய ஞாயிற்றினும் மேலான பேரொளியையுடையவன் இறைவனாதலின் "பரம்பரஞ் சோதிப் பரனே" என்றார். "பரமாம் பரஞ்சோதியை" பரஞ்சுடர் சோதியுட சோதியாய் நின்ற சோதியே பரஞ்சோதியே" (நாவு 178:9; 211:3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

புயங்கம்- பாம்பு. இது புஜங்க; என்னும் வடசொற்றிரிபு. இறைவன் பாம்பையணி யாகவுடைய பெருமானாதலின் 'புயங்கப் பெருமான்' என்றார். "அக்கொடரவ மணிந்தான் கண்டாய்" "அக்கரவ மாரமாக வணிந்தவனை" (நாவு 253:2; 274:21) என வருவன காண்க.

உலகத்தின் தோற்றநிலை இறுதிகளுக்குப் பழமையான நிமித்தகாரணமாயுள்ளவன் இறைவனாதலின் "புராண காரண" என்றார்.

இத்திருவகவல் ஏ ஈறானோ என ஈறானோ என முடிவெய்தாது இகரவீறான் முடிவெய்தியுள்ளது. இதனால் அகவல் இகர ஈறானும் முடிவெய்தும் என்பது அறியத்தக்கது. எல்லா அடிகளும் நாற்சீரான் வந்தமையின் இது நிலமண்டிலவாசிரியப்பா.

(முற்றும்)

# நலிவடையும் தார்மீகத்துக்கு புத்துயிர் அளிப்போம்

– திரு இ. சிவராசா அவர்கள் –

தர்மம் என்பதற்கு பண உதவி செய்தல், தானம் வழங்குதல், புனித யாத்திரைகள் மேற்கொள்ளுதல் என சாதாரண மனிதர் அர்த்தம் கொள்வதுண்டு. இவைபோன்ற செயல்கள் யாவும் நன்நெறிகளாயினும் இவை மாத்திரம் தர்மமாகா. பிரதியுபகாரம் கருதாது சுயநலமின்றி பொதுநோக்குடன் பலருக்கும் நன்மை பயக்கும் வண்ணம் மேற்கொள்ளப்படும் செயல்கள் யாவுமே தர்மச் செயல்களாகும். தர்மம் என்பது ஒரு பொருளின் இயல்பு என்றும் பொருள்படும். அதாவது நெருப்பின் தர்மம் சூடு, சூரியனின் தர்மம் ஒளி மற்றும் இது போன்றன. இந்து சமயத்தை சனாதன தர்மம் எனவும் வழங்குவர். ஒரு சமுதாயத்தின் மனிதநேய செயற்பாடு கட்கும் முன்னேற்றத்துக்கும் நிலையான அத்திவாரமாக தர்மம் விளங்குகின்றது. குறிப்பிட்ட ஒரு சமுதாயத்துக்கோ, இனத்துக்கோ அல்லது நாட்டுக்கோ இது மட்டுப்படுத்தப்பட்டதல்ல. எந்த சக்தியாலும் அணைத்துவிட முடியாதபடி அணையாத விளக்காக என்றும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருப்பதாகும். எழுத்தில் படிக்கப்படாத தார்மீக சட்டதிட்டங்கள் பிரபஞ் சத்தின் இயக்கத்துக்கு ஆதரவாக இருக்கின்றன என்றார் காந்தியடிகள். தர்மம் நலிவடையும் போது சமுதாயத்தில் மன உளைச்சல்களும் பயபக்தியும் நிலவுவதோடு பயங்கரமான புரட்சிகளும் ஏற்பட ஏதுவாகின்றது. தர்மம் பிரகாசமடையாத சமுதாயம் கவலைச் சுமைகளைத் தாங்குவது தவிர்க்க முடியாததாகும். தர்மமே கடவுளாதலால் தர்மத்தை மேற்கொள்ளுதல் என்பது கடவுளின் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தல் ஆகும். மானிடமானது பல்லாயிரம் வருடங்களாக இவைபற்றி நன்கு அறிந்திருந்தும் தர்மத்தைச் செவ்வனே நிலைபெறச் செய்யும் முயற்சியில் வாளாவிருந்து விட்டது எனலாம். விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற பல்துறைகளிலும் ஆச்சரியப்படும் அளவுக்கு முன்னேற்றமடைந்திருந்தும் மனித சமுதாயம் இன்று அமைதியையும் ஆனந்தத்தையும் இழந்து அதல பாதாளத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பது கண்கூடு.

மனிதம் என்பது உண்மையில் பஞ்சபூதங்களின் சேர்க்கையான உடம்பைக் கவசமாகப் பெற்றுள்ள ஆன்மாவையே குறித்து நிற்கின்றது. நிலையான ஆன்மா நிலையற்ற உடலெனும் கவசத்தைப் பெற்று ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு நடிக்கும் பொருட்டு படைக்கப்பட்டிருக்கின்றது. ஆவியாக மாறும் கடல் நீரானது முகில் கூட்டங்களாகி மலை உச்சியில் மழையாகப் பொழிந்து நதிகளின் வழியே மீண்டும் அதன் மூலமாகிய கடலைச் சென்றடைவதைப்போல் இறைவனிடமிருந்து தோற்றம்பெற்ற நாம் மீண்டும் அவனுடன் இரண்டறக் கலப்பதற்கு சந்தர்ப்பமளிக்கும் நோக்கிலேயே எம்மை மண்ணில் அவதரிக்கச் செய்கின்றான். அனைத்து ஜீவராசிகளும் தத்தமது வாழ்வை செவ்வனே முன்னெடுத்துச் செல்வதற்கேதுவாக சகலவித அடிப்படை வசதிகளுடனும் படைத்துள்ள இறைவனின் விந்தையை எவ்வாறு வியந்துரைப்பது? வடதுருவ சமுத்திரத்தில் மேல்மட்ட நீர் உறைந் திருந்தாலும் அப்பிரதேசங்களின் நீர் வாழ் உயிரினங்கட்கேதுவாக அடிமட்ட நீர் என்றும் வெதுவெதுப்பாகத்தான் இருக்கும். பகுத்தறிவு எனும் ஆறாம் அறிவுடன் படைக்கப்பட்ட எமது செயற்பாடுகள் அனைத்தும் பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆத்மா, உடம்பு, மனம் ஆகிய மூன்றும் சேர்ந்ததே மனிதன் ஆகும். மனத்தின் செயற்பாடுகளே மனிதனின் குழப்ப நிலைக்கு முக்கிய காரணியாக விளங்குகின்றது. அவதரித்த நோக்கத்தை மறந்து புலன்களின் இச்சைகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் மனமானது அலைந்தவண்ணமிருக்கின்றது. இருட்டிலிருந்து ஒளி பரவமுடியாததுபோல் நிலையற்ற மனத்தின் வழியில் அலையும் உடம்பின் செயற்பாடுகளும் இலகுவில் அணைந்து விடக்கூடிய மெழுகுவர்த்திச் சுடர் போன்றதாகும். தீவிரதாகமிருப்பின் தர்மத்தைக் கடைப்பிடித்து கடவுளுடன் இரண்டறக் கலப்பது முடியாத காரியமல்ல. அவா எனும் ஞானச்சுடர் எம்முள் உள்ள அகங்காரத்தையும் உலகாயத பற்றுக்களையும் பொசுக்கி நீறாக்கிவிடுகின்றது. ஜனகர் போன்ற பலர் இல்லறத்தில் இருந்தவாறே தமது தார்மீகக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றியிருக்கின்றனர். குளத்தில் சேறு இருந்தாலும் அது மீனில் ஒட்டிக்கொள்வதில்லை. இந்த மாயா உலகத்தில் வித்யை, அவித்யை இரண்டுமுள்ளன. பாலும் தண்ணீரும் கலந்திருந்தாலும் பாலை மாத்திரம் குடிக்கும் அன்னப் பறவைபோல் இருப்பவர்களைத்தான் மகான்கள், பரமகம்சர்கள் என்கின்றோம். இவர்கள் உலகியலில் மூழ்கியிருந்தாலும் அவர்களின் மனம் எப்போதும் ஆன்மாவிலேயே நிலைத்திருக்கும். கிராமப் புறப் பெண்கள் குடத்தில் நீர் எடுத்துச் செல்லும்போது கதை, சிரிப்பு, பாட்டு, நடனம் போன்றவற்றில் ஈடுபட்டாலும் தலையில் உள்ள குடத்தின் மீதான அவர்களின் கவனம் சிறிதளவும் குறைந்து விடுவதில்லை.

நான் யார்? எனது உண்மை நிலை என்ன? என்பவற்றை ஆராயப் பிறந்த நாம் உலகியலில் காணப்படும் நிலையற்ற மாயத் தோற்றங்கள், பகட்டுக் காட்சிகள் என்பவற்றின் பின்னால் அலைந்து புலனின்பங்களில் ஆழ்ந்து விடுகின்றோம். தர்மத்தைப் பற்றிய விழிப்புணர்வு இருந்தும் மனம்போன போக்கில் செயற்பட்டு பலவித இன்னல்கட்காளாகின்றோம். உலகியல் நாட்டமுள்ளவர்கள் திருந்தவும் மாட்டார்கள். திருந்த விரும்புவதுமில்லை. எத்தனை துன்பங்கள் ஆபத்துக்கள் நேரிடினும் இவர்களின் புத்தி செயற்படுவதில்லை. முட்செடியை விரும்பி உண்ணும் ஒட்டகம் போன்றவர்கள் தனது வாயிலிருந்து இரத்தம் வடிகிறதேயென சிறிதும் கவலைப்படுவதில்லை. தற்கால சமுதாயம் முகநூல் வழியாக தங்களைப்பற்றிய விபரங்களை வெளியிடுவதிலும் இன்ரநெற்மூலம் பல்வேறுபட்ட தகவல்களைப் பெறுவதிலும் காலத்தை வீணடிக்கின்றனர். இவ்வாறான திசை திருப்பங்களால் தர்ம நெறிகளை மறந்தும் படைத்த வனைப் பற்றிய எண்ணமுமின்றி அலைகின்றனர். தர்மத்தின் மீதான இவ் அலட்சியப் போக்கு பலகோடி மக்களிடையேயும் பரவியுள்ளதால் உலகெங்கும் இன்று அமைதியற்ற நிலையே காணப்படுகிறது. ஆயிரம் விரிவுரைகள் செய்தாலும் உலகியல் நாட்டமுள்ளவர்களில் அது எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. சாதுவின் சுரைக் குடுக்கை எத் தனையோ புண்ணிய தலங்கட்குச் சென்றாலும் அதன் கசப்புத் தன்மை மாற்றமடை வதில்லையே.

நிலையற்றதும் அசாத்தியமானவையுமான எவற்றையெல்லாம் துறக்க விரும்புகின் றோமோ அவற்றைத் துறப்பதற்குரிய மன வலிமையைத் தந்தருள வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். இந்த வலிமையின் காரணமாகத்தான் முனிவர்கள் புலன்களை வென்றனர். ஆமை தன் அவயவங்களை உள் இழுத்துக்கொண்ட பின் அதைத் துண்டு துண்டாக வெட்டினாலும் அவற்றை வெளியே நீட்டமாட்டாது. எமது சுயநலமற்ற ஒவ்வொரு செயலிலும் கடவுளைக் காணமுடியும். இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்யப்படும்

சேவையானது தர்மத்தின் ஓர் அங்கமாதலால் அது மோட்சத்துக்கு வழிவகுக்கின்றது. குருஷேத்திரத்தில் அர்ச்சுனனைநோக்கிக் கூறப்பட்ட பகவத்கீதை முழு உலகத்துக்கும் எக்காலத்துக்குமேற்றவாறு செய்யப்பட்ட உபதேசமாகும். சற்று ஆழமாக நோக்கில் தங்களினதும் எதிரணியினரதும் படைக்கலங்களைப் பார்த்ததும் குழப்பமடைந்த அர்ச்சுனனின் மனநிலையில் தான் நாம் ஒவ்வொருவரும் இருக்கின்றோம். எம்மால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு காலடியும் ஆத்ம தர்மத்திலிருந்து சிறிதும் வழுவாது எவ்வாறு எடுக்கப்பட வேண்டுமென கீதை விபரமாக விளக்குகின்றது. இன்றும் பல்லாயிரக் கணக்காண மக்கள் கீதை காட்டிய பாதையில் தர்ம நெறிகளைக் கடைப்பிடித்து வாழ வழிவகுக்கின்றது. தற்கால சமுதாயத்துக்கு மிகவும் இன்றியமையாத இவ்வுபதேசங்கள் ஒவ்வொரு மனிதனதும் உயிர் மூச்சாக விளங்க வேண்டும்.

தர்மம் ஆத்ம தர்மம், ஆச்சார தர்மம் என இருவகைப்படும். ஆத்ம தர்மம் என்பது தெய்வீகமானதும் என்றும் மாறாததும் அரசன் முதல் ஆண்டிவரை பாகுபாடற்றுச் செயற்படுவதுமாகும். இது ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டதிட்டங்கள் போன்றது. அனுமதிப்பத்திரமின்றி புகையிரதத்தில் பிரயாணம் செய்வது தண்டனைக்குரிய குற்றமென்பது அனைவர்க்கும் பொருந்தும். இது சம்பந்தமாக அறிவிப்பு எங்கும் காணப்படவில்லையென யாரும் வாதாட முடியாது. சிங்கப்பூர் வீதியில், பொது இடங்களில் எச்சில் துப்புவது தண்டனைக்குரிய குற்றமாயிருப்பினும் மற்ற நாடுகளில் அவ்வாறில்லை. இருந்தும் கண்ட இடங்களில் துப்புவது சுகாதாரச் சீர்கேட்டுக்கு வழிவகுப்பதோடு ஒரு மனிதாபிமானமற்ற செயலுமாகுமென யாவருமறிவர். வேதங்களிலோ சட்ட நூல்களிலோ குறிப்பிடப்படாவிடினும் அவரவர் எல்லைக்குட்பட்ட வகையில் செயற்படும் சுதந்திரம் உண்டென்பதற்காக யாரும் மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபட முடியாது. அச்செயலின் பின் விளைவுகளை ஏதோ ஒரு வித்த்தில் அவரவர் அனுபவித்துத்தான் தீரவேண்டும். பொது இடங்களில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளதால் தமது வீட்டில் சுதந்திரமாகப் புகைப்பவர்கள் இருதய நோயினாலோ நுரையீரல் புற்றுநோயினாலோ பீடிக்கப்படுகின்றனர்.

ஆச்சார தர்மம் என்பது சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு மாறும் தன்மையுடையது. ஆனால் ஆத்ம தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து சிறிதளவும் வழுவாது அமைந்திருக்கும். சில சமயங்களில் ஆற்றப்படவேண்டிய பல செயல்கள் தார்மீகமானவையாக காணப்படினும் அவற்றுள் எதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்க முடியாத தர்மசங்கட நிலைக்குள் தள்ளப்படுகின்றோம். அப்போது எடுக்கப்படும் முடிவானது அறிவின் துணைகொண்டு எடுக்கப்பட்டதா அல்லது மனச்சாட்சிக்கமைவாக எடுக்கப்பட்டதாவென ஆராய்ந்து மனச்சாட்சியின் குரலுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக ஐந்து நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டு கந்தோருக்குச் சென்று கொண்டிருந்த போது பாதையைக் கடக்க முயன்ற ஒரு வயோதிபரை எதிர்த்திசையில் வேகமாக வந்த ஒரு மோட்டார் சைக்கிள் மோதி வீழ்த்திவிட்டுச் சென்றுவிட்டது. தலையிலும் கையிலும் இரத்தம் வழிந்த நிலையில் பாதையின் மையப்பகுதியில் நடக்கவுமியலாது அவ்வயோதிபர் தள்ளாடுகின்றார். கந்தோரிலோ முக்கியமான சில வேலைகள் காலை 10.00 மணிக்கு முன் சமர்ப்பிப்பதாக மேலதிகாரிக்கு உறுதியளித்திருந்தேன். விரைவாகச் செயற்பட்டு வயோதிபரை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல் என்கிறது ஒரு மனம். நான் தான்

மோதிக் காயப்படுத்தியபின் அவ்வயோதிபரைக் கொண்டு வந்தேன் என சந்தேகித்து காவல்துறையில் முறைப்பாடு செய்யவேண்டுமென வைத்திய சாலையில் வற்புறுத்துவார்கள் என்றும், ஏன் இந்த வம்புகளை விலைக்கு வாங்கவேண்டும், காணாதது போல் கந்தோருக்குச் சென்று கடமையைப் பூரணப்படுத்திவிடு என்கிறது இன்னொரு மனம். நீ கல்நெஞ்சம் படைத்தவனா? கருணை என்பதே அற்றுப் போய்விட்டதா? உன்னில் எதுவித தவறுமில்லாத தால் எதுவரினும் அஞ்சாது முகங்கொடுக்கலாம், இரத்தம் வழிந்து கொண்டிருப்பது ஆபத்தானது. விரைவாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல் என்கிறது இன்னொரு மனம். ஆத்மாவின் இயல்பே தூய அன்பும் அளவற்ற கருணையுமாதலால் தர்ம சங்கட நிலையில் எடுக்கப்படும் முடிவானது இவ்வியல்பு சார்ந்ததாகவே அமைய வேண்டும்.

தற்காலத்தில் நடுவீதியில் வெற்றுப் போத்தல்களை உடைத்துவிடுவதும் பழுதடைந்த பாத்திரங்களையும் கழிவுப் பொருட்களையும் பாதையோரமாக வீசிவிடுவதும் சர்வசாதாரண மாகிவிட்டது. இச்செயல்களினால் ஏற்படப் போகும் பாதிப்புகள் எவ்வளவு தூரம் ஆபத்தானவை என்பதை உணராது ஏதோ தத்தமது வீட்டை மாத்திரம் சுத்தமாக வைத்திருந்தால் போதுமானதெனவும் சுயநலப்போக்கே முன்னிற்கின்றது. போலி மருந்துகளின் விற்பனையில் இந்தியாவும் சீனாவும் முன்நிலை வகிப்பது யாவருமறிந்ததே. இவற்றின் தாக்கம் உட் கொள்பவரில் மாத்திரமல்லாது அவர்களின் பரம்பரையையும் பாதிக்கக்கூடும் என்பதை உற்பத்தியாளர்கள் அறியாமலில்லை. பலவித தொழிற்சாலைகளிலும் அடிப்படை சுகாதார வசதிகளெதுவுமற்ற நிலையில் குறைந்த வேதனத்துடன் ஊழியர்களை வேலைக்கமர்த்தி இலாபத்தைப் பெருக்குகின்றனர். ஆயுத உற்பத்தியானது வளர்ச்சியடைந்த நாடுகளில் சட்டரீதியானதாகவும் வறிய நாடுகளில் தடைசெய்யப்பட்டதாகவும் காணப்படுவதால் பெரு மளவு ஆயுதங்கள் கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனையாகின்றன. எந்தத் துறையை நோக்கினும் ஊழியர்களினதும் நுகர்வோரினதும் சேம நலனில் சிறிதளவும் அக்கறையின்றி பணத்தைப் பெருக்குவதில்த்தான் குறியாயிருக்கின்றனர். மனித சமுதாயத்தின் அழிவுக்கு வித்திடும் ஆயுத உற்பத்திக்கு தடைபோடாத நாடுகள் போதைவஸ்துகட்கு தடைவிதித்திருப்பது விந்தையானதே.

ஒரு சமுதாயத்தின் முன்மாதிரியாகத் திகழவேண்டிய கல்வித்துறை உட்பட அனைத் துத் துறைகளிலும் இன்று ஊழல்கள் மலிந்து காணப்படுவது கண்கூடு. உயரதிகாரிகளிலிருந்து சிற்றூழியர்வரை இந்நோய் பரவலாகப் பீடித்திருக்கின்றது. நலிவடைந்தோர்க்கென ஒதுக்கப்படும் தொகையின் ஒரு சிறிய பகுதியே அவர்களைச் சென்றடைகின்றது. எல்லா மதங்களினதும் போதனைகளின் சாராம்சம் அன்பு, கருணை, காருண்யமாகக் காணப்படினும் வசதிபடைத்தவர்கள் கீழ்மட்ட மக்களின் நலனில் சிறிதளவும் கரிசனையின்றி மேன்மேலும் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் பெருச்சாளிகளாகவே காணப்படுகின்றனர். இன்றைய இளம் சமுதாயம் இவற்றை அறவே வெறுத்தாலும் தடுத்துவிட முடியாத அளவுக்கு கை ஓங்கிவிட்டதென கையை விரிகின்றனர். ஆங்காங்கே சட்டத்தின் பிடிக்குள் சிக்கிக் கொள்பவர்களும் பணபலத்தாலும் அரசியல் செல்வாக்காலும் அதிலிருந்து மீண்டு விடுகின்றனர். இதனால் மனிதநேயமற்ற நியாயாதிக்கமற்ற செயல்களும் சட்ட அங்கீகாரம் பெற்றவைபோல் தோற்றமளிக்கின்றன. ஆனால் மனச்சாட்சியின் குரலுக்குச் செவி சாய்க்காது அதர்ம வாழ்க்கை மேற்கொள்பவர்கள் உண்மையான அமைதியையோ இறைவனின் ஆசியையோ

ஒருபோதும் பெறமாட்டார்கள் என்பது வெள்ளிடைமலை.

தார்மீகமான செயல்களை ஆற்ற எடுக்கப்படும் முடிவானது எப்போதும் மனச்சாட்சிக்கிசைவானதாக அமையும். மற்றும் செயல்களை ஆற்ற எடுக்கும் முடிவானது அறிவின் துணைகொண்டு (தலையால்) எடுக்கப்பட்டதாய் அமையும். குறிப்பிட்ட செயலானது,

1. சுயநலம் கருதியதா அல்லது பொதுநலம் சார்ந்ததா?
2. ஏதாவதொரு வகையில் பிறருக்கோ அல்லது பிற உயிர்கட்கோ பாதிப்பை ஏற்படுத்துமா?
3. எமக்கு நன்மை பயக்காவிடினும் பிறருக்கு பயனுள்ளதாக அமையுமா?
4. அன்பின் வெளிப்பாடாக அமைந்ததா அல்லது தற்புகழ்ச்சிக்காகச் செய்யப்பட்டதா?
5. பிறரை மகிழ்விப்பதோடல்லாமல் நிலையான ஆனந்தத்தை அளிக்கவல்லதா?

போன்ற கேள்விகட்கு விடைபெறுவதன்மூலம் அச்செயலானது தார்மீகமானதா இல்லையா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம். எமது சூழலில் இன்று நடைபெறும் அசிங்கங்களினால் எங்கேயோ யாரோ பாதிக்கப்பட்டுள்ளனர், எமக்கில்லைத்தானே எனத் திருப்திப் படாது பொறுப்புணர்வுள்ள பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தமது குழந்தைகட்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, உலகநீதி போன்ற நீதிநூல்களில் உள்ள பாடல்களின் உட்பொருளை நாளுக்கொன்று வீதமாக விளக்கிக் கூறலாம். வெள்ளை உள்ளங்களில் இவ் அறநெறிகளைப் பதிய வைப்பது மிகவும் இலகுவானது. இவ்வாறு செய்வதன்மூலம் 5-10 வருடங்களின் பின்பாவது அதர்மச் செயற்பாடுகளில் பாரிய வீழ்ச்சி ஏற்படுமென்பது அடியேனின் நம்பிக்கை. வயதுவந்தவர்கட்கு வழங்கப்படும் தண்டனைகள் அவர்களை ஒருபோதும் திருத்திவிடாது. மனமாற்றம் ஒன்றே வழி. இது எவ்வளவு தூரம் சாத்தியமாகுமென்பது கேள்விக்குறியே?

## கிழவுருவாகி வந்த வடிவேலவா

தேடும் அடியார்கள் பங்கின் தேற அருளே புரிந்து
தேவி இரு வருடனே வரும் வேலா
ஆடுமயில் ஆடிநிற்க ஆரோஹரா என்று கொண்டுன்
பாச உறவான பக்தர் உனை நாட
வேடுவ பெண் மாது பொன் மேனியே விரும்பியன்பாய்
நாடியவள் தாகம் கொண்டு உடன் சேர
நடுநடுங்கியே வந்து குடுகுடு கிழவுருவாய் நடித்த
தொண்டை மானாறுறையும் முருகப் பெருமானே

-சின்னப்பு தனபாலசிங்கம்-

# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ!

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

முழு உலகத்திற்கும் அருள்புரிமுனிவர் நீர். இழிகுலமாகிய வேட்டுவப் பெண்ணைக் காதல் கொள்வது தகாது எனப்பலவாறு வள்ளி நாயகியார் கூறிநிற்கும்போது வேடுவராசன் அங்கே வருகிறான். முதல்வராகிய தந்தலைவருக்கு யாது நிகழுமோ என அச்சங்கொண்ட வள்ளிநாயகியார் மனம் நடுநடுங்கி, கடவுளும் குருவுமாகிய தம் தலைவரது திருமுகம் நோக்கி, வேடுவர்கள் கொடியவர்கள். தேவரீர் இவ்விடம் நில்லாது விரைவில் அகன்றருளும் எனப் பிரார்த்திக்கின்றார். குமரேசர் தேவியர் தம்மீது வைத்த அன்பிற்காக மனம் மகிழ்கிறார். தவவிருத்தராக ஒரு சிவனடியார் வேடம்பூண்டு நம்பிராசன் எதிரே போய்நின்று பரிவோடு திருநீறுதனை நல்கி, "அரசனே, உனக்கு வலிமை ஓங்குக; வெற்றி உயர்க; வளம் பெருகுக" என்று வாழ்த்துக் கூறினார். விபூதியை அன்போடு அணிந்த நம்பி அக்குரவரது பாத மலர்களை கைகளினால் தொட்டு வணங்கி தேவரீர் இங்கு வந்த நீங்கள் விரும்பியதைக் கூறுங்கள் எனக் கேட்கின்றான். "என்னுடைய மூப்பு ஒழியவும், மனமயக்கம் நீங்கவும் இங்கே நும்வரைக்குமரி எய்தி இனிதாட விரும்பி மெலிந்து விரைவாக வருகின்றேன்" என்றார் குமரவேள். உம் வருகை நன்றேயாம், நீர் கூறிய குமரி தீர்த்தத்திலே தினந்தோறும் மூழ்கித் தனியனாய் தினைப்புனத்தில் காவல் செய்யும் நம் புதல்விக்குத் துணையாக இனிதே இங்கேயே இருந்தருள்க என வேண்ட, மன்ன, உன் கருத்து அழகியதாம் என்றருளிச் செய்தார். பின்பு நம்பிராசன் மகளுக்கு உணவு வகைகளைக் கொடுத்துவிட்டுத் திரும்பிச் சென்றான்.

அவர்கள் போனதும் எம்பிரான் வள்ளியை நோக்கி, பசி நோய் வாட்டுகிறது என, அவர் தேனொடு கனியும், தினைமாவும் செங்கையில் கொடுப்ப, அவற்றைத் திருவமுது செய்து, வெய்யிலிலும் மிகுந்தது; தண்ணீர்த்தாகம் பெரிதும் உடையேன் என்றார் விருத்தர். ஐம்புல வேட்டுவச் சேட்டை அடங்கியது. இனிச் சிவபோகத்தை நுகர்ந்த தன்றித் தணியாத சிவப்பசியாகிய சிவாக்கினி எழுந்தது. அது நிவேதனங்களோடு நிவேதனஞ் செய்வாரையும் நுகர்ந்துட்கொள்வதாமென்க. இப்பசி தாகம் பரிபக்குவ ஆத்ம போதத்தை நுகரும் பசிதாகம் என்க.

எந்தாய், இங்குள்ள மலைக்கு அப்பால் ஏழுமலைகள் கடந்தபின் ஒரு சுனை உளது. அங்கே போய்த் தண்ணீர் பருகிவாரும் என்கின்றார் வள்ளிநாயகியார். பெண்ணே, யானோ முதியவன் நாவரட்சியுற்றது. விரைவாகவந்து நீயே அந்த சுனைநீரைக் காட்டுதி என்றார் ஆறுமுகம் கரந்த கள்வன். சுவாமி, வருக என அழைத்துக்கொண்டு முன்னர் போய், மணங்கமழுகின்ற சுனைக்கண் அமுதமாகிய நீரைக் காட்ட, வெய்யிலினால் வெதும்பினவர்போல அந்நீரைப் பருகுகிறார் கிழவர். பேசத் தொடங்குகிறார்.

"ஆகத்தை வருத்துகின்ற அரும்பசி அவித்தாய் தெண்ணீர்த்
தாகத்தை அவித்தாய் இன்னும் தவிர்ந்தில தளர்ச்சி மன்னோ
மேகத்தை அனைய கூந்தல் மெல்லியல் வினையேன் கொண்ட
மோகத்தைத் தணித்தியாயின் முடிந்ததென் குறையதென்றான்"

வழிகாட்டுவானுக்கு வழிகாட்டுவாராய் முன்போயினார். பந்த நிலையில் ஆன்மாவைப் பின்னிற்பன் என்க. "தாகத்தைத் தணித்தது போல் மோகத்தையும் தணிக்க வேண்டும்" என்கிறார் முருகப்பெருமான். வள்ளிநாயகியார் சிரித்து, நெட்டுயிர்த்து, வெகுண்டு நடுநடுங்கி நரைத்தலையுடையீர், ஐயோ உமக்கு நல்லறிவு சற்றும் இல்லை. இழிந்த குலத்தேனாகிய என்னைக் காதலித்து பித்துப்பிடித்தவர்போல் பிதற்றுகின்றீர். குற்றமற்ற பெரிய தவத்தினை யுடையவரே, தினைப்புனங் காப்பேனை, மெய் தழுவக் கருதி கூறத்தகாதனவற்றைக் கூறிக் கும்பிட்டு நிற்றல் முறையன்று. இவ்வேடர் குலத்துக்குப் பெரும் பழியைத் தந்தீர். நான் தினைப்புனத்திற்குச் செல்கிறேன். நீரும் நடந்தருளும் எனக்கூறி வள்ளிநாயகியார் முன்னே சென்றார். வள்ளிநாயகியார் தமக்கு முன் போகின்ற அபக்குவ தசையைக் கண்டு எமது பரமகுருவாகிய சுப்பிரமணியப் பெருமான், இனி என்ன செய்வதென எண்ணி தமக்கு ஒப்பில் லாதிருக்கின்ற யானை முகத்து எந்தைதனை, மூலப்பொருளாயுள்ளவரே, முன்னே வருவாய் என்று ஓங்கார முதல்வராகிய விநாயகரைத் தியானஞ் செய்தார்.

பொன்னே அனையாள் முன்போகும் திறல் நோக்கி
என்னே இனிச் செய்வதென்றிரங்கி எம்பெருமான்
தன்னேரிலா தமரும் தந்தி முகத்தெந்தை தனை
முன்னே வருவாய் முதல்வா என நினைந்தான்.

வள்ளிநாயகியாரை வேகங் கெடுத்தாண்டருள வேண்டிய சமயத்தில் அறுமாமுகனின் வேண்டுதலினிமித்தம், வள்ளிநாயகியாரின் போக்குக்கு இரக்கங்கொண்டு, அவர் எதிரே யானை முகக்கடவுளாகிய ஒப்பற்றமலை போன்றதொரு யானை, மறிகடல் போல் முழங்கி வந்தருளியது. பக்குவ தசை அணைய, உய்ய உள்ளத்துள் ஓங்காரமாகும் மெய் உதய மாயிற்று.

அவ்வேளையில் வள்ளி அச்சமோடு திரும்பி வந்து, தமது தவவிசேடங் காரணமாக, பொய்வேடங் கொண்டு நின்ற குருபரரை அணுகி என் குரவரே, ஏழையேனுக்கிரங்கி எழுந்தருளிய இந்த ஞான வேழத்தினின்றும் காத்தருள்க. தேவரீர் உபதேசித்தவாறு இனியான் செய்வேன் என்று கிழவர் பின் பக்கத்திற் சென்று அவரைக் கட்டித் தழுவிக்கொள்கின்றார்.

"உற்கை தரும் பொற்கையுடையவர் போலுண்மைப்பின்
நிற்க அருளார் நிலை"

எனும் திருவருட்பயனுக்கு இலக்கியமாயினார் வள்ளி நாயகியார். அத்தன்மைத்தாகிய ஒப்பற்ற பரிபக்குவ சமயத்தில் அறுமாமுகக் கடவுள் முற்பக்கத்தில் முதிய பிரணவமாகிய களிற்றின் கொம்பர் பொருந்தி ஒருமையுற, பிற்பக்கத்தில் வள்ளிநாயகியாராகிய பிடியின் தனங்களாகிய மருப்புகள் பொருந்தி ஊன்ற, இவற்றுக்கு மத்தியில் வலிய வச்சிரத்தாலான தூண்போல் நின்றருளினார். சலனமின்றி இருந்தபடி இருந்தார். ஓங்காரமும் சுப்பிரமணிய பெருமானும் வள்ளி நாயகியும் ஒன்றாய் ஒருமையுறும் நிலை காட்டப்பட்டது.

கந்த முருகன், கடவுட்களிறு தனை வந்தனைகள் செய்து துதித்து நீ வந்திடலால் புந்தி மயல் தீர்ந்தேன். வள்ளி நாயகியும் தானே வந்து சேர்ந்தனள். எந்தையாகிய பெருமானே, மீண்டு உரிய தானத்திற்கு எழுந்தருள்க எனப் பிரார்த்தித்தார். அவளை ஆட்கொள்ளும் பித்தந் தீர்ந்தது என்று பிரார்த்தனை செய்ய யானைமுகக் கடவுள் நன்று என்று சென்றருள, முருகவேள், கன்னியை அழைத்துக்கொண்டு, ஒரு வாசனை பொருந்திய பூஞ்சோலையில் இரண்டறக் கலந்து, நிறைந்த கிருபை புரிந்து, தமது பழமையாகிய திருவுருவத்தைக் காட்டியருளினார். கலத்தலாவது இருமையின் ஒருமையாகிய அத்வைத நிலையுறுதலாம்.

முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்
கொன்னார் வைவேலும் குலிசமும் ஏனைப்படையும்
பொன்னார் மணிமயிலும் ஆகப் புனக்கு குறவர்
மின்னாள் கண் காண வெளி நின்றனன் விறலோன்

வள்ளிநாயகியார் திருக்கண்கள் தரிசிக்கும்படி சுப்பிரமணியப் பெருமான் காட்சி அளித்தருளினார்.

"அவனருளே கண்ணாகக் காணினல்லாற் காண்பாரார்" தரிசித்த மாத்திரத்தே பரவசமுற்ற வள்ளிநாயகியாருக்கு இடையிடையே தம்முணர்வு தோன்றுந்தோறும் விம்மிதமும் ஒன்றோடொன்று மாறுபடும் மெய்ப்பாடுகளும் தோன்றுவனவாயின. வேற்படையைத் தாங்கிய பிரபுவே, இந்தத் திருப் பெருங்கோலத்தை முன்னமே காட்டியருளி என்னைக் கலந்து கொள்ளாமல் இத்துணை காலமும் வீணே கழித்தீர். பரிபக்குவமற்ற பாவியேன் செய்த குற்றத்தினாலேயாம். இன்னோரன்ன தவக்குறைவுகளனைத்தையும் இக்கணமே போக்கி அடியேனை ஆட்கொண்டருளும் என்று பிரார்த்தித்தார்.

எம்பெருமான்; நீ முன்னே பூவுலகையாண்ட திருமாலின் புதல்வி, நம்மை மணம் செய்யும்படி தவஞ் செய்தாய். அந்த தவ விசேடத்தால் இப்பிறப்பில் உன்னை அணைந்தோம் எனக்கூறி வள்ளிநாயகியாருக்கு அருள்புரிந்து நீ தினைப்புனத்திற்குச் செல்க. யாமும் அங்கே வருவோம் என உரைக்க, தேவியும் திருவடிகளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தினைப்புனத்திற்குச் சென்றருளினார்.

ஏறுமயில் ஏறிவிளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறு முகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

(தொடரும்...

# தேரேறி வரும் செல்வச்சந்நிதிக் கந்தனே தேசம் வாழ வழிகாட்டு

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல வடபால், செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. அன்னதானக் கந்தனாக தொண்டைமானாறு ஆற்றங்கரையினிலே அருளாட்சி செய்துவருகின்ற சந்நிதிக் கந்தனின் மன்மத வருஷத்திற்கான மகோற்சவங்கள் கொடியேற்றத்திருவிழா 2015.08.14 வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக ஆரம்பமாகி மகோற்சவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இன்றைய தினம் அன்னதானக் கந்தனின் தேர்த்திருவிழா ஆகும்.

தேர்த்திருவிழாவிலே ஈழத்தின் பலபாகங்களில் இருந்தும், வேற்று நாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் செல்வச்சந்நிதியில் கூடுகின்ற கண்கொள்ளாக் காட்சியினைக் காணமுடிகிறது.

கதிர்காமத்திலே காவடிக் கந்தனாகவும், மாவிட்டபுரத்திலே அபிஷேகக் கந்தனாகவும், நல்லூரிலே அலங்காரக் கந்தனாகவும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற முருகப்பெருமான் செல்வச் சந்நிதியில் அன்னதானக் கந்தனாக, ஆற்றங்கரையானாக வீற்றிருந்து, எமக்கெல்லாம் வாழ்வளித்துக்கொண்டு இருக்கின்றான். செல்வச்சந்நிதி பழந்தமிழர் பண்பாட்டின் சின்னமாக அமைந்துள்ளது. பண்டைத்தமிழ் இலக்கியங்களாகிய சங்கநூற் செய்யுள்களைப் படிப்பவர்கள் அக்கால தமிழ் மக்களுடைய பூர்வீக வாழ்வு வரலாற்றைக் கண்டு கொள்வர். வட இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டைமானாறு எனும் புராதன கிராமம் உண்டு. கருணாகரத் தொண்டைமான் எனும் சிற்றரசனுடன் தொடர்புபூண்ட கிராமம். இப்பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. தொண்டைமான் ஆற்றங்கரையில் சுழிமுகத்திற்கு அண்மையில் செல்வச்சந்நிதி முருகன் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலுக்கு சின்னக்கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை எனும் பெயர்கள் உண்டு. கோயிலின் சூழலின் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருதமரக்காடும், பாக்குநீரிணைக் கடலும், மருங்கே காணும் வயலும் இடையே கிழக்கே கிடக்கும் வல்லைவெளியும் திணை ஒழுக்கம் காட்டும்.

செல்வச்சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடாத்துகின்றனர். இவ்வாலயத்தினில் இருக்கின்ற அற்புதச் சிறப்புக்களில் ஒன்று கோயிலின் உள்வீதியில் மேற்குப் புறமாக புராதனமான பூவரசம் மரமொன்றைக் காணலாம். இது மிகவும் பழைய மரம் என்பதற்கு ஐயமில்லை. இது ஒரு பெரிய தவ சிரேஷ்டர் சமாதியான இடத்தின்மீது நிழல் தரும் மர மாக காட்சி அளிக்கின்றன. சில சமயங்களில் இதன் இலைகள் யாவும் உதிர்ந்து மரமே பட்டுவிட்டதுபோல இருக்கும். ஆனால் எதிர்பாராத விதமாக அழகிய குடைவிரித்து இருப் பதைப்போல சடைத்து வளர்ந்து பச்சிலைகளைத் தள்ளி சமாதிக்கு நிழல்தரும் விருட்சமாக காட்சியளிக்கும். இ∴து ஒரு அற்புதமான விருட்சமென்று இன்றும் பேணப்பட்டு வருகின்றது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் நடக்கும் வழிபாட்டிற்கும் கதிர்காமத்தில் நடக்கும் வழிபாட்டிற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரு ஆலயங்களிலும் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. பூசையில் மந்திரங்கள் இடம்பெறுவது இல்லை. வேறு எந்தக் கோயில்களிலும் காணப்படாத சடங்குமுறையே சந்நிதியில் காணப்படுகின்றது.

கதிர்காமத்து கொடியேற்ற தினத்தில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர் கதிர்காமத் தீர்த்தத் திருவிழா அன்று சந்நிதி திரும்பி வருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒருநாள் இரவு சுவாமி பூசாரியார் கதிர்காமரை நித்திரையில் இருந்து எழுப்பி "அப்பா, நான் பாதயாத்திரையாக வந்தமையால் பசிதாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்குக் கொடு என்று கேட்டாராம்." கதிர்காமர் இவ்வேளை "நான் தங்களுக்கு அமுது படைக்க எங்கு போவேன் என்று மனம் நொந்தார்". "முருகன் உன்னிடம் இருக்கும் சிறிதளவான பயற்றைத் துவைத்து இளநீரும் தா என்று கேட்டு வாங்கி, திருவமுது செய்தார். இன்றும் அவ்விதம் பயற்றம் உருண்டையும், இளநீரும் கதிர்காமத்தில் இருந்து திரும்பி வருகின்ற பூசைக்குப் படையல் செய்து வருவது நடைமுறையில் உள்ளது. யாழ்ப்பாணத்திலே ஏனைய விரதங்களை அனுட்டிக்கின்ற காலத்திலே உபவாசனை நாளை முடிக்கப் பயற்றம் துவையல் உருண்டையும், இளநீரும் உண்பதே வழக்கமாக உள்ளது.

செல்வச்சந்நிதி சூழலிலே காணப்பட்ட மடங்கள் சில சிதைந்த நிலையில் உள்ளன. ஆற்றங்கரையிலே இன்று எல்லோருக்கும் பொதுவாக விளங்கும் மடமாக சந்நிதியான் ஆச்சிரமம் விளங்குகிறது. சந்நிதியிலே பூசைநேரத்திலே பறை ஒலிக்கப்படும். அப்பறை ஒலி அன்பர்களைப் பரவசப்படுத்தும். நிறைந்த கற்பூர ஒளியிலும் செறிந்த புகைமண்டல நடுவிலே மின்னல்போல ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப்படாதார் மனிதர்களேயன்று.

சந்நிதித் தேர்த்திருவிழாவின்போது,

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்  
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்  
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்  
கைதான் நெகிழவிடேன் உடையா யென்னைக் கண்டுகொள்ளே"

எனும் திருச்சதகச் செய்யுளுக்கு இணங்க, உடலெங்கும் மெய்சிலிர்த்து நடுநடுங்கி, கைகளை சிரமேற் குவித்து வைத்து கண்களில் நின்று கண்ணீர் வழிய, மனமுருகி வாய் முருகா, முருகா என்று இயம்ப நின்று அன்பர்கள் வணங்கும் காட்சி அற்புத நிலையை தோற்றுவிக்கும்.


இத்தகு வரலாற்றுச் சிறப்புக்களோடு, நல்லருள் பாலிக்கும் சந்நிதிக் கந்தன் அழகிய சித்திரத் தேரேறி வருகின்ற காட்சி வடபுலத்தையே அணி செய்கின்றது. சந்நிதிக் கந்தனின் நேர்த்திகளை நிறைவேற்றும்பொருட்டு, கந்தனின் வீதியில் பாற்காவடி, சந்தனக் காவடி, பன்னீர்க் காவடி, புஷ்பக் காவடி, ஆட்டக்காவடி, பாட்டுக்காவடி, செடிற்காவடி, முள்ளுமிதித்தடிக் காவடி, பறவைக்காவடி, அந்தரக் காவடி, பிள்ளைக் காவடி, பிரதட்டைக் காவடி ஆகியன தேரோட்டத்தை அணி செய்கின்றன. எல்லாம் வல்ல சந்நிதிக் கந்தன் நாட்டிலே நிரந்தர அமைதியைத் தந்து, மண்ணில் எல்லோரும் நல்லவண்ணம் வாழ வழிகாட்டவேண்டும் என நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 19. தனிப்பெரும் ரமணன்

(தொடர்ச்சி...

பகவானுக்கு முதன்முதலில் தொண்டு செய்ய வந்து சேர்ந்த உத்தண்டி நயினார், வந்தவாசியருகில் திருமணி கிராமத்தைச் சேர்ந்தவர். உயரமாக, கட்டுமஸ்தான உடல்வாகுடன் இருந்தார். தன்னுடைய இரட்டை மாட்டு வண்டியில் பிரயாணிகளையும், சாமான்களையும் ஏற்றிக்கொண்டு ஊருக்கு ஊர் சென்று ஜீவனம் நடத்தி வந்தார். அவருக்குத் தமிழ் வேதாந்த நூல்களில் நல்ல பரிச்சயம் உண்டு. பக்தி ஆசார ஒழுக்கத்துடன், ஆன்மீக உயர்வில் நாட்டம் வைத்திருந்தார். வண்டி சவாரி இல்லாத நேரங்களிலெல்லாம் கோவிலுக்குச் சென்று அந்தத் தெய்வீகச் சூழலில் மகிழ்வடைவது அவர் வழக்கம்.



1896ஆம் ஆண்டு கார்த்திகை தீபத்தன்று திருவண்ணா மலையில் அருணாசலேசுவரர் கோயிலின் தென் கோபுரத்தருகில் இலுப்பை மரத்தடியில் ஒரு இளந்துறவியை உத்தண்டி நயினார் காண நேர்ந்தது. ஒளி மிகுந்த அந்த பாலயோகி தேக ஸ்மரணையின்றி சமாதியில் ஆழ்ந்திருந்தார். தான் தேடி ஏங்கித் தவமிருந்த சாந்தி, இந்த உத்தம ஞானியிடம் கிடைக்குமென்று நம்பி அவருக்குச் சேவை செய்ய விரும்பினார். ஆனால் செய்வதற்கு அதிகம் ஒன்றும் இல்லை. எனினும் மணிக்கணக்கில் இளம் சாதுவின் அருகிலேயே தங்கி, அவரைப் பார்த்துக் கொள்வதிலும் சிலைபோல் அமர்ந்திருந்த இளைஞனை யாத்திரிகர்கள் கூட்டத்தில் யாரும் தொந்தரவு செய்யாமல் கண்காணிப்பதிலும், வேடிக்கை எனக்கருதி ஊறு விளைவிக்கும் சிறுவர்களை விரட்டுவதிலும் கவனமாக இருந்து, பாலயோகியைப் பாதுகாத்தார். கிடைத்த ஓய்வு நேரங்களை ஞான வாசிஷ்டம், கைவல்ய நவநீதம் முதலிய நூல்களைப் படிப்பதிலும், பாலகுருவிடம் உபதேசம் பெறும் நாள் எந்நாளோ என்று பேராவலுடன் எதிர்பார்ப்பதிலுமாக காலத்தைக் கழித்தார். ஆனால் சுவாமி பேசவில்லை. இவருக்கும் அவருடைய ஆனந்த மௌனத்தில் குறுக்கிடத் துணிவிருக்கவில்லை. இந்தக் காலகட்டத்தில் உத்தண்டி நயினார் தினசரி காலை கிரி பிரதக்ஷிணம் செய்யப் போவார். அவரிடம் குளிக்கவும், சமைக்கவும் சேர்த்து ஒரு பானை இருந்தது. செங்கல்லை அடுக்கி, குச்சிகளால் தீ மூட்டி சாதம் வடிப்பார். சில பைசாக்களுக்கு ஒரு பெரிய துண்டு தேங் காய் வாங்கி, உப்பு மிளகு சேர்த்து நசுக்கிய சட்னியுடன் தன் 'போஜனத்தை' முடித்துக் கொள்வார்.

1898 டிசம்பர் மாதவாக்கில் குன்னக்குடி மடத்தைச் சேர்ந்த சாத்வீகியான அண்ணாமலைத் தம்பிரான் திருவண்ணாமலை வந்தார். குன்னக்குடியில் இன்று இருக்கும் மடத்தை திருவண்ணாமலையில் முதன்முதலாக ஸ்தாபித்த குரு தெய்வசிகாமணி

தேசிகருடைய சமாதிக்குப் பூஜை செய்வது அவருடைய வழக்கம். புறப்பகுதியான கீழ்நாத்தூரில், அந்தக் கல்லறைக்குமேல், குருமூர்த்தம் என்றழைக்கப்படும், சிவலிங்கத்துடன் கூடிய சிறு கட்டடம் இருக்கிறது. அண்ணாமலைத் தம்பிரான் ஊரில் தானம் கேட்டுப் பெற்று, குருமூர்த்தத்தில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்தபின் பூஜை செய்வார். அவர் அருணாசலேசுவரர் கோவிலுக்குத் தரிசனத்திற்குப் போனபோது அங்கு இளம் துறவியையும், அவருக்குத் தொண்டு செய்யும், பெரிய உருவம் கொண்ட நயினாரையும் பார்க்க நேர்ந்தது.

கார்த்திகை தீப விழாக் கூட்டத்தின் நெரிசலுக்கிடையில் பெரிய கோயிலில் இருப்பதைவிட குருமூர்த்தத்தில் பாலயோகிக்கு அதிக அமைதி கிடைக்குமே என்று தம்பிரானுக்குத் தோன்றவே, உத்தண்டி நயினாரிடம் பிரஸ்தாபிப்பதற்காக அவரை அணுகினார். அப்பொழுது தான் அவர் சிஷ்யரோ, தொண்டரோ அல்லவென்றும், சொல்லப் போனால் சுவாமியிடம் இதுவரை ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை என்றும் அறிந்து ஆச்சர்யமுற்றார். ஒருநாள் மாலை இருவரும் கலந்தாலோசித்து, துணிவை வரவழைத்துக்கொண்டு ஸ்வாமியிடம் மிகப் பணிவன்புடன் தங்கள் கருத்தை வெளியிட்டனர். பிற்காலத்தில் பகவான் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகையில், "தம்பிரானும், நயினாரும் என்னைத் தூக்குவதுபோல் கைகளை நீட்டியவாறு வருவதைப் பார்த்துவிட்டு நானும் என் கைகளைத் தூக்கி, கால்களை எழுந்திருக்க முயல்வதுபோல் அசைக்கவே, அதைப் பார்த்த இருவரும் அதையே சம்மதமாகக் கருதி, என்னைத் தூக்கி நிறக வைத்து, குருமூர்த்தத்திற்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள்! என்று தெரிவித்தது.

உத்தண்டி நயினார் ஞானவாசிஷ்டத்தையும், கைவல்ய நவநீதத்தையும் வாசிப்பதைக் கேட்டு, முதன்முதலாக பகவான், தன் பிரம்மஞான நிலையைத்தான் வேதாந்த நூல்களும் விளக்கி விவரித்து உறுதி செய்கின்றன என்று உணர்ந்திருக்க வேண்டும். அனைவரும் படித்தறிந்தபின் அடைய முயல்வதை, தான் அடைந்தபின் படித்தறிவதையும் உணர்ந்தார். பிற்காலத்தில் இவ்வேதாந்த நூல்களிலிருந்து சரளமாக மேற்கோள் காட்டுவதுடன், அடியார்கள் இவற்றை ஒப்புவிப்பதை ஊக்கியதுமுண்டு. கைவல்யத்தின் மூலநூலின் 288 பாடல்களின் தலைப்புக்களை 71 வரிகளில் பகவான் எழுதியது குறிப்பிடத்தக்கது. செய்யுள்களை மனப்பாடம் செய்து, புத்தகத்தைப் பார்க்காமல் ஒப்புவிக்க அவ்வரிகள் வசதியாக இருந்தன.

பகவான் குருமூர்த்தத்தை அடைந்து இரண்டு மாதங்களில் உத்தண்டி நயினார் அதைவிட்டுப் போய்விட்டார். பின்னர், தன் உடமைகளை எல்லாம் தானம் செய்துவிட்டு, 1904இல் விருபாக்ஷ குகைக்கு வந்தது தெரிந்ததே. (மேலும் சில முறைகள் வந்திருக்கலாம்) அச்சமயம் பகவானுக்கு குருதக்ஷிணையாக ரூ. 100 அளிக்க முயன்றார். பகவான் அதை ஏற்காததால், தொண்டரிடம் கொடுத்து ஏதாவது நற்பணிக்கு உபயோகிக்கும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார். விவேக சூடாமணியின் தமிழ் மொழிபெயர்ப்பை பகவான் தமிழ் நடையில் பூர்த்தி செய்ததும், அதை அச்சிட அந்தப் பணம் உபயோகிக்கப்பட்டது. அதற்குப் பிறகும் நயினார் ஒன்றிரண்டு தடவை பகவானைத் தரிசிக்க வந்தாற் போலிருக்கிறது. 1916 வாக்கில் அவர் காலமானார்.

* * * * * * *

சேஷாத்ரி சாஸ்திரி ஆச்ரம வேத பாடசாலையில் பயின்றவர். பகவானும் மற்றவர்களும் அந்தக் குறும்புக்காரப் பையனை சேஷாத்ரி என்று செல்லமாகக் கூப்பிடுவார்கள். அவன்தான்

டைனிங் ஹாலில் பகவானுக்குப் பரிமாறுவது வழக்கம். தற்சமயம் சென்னையில் வசிக்கும் சேஷாத்ரி சாஸ்திரிகள் பின்வரும் இரண்டு தகவல்களைத் தெரிவித்தார்.

ஒரு சமயம் பகலில் பகவானுக்கு மோர் பரிமாறியபின், பாத்திரம் காலியாகி விட்டது. ஒருநாளும் எதையும் இரண்டாவது தரம் கேட்காத பகவான் அன்று இன்னும் கொஞ்சம் மோர் கொண்டு வருகிறாயா என்று கேட்டது. நான் சமையலறைக்குப் போய் மேலும் கொஞ்சம் மோர் கொண்டு வந்து வார்த்தேன். அதை ருசி பார்த்த பகவான், நீ முதலில் வார்த்த மோருக்கும் இதற்கும் வித்தியாசமிருக்கிறது போலிருக்கிறதே, என்ன காரணம்? என்று கேட்டது. எனக்கும் காரணம் தெரியாததால் சமையலறைக்குச் சென்று சமையற்காரர்களைக் கேட்டேன். இரண்டாவது மோர் வேலைக்காரர்களுக்காக வைத்திருந்தது என்றார்கள். எல்லோருக்கும் ஏன் ஒரே மாதிரி வழங்கவில்லை? என்று பகவான் கேட்டது. மறுநாளிலிருந்து எல்லோருக்கும் ஒரே மாதிரி மோர் கிடைத்தது. பண்டிதா: சமதர்சின: (ஞானிகள் சமநோக்குடையவர்) சொன்னது கிருஷ்ணன் துவாபரயுகத்தில்; செய்து காட்டியது ரமணன் கலியுகத்தில். இரண்டாவது முறை மோர் கேட்டதன் ரகசியம் இதுதான் போலும்.

சேஷாத்ரி மேலும் தொடர்ந்தார்:

அது ரேஷன் காலம். எல்லோருக்கும் அரிசி சாதத்திற்குப் பதில் கோதுமை சாதம் வழங்கப்பட்டது. ஒருநாள், பகவானுக்கு கோதுமை சாதம் ஒத்துக் கொள்ளாது என்று யாரோ சொன்னதன் பேரில், அதற்கு மாத்திரம் இரவில் அரிசி சாதம் இலையில் வைக்கப் பட்டது. ஹாலில் இருந்த சின்ன ஸ்வாமியிடம் ஏன் எனக்கு மாத்திரம் அரிசி சாதமும், மற்றவர்களுக்குக் கோதுமை சாதம் என்று கேட்டதற்கு அவர், கோதுமை பகவானது ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்றார். உடனே பகவான் உறுதியாக ஓகோ! நீ என்ன டாக்டரா? மற்றவர்களுக்கு எதைப் பரிமாறுகிறார்களோ, அதையே எனக்கும் தரவேண்டும். வித்தியாசம் ஒன்றும் காண்பிக்காதே என்று கண்டித்தது.

(தொடரும்...


## காப்பாயோ கந்தா

ஆற்றங்கரை பூவரசில் அமர்ந்தருளும் பெருமானே
நாற்றம்நிறை மலர்மாலை நயந்து சூட்டி மகிழ்ந்திடுவர்
சீற்றங் கொண்ட சூரப்படைதனை சிறப்பாக அழித்து தேவரைக் காத்தாய்
ஏற்றங்கான ஏழைகளை ஏறெடுத்துப் பார்க்காயோ
மாற்றம் காண மக்கள் தினம் கதிர்காமரைப்போல் மன்றாடுகிறார்
தேற்றம் தந்து தினம் வாடும் திசைதெரியா நம்மவரை
கூற்றம் வருமுன்னே கூட்டிவாழ குதித்தோடி வாராய்

காற்றும் எமை அரவணைக்கும் கருணைக்கடலே காப்பாயோ கந்தா!

-செல்லையா வல்லிபுரம்-

செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல் ஆசிரியர் மதிப்புரை ஆற்றும் நிகழ்வு



மலருக்குரிய மதிப்பீட்டின்போது இளை. அதிபர் தவமலர் சுரேந்திரன் அவர்கள் உரையாற்றும் நிகழ்வு



ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை நிகழ்த்தும் யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகமும் ஆசிரியை திருமதி கௌரி சுரேசனும்






# நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

ரமணமகரிஷி ஒருநாள் தனது ஆச்சிரமத்தின் சமையல் அறைக்குச் சென்றார். அங்கே அரிசிகள் சிதறுண்டு நிலத்தில் பரவி இருப்பதைக் கண்டார். அவர் கீழே அமர்ந்து ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கி ஒரு பாத்திரத்தில் சேகரித்தார். அவரின் பக்தர்களும் இந்தக் காட்சியைக் கண்டனர்.

ஆத்மஞானம் பெறுவதற்காகத் தன் வீட்டையும் உறவினர்களையும், சுற்றத்தாரையும் துறந்து வந்த மாபெரும் துறவியான ரமண மகரிஷி அரிசி பொறுக்குவதைப் பார்த்துப் பக்தர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். சிதறிக் கிடக்கும் சில அரிசிக்கு ரமணபகவான் இவ்வளவு முக்கியத்துவம் தர வேண்டுமா? என அவர்கள் நினைத்தார்கள்.

தங்களின் ஆர்வத்தை அடக்கமுடியாத அவர்கள் “சுவாமி நமது பண்டக சாலையில் தேவையான பல அரிசி மூடைகள் இருக்கின்றனவே, தாங்கள் சில அரிசிகளைப் பொறுக்கிக் கொண்டு ஏன் இவ்வளவு துன்பப்படவேண்டும்” என வினவினார்கள்.

அதற்கு ரமணர் “நீங்கள் இவற்றையெல்லாம் வெறும் அரிசியாகப் பார்க்கிறீர்கள்” இந்த அரிசிக்குள் என்ன இருக்கின்றது என்று பாருங்கள். உழவர்களின் கடும் உழைப்பு இல்லையா? இனிமையான காற்று, மென்மையான மண் இருப்பதை நீங்கள் உணரவில்லையா?

இவற்றையெல்லாம் நீங்கள் நன்கு உணர்ந்தால் ஒவ்வொரு தானியத்திற்குள்ளும் இறைவனின் அருள் இருப்பதை உணர்வீர்கள். அதனால் உங்கள் கால்களால் அவற்றை மிதித்து வீணாக்கமாட்டீர்கள். நீங்கள் உண்ண விரும்பாத தானியங்களை பறவைகளுக்குக் கொடுங்கள் என்றார்.

பூரணன் என்ற சொல்லே பரம்பொருளைக் குறிக்கின்றது. “பார்க்கும் இடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தமே” என்பது தாயுமான சுவாமிகளின் அருள்வாக்காகும்.

இறைவன் என்ற சொல் இறு என்றும் பகுதியடியாகப் பிறந்து எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருட்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்றார். எல்லாம் அவரிடத்தே இருக்க அவர் அவைகட்கு உறைவிடமாக இருக்கின்றார். ஆனபடியால்,

மனிதராகிய நாங்களும் இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட தானிய வகைகளை நாமும் உண்போம். மிகுதியை அவதானமாக வீண்விரயம் செய்யாமல் இறைவன் அருள் பொதிந்திருக்கும் தானியம் எனக் கருதிப் பிராணிகள், பறவைகளுக்கும் கொடுத்து, தான தருமம் செய்து முத்தி பெறுவோமாக. “எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருட்களிலும் உள்ளும் புறமும் ஒளிர்வது பிரமம்” உபநிடதம்.

இவற்றையெல்லாம் நெஞ்சில் நினைத்து “எங்கும் எவையும் எரியுறு நீர்போல் தங்குபவன் தானே தனி” என இறைவனின் உயிர்களிடத்தில் கலந்திருக்கும், நிறைந்திருக்கும் தன்மையை உணர்ந்து நடப்போமாக. உலகப் பொருள்கள் அனைத்திலும் பரம்பொருளாகிய இறைவன் நிறைந்துள்ளான். அவனில்லாத இடம் ஒன்றுமில்லை. ஆதலால் சிறு தானியத்திலும் இறைவனைக் கண்டார் ரமணமகரிஷி. இதுவே உண்மையறிவாகும்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| து. சிவகுமார் | அச்சுவேலி | 1000. 00 |
| திருமதி முருகேசு குடும்பம் | உடுவில் | 5000. 00 |
| திருமதி மகேஸ்வரன் | உடுவில் | 2000. 00 |
| திருமதி கதிர்காமத்து ஐயா | உடுவில் | 5000. 00 |
| சோ. குமரன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ச. சனுஜயா | சுவிஸ்லாந்து | 5000. 00 |
| ந. அரியரத்தினம் | கொக்குவில் | 1000. 00 |
| ம. சுப்பிரமணியம் | சுண்ணாகம் | 2000. 00 |
| T. உதயசங்கர் | இணுவில் | 1மூடை நெல் |
| வ. ஹரிஷ் | அளவெட்டி | 2000. 00 |
| மைதிலி நகைமாடம் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| தாமோதரம்பிள்ளை கண்மணி | புத்தூர் | 2000. 00 |
| வைரமுத்து விஜயலட்சுமி | மட்டக்களப்பு | 1000. 00 |
| அ. பரமநாதன் குடும்பம் | அளவெட்டி | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுண்ணாகம் | 2000. 00 |
| யோகன் களஞ்சியம் | சுண்ணாகம் | 2000. 00 |
| சௌமியா கேசவன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஜேசரி அபிஷனா, ஜோசினா ஆனந்தமூர்த்தி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு யோகீஸ்வரக்குருக்கள் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| த. ஈஸ்வரி | கனடா | 10000. 00 |
| A. அருணபரன் | கனடா | 10000. 00 |
| செல்வி ஆ. பகவத்சிங்கம் | நீர்வேலி | 1000. 00 |
| நடராஜா சிவகுமார் | (சிவபூமி முதியோர் இல்லம்) | 100000. 00 |
| செல்வரெத்தினம் குடும்பம் | (சிவபூமி முதியோர் இல்லம்) | 10000. 00 |
| தம்பி ஐயா | அச்சுவேலி | 2000. 00 |
| இ. ஜெயசீலன் | துன்னாலை வடக்கு | 1000. 00 |
| ந. நந்தகோபால் குடும்பம் | சங்கானை | 1000. 00 |
| கு. சிவபாதம் | மட்டக்களப்பு | 1500. 00 |
| கிருஷ்ணர் பொன்னம்மா | இடைக்காடு | 10000. 00 |
| சந்திரமோகன் ஆகாஷ் | கனடா | 10000. 00 |
| கு. கௌதம் | நீர்வேலி (சுவிஸ்) | 1000. 00 |
| இராகி நினைவாக | | |
| திருமதி க. கதிர்காமத்தம்பிமுலம் | கொற்றாவத்தை | 1000. 00 |

| | | | |
|---|---|---|---|
| S. மனோகரன் குடும்பம் | | சுவிஸ் | 10000. 00 |
| சா. சிவாஜினி | | ஊரெழு கிழக்கு | 1000. 00 |
| கு. ஜெயதேவன் | | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| பா. மயூரன் | | பருத்தித்துறை | 5000. 00 |
| செ. செல்வரத்தினம் | | சுழிபுரம் | 1000. 00 |
| சண்முகராஜா சஜிதா | | திருகோணமலை | 10000. 00 |
| M. திலகநாதன் நினைவாக | | அச்சுவேலி | 10000. 00 |
| த. தங்கவடிவேல் | | இணுவில் | 1000. 00 |
| கபிலன் சுவர்ணா | | நல்லூர் | 1000. 00 |
| அ. மகாலிங்கம் நினைவாக | | நவாலி | 2000. 00 |
| திருமதி காந்திமதி சிவனேசன் | | கந்தர்மடம் | 2000. 00 |
| S. சிவபாலன் | | திருகோணமலை | 3000. 00 |
| நா. சொக்கநாதபிள்ளை | | பருத்தித்துறை | 1000. 00 |
| க. அர்த்தனா, க. ஆரணி | | கொழும்பு | 1000. 00 |
| திருமதி விசாலாட்சி சந்திரசேகரம் நினைவாக கைதடி | | | 12500. 00 |
| திருமதி சின்னத்தங்கம் மயில்வாகனம் நினைவாக கைதடி | | | 12500. 00 |
| M. பரமலிங்கம் | | உரும்பராய் | 1000. 00 |
| பிரபாகரன் திஷானா | கைதடி | நாவற்குழி | 5000. 00 |
| நிருஷினி பதுமநாதன் | கைதடி | நாவற்குழி | 2000. 00 |
| R. அஜிந்தா | | நீர்வேலி | 1000. 00 |
| ரஞ்சினி ஸ்ரீஸ்கந்தராஜா | | யாழ்ப்பாணம் | மரக்கறி, அரிசி |
| S. லோகநாதன் | | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| ஆ. தெய்வேந்திரன் | | அச்சுவேலி | 3000. 00 |
| நா. தேவராணி | | புன்னாலைக்கட்டுவன் | 2000. 00 |
| சி. கஜானி | | அளவெட்டி | 5000. 00 |
| சு. மகேஸ்வரன் (மாரியம்மன் மோட்டோர்ஸ்) | | கோப்பாய் | 5000. 00 |
| M. ராஜேந்திரா | | பருத்தித்துறை | 2000. 00 |
| எ. ஜெயக்குமார் குடும்பம் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| S. விவேகானந்தன் | தும்பளை | பருத்தித்துறை | 1000. 00 |
| ரா. ராஜ்குமார் | | பிரான்ஸ் | 2000. 00 |
| செல்வி ரோகினி பேராயிரவன் | | உரும்பராய் | 4000. 00 |
| V. கருணாகரன் | | சங்கானை | 1000. 00 |
| வ. ஆறுமுகம் | | ஆவரங்கால் | 1000. 00 |
| N. லோகநாதன் | | கண்டி | 5000. 00 |
| திரு கிருபாகரன் | | வெள்ளவத்தை | 5000. 00 |
| பிரியதர்சினி லவன் | | வல்வெட்டி | 5000. 00 |
| பி. ஹம்சிகன் | | அளவெட்டி | 2000. 00 |

(தொடரும்...

# பசுவின் உடலில் பரதேவதைகள்

–செல்வி செ. ஐடா அவர்கள்–

பசு ஒரு தெய்வமாகக் கருதப்பட்டு மக்களால் போற்றித் துதிக்கப்படுகின்றது. மிக உயர்ந்த தர்மம் பசுவை இரட்சித்து வழிபடுவதுதான் என இந்துமத சாஸ்திரங்கள் செப்புகின்றன. பசு தன் பாலை தனது கன்றுக்கு மட்டுமன்றி நமக்கும் உணவாக அளிக்கின்றது. இந்தக் காரணத்தால் உலக மக்களால் பசு "கோமாதா" என பக்தியுடனும் போற்றி வளர்க்கப்படுகிறது. மகாலட்சுமியின் முழு சாந்நித்தியமுள்ள இடம் பசுவின் உடம்புதான்.

"கீதா மங்களா சாசனம்" பசுவைப் பற்றி பின்வருமாறு மொழிகிறது. உபநிஷதங்கள் அனைத்துமே பசுக்கள்தான். அந்த உபநிஷதங்களின் சாரத்தை பாலாக்கி காப்பவன் பகவான் கிருஷ்ணன். அந்தப் பசுக்களின் கன்றுகள் உருவமாக பகவானிடம் அர்ச்சுனன் பெற்ற கீதா உபதேசம். "கீதை" என்ற அந்தப் பாலை அருந்தி ஆனந்தத்தில் திளைப்பவர்கள் முனிவர்கள், மகான்கள், சாஸ்திர விற்பன்னர் போன்றோர்.

அதிகாலை எழுந்தவுடன் பசுவின் பின்பக்கத்தை தரிசிப்பது மகாலட்சுமியை நேரில் தரிசிப்பதற்கு ஒப்பாகும். திருவானைக்கா, அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் நாள்தோறும் நடுப்பகலில் கோபூசை செய்த பின்னரே அம்பிகைக்கு தீபாராதனை காண்பிக்கப்படுகின்றது.

பசுவின் மேனி வேதங்களின் நிலைப்பாடு என்று கூறப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| பசுவின் பின்புறம் | - | இருக்கு வேதம் |
| கழுத்து முகம் | - | சாமவேதம் |
| உடலின் மத்தியபாகம் | - | யசுர்வேதம் |
| இரு கொம்புகளும் | - | அதர்வன வேதம் |

பசுவின் உரோமங்களும், சகல சூதகங்களும் சாந்திகர்மமாகவும், புஷ்டிகர்மாவும், கோமேயம் பசுவின் பாதங்களும் வேதம் வகுத்த நூல்வர்ணங்கள்.

ஸ்வாஹா, ஸ்வதா, வஷ்ட, ஹந்த ஆகிய நான்கும் பசுவின் தனங்களும், ஸ்வாஹா என்பதனால் தேவர்களையும், ஸ்வதா என்பதால் மானிடர்களையும் ஊட்டி வளர்க்கிறது கோமாதா. மகாலட்சுமி மட்டுமன்றி எல்லா தேவதைகளுமே பசுக்களின் உடலில் குடி கொண்டிருக்கிறார்கள். அகில உலகங்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நிறைந்துள்ள தெய்வத் திருவுருவம் என்ற நோக்கத்தில் கோபூசை செய்ய வேண்டும். கோபூசை செய்யுமுன்பு எந்தெந்த தேவதைகள் பசுவின் உடலின் எந்தெந்த உறுப்பில் குடிகொண்டிருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அந்த விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| இரு கொம்புகளின் நடுவில் | - | சிவன் |
| வலக் கொம்பில் | - | பிரம்மா |
| இடக் கொம்பில் | - | விஷ்ணு |
| மூக்கு நுனியில் | - | ஐயேஷ்டாயை |
| வலக் கண்ணில் | - | சூரியன் |

| | |
|---|---|
| இடக் கண்ணில் | - சந்திரன் |
| பற்களில் | - மாருதா |
| தாடையில் | - வருணன் |
| மேலுதட்டில் | - யசேஷப்பா |
| கீழுதட்டில் | - யமன் |
| கழுத்தில் | - இந்திரன் |
| குளம்பின் நடுவில் | - கந்தர்வர்கள் |
| குளம்பின் நுனியில் | - நாகேஸ்வரி |
| குளம்பின் மேல்பாகம் | - அப்ஸரஸ் |
| கால்கள் | - கணங்கள் |
| மடியின் அடியில் | - பிருகு |
| மடியின் நுனியில் | - ஸாகரம் |
| இருதயத்தில் | - உமாதேவி |
| வயிற்றில் | - பூமிதேவி |
| யோனியில் | - மகாலட்சுமி |
| உரோமங்களில் | - தேவர்கள் |
| கோமயத்தில் | - பிரமன் |
| கோசலத்தில் | - விஷ்ணு |
| பசுவின் நெய்யில் | - ருத்திரன் |
| பசுவின் தயிரில் | - ஈஸ்வரன் |
| பசுவின் பாலில் | - சதாசிவன் |

அறுகம்புல்லை பசுவின் வாயில் கொடுப்பதால் 32 தர்மங்களையும் செய்யும் சிறப்புண்டு.

## அனைவருள்ளும் கடவுள் உள்ளார்

எல்லோரிடமும் கடவுள் இருப்பதை மனதில் கொண்டு அனைவரிடமும் மரியாதை காண்பிக்க வேண்டும். இறைவனிடம் மரியாதை காட்டுவது போன்றே அனைவரையும் மதித்து மரியாதை செலுத்த வேண்டும். ஒருபோதும் மற்றவரது தவறுகளைக் கவனிக்காதீர்கள். முதலில் உங்களைத் திருத்த முயலுங்கள். இதுவே ஆன்மீகம். மற்றவரின் சிறப்புக்களை எண்ணுவதாலும் தன்னிடம் உள்ள குறைபாடுகளை எண்ணுவதாலும் மனிதன் பண்பின் சிகரத்தை அடைவான். தன் தவறுகளை மறைப்பதற்காக மற்றவர்களின் குறைபாடுகளைக் கண்டுபிடிப்பதுடன் தன் பெருமையை போற்றிப் புகழ் பவனின் மனிதத் தன்மை அடிமட்டத்திற்கு போய்விடுகிறது.

(கட்டுரைத்தொடர் - 11

# சித்தர்களின் ஞானம்

-திரு சிவ மகாலிங்கம் அவர்கள்-

## பதினெண் சித்தர்களில் பாம்பாட்டிச் சித்தர்

### 01) சித்தர்களின் பொதுத்தன்மை

சித்தர்களின் ஞானம் பற்றி ஞானச்சுடரில் வெளிவந்த பத்துக் கட்டுரைகளிலும் சித்தர்களின் பொது இயல்புகள் பற்றிச் சிந்தித்தோம். சித்தர்கள் அறிமுகம், சித்தர்களின் கடவுட் கொள்கை, ஆன்மா பற்றிய சித்தர்களின் கொள்கை, மனத் தூய்மையே மனதின் செல்வம், சித்தர்களின் சமுதாய சிந்தனை, சித்தர்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள், ஆன்ம விடுதலைக்கு ஞான குருவின் அவசியம், சுய சிந்தனையை வெளிப்படுத்தியவர்கள் சித்தர்கள், சித்தர்கள் கண்ட அறிவியல், சமுதாய ஒற்றுமைக்கு வழிகாட்டிய சித்தர்கள் என்ற பத்துத் தலைப்புக்களில் சித்தர்களின் ஞானம்பற்றி அறிந்திருந்தோம். தொடர்ந்து பதினெண் சித்தர்களில் முதன்மை பெறுபவர்கள் சிலரின் வாக்கையும், வாழ்வையும் பற்றிச் சிந்திப்போம்.

### 02) பாம்பாட்டிச் சித்தரின் வரலாறு:

பாம்பாட்டிச் சித்தர் பாண்டி நாட்டிலே பிறந்து சட்டை முனிச் சித்தரிடம் தீட்சை பெற்றிருந்தார். இவர் கொங்கு நாட்டிலுள்ள மருதமலையில் வாழ்ந்து வந்தவர் என்றும் மருத மலையில் இவருடைய வாழ்க்கைச் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன என்றும் சிலர் கூறுகின்றனர். போகர் தமது போகர் இரண்டாயிரம் என்ற நூலில் இவருடைய வரலாற்றையும் இவர் சட்டை முனிச் சித்தரிடம் ஞானம் பெற்றதையும் பற்றிக் கூறியுள்ளார்.

“தெளிந்து தெளிந்து ஆடு பாம்பே - சிவன்
சீர்பாதம் கண்டு தெளிந்து ஆடு பாம்பே!
ஆடுபாம்பே! தெளிந்து ஆடு பாம்பே சிவன்
அடியினைக் கண்டோம் என்று ஆடு பாம்பே”

என்ற பாம்பாட்டிச் சித்தரின் பாடலைப் படிக்கும்போது இவர் பாம்பைப் பிடித்து ஆட்டும் தொழிலினைப் பழகியவர் போலவே காணப்படுகின்றார். “ஆடு பாம்பே” எனப் பாம்பை ஆட்டுவித்துப் பாடியதாலும், காடுகளில் திரிந்து பாம்புகளைத் தேடி அலைந்து வாழ்ந்த சித்தர் என்பதாலும் இவருடைய குருவாகிய சட்டைமுனிச் சித்தர் இவரைப் பாம்பாட்டிச் சித்தர் என்று அழைத்ததாலும் இவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நாதர் முடி மேலிருக்கும் நாகப் பாம்பே
நச்சுப் பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே

என்ற புகழ்பெற்ற பாடல் பாமர மக்களின் நாவிலும் நடமாடும் பாடலாக இன்றும் காணப்படுகிறது. இவர் இயற்றிய 129 பாடல்கள் இன்று வழக்கில் உள்ளன. இவருடைய பாடல்கள் எளிய நடை, சொல் நயம், தெளிந்த உவமைகள் கொண்டவை. சம்பிரதாயக் கருத்துக்களை கூறுவது போலத் தோன்றினும் அடிப்படையில் ஆழ்ந்த தத்துவம் கொண்டவை. பாம்பு வடிவாக உடலின் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதன் மூலம் ஆன்ம தரிசனம் செய்வதை இப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

பாம்பு என்றாலே படையும் நடுங்கும் என்பார்கள். ஆனால் பாம்புகளே நடுங்கும் ஒரு மனிதர் இருந்தார் என்றால் அது பாம்பாட்டிச் சித்தராகவே இருக்க முடியும். பாம்பைப் பிடித்துப் படமெடுத்து ஆடச் செய்வது, பாம்பின் விஷத்தைச் சேமித்து விற்பது என்பவையே பாம்பாட்டிச் சித்தரின் தொழிலாக அமைந்திருந்தது. பாம்புக்கடி, தேள்கடி, காட்டு வண்டுகள் கடி போன்ற விஷ ஜந்துக்களால் ஏற்படும் நோயினை மாற்றக்கூடிய விஷ முறிவு மூலிகைகளைப் பற்றியெல்லாம் இவர் அறிந்திருந்தார். விஷ ஜந்துக்களால் தீண்டப் பெற்ற பலர் இவரை அணுகிச் சிகிச்சை பெற்றார்கள். பாம்புக் கடியினால் மரண வாயிலில் இருந்த பலரை இவர் உயிர் பிழைக்கச் செய்தார். இவருக்குப் பெரும் புகழும் உண்டாகவே பல வைத்தியர்களும் இவருடன் தொடர்பு கொண்டு நட்புப் பாராட்டினார்கள். பல மருத்துவர்களின் தொடர்பினால் இவருடைய குடியிருப்பு ஒரு பெரிய மருத்துவ ஆராய்ச்சிக்கூடமாக மாறியது. மருதமலைப் பகுதியில் விஷ வைத்திய ஆய்வுகூடம் ஒன்றையும் ஏற்படுத்தினார்.

ஒருநாள் வைத்தியர்கள் சிலர் மருதமலைமீது பெரிய நவரத்தினப் பாம்பு ஒன்று வசிப்பதாகவும் அதன் தலையில் மாணிக்கம் ஒன்று இருப்பதாகவும், அந்தப் பாம்பின் நஞ்சு மிகப் பெரிய சித்து வித்தைகளைச் செய்யும் திறன் கொண்டது என்றும், அந்த மாணிக்கம் மிகப் பெறுமதி உடையது என்றும் பாம்பாட்டிச் சித்தரிடம் கூறினார்கள். இந்த நவரத்தினப் பாம்பை எப்படியும் பிடித்து விடவேண்டும் என்று ஆர்வம் கொண்ட சித்தர் மருதமலைக் காடு முழுவதும் அலைந்து திரிந்து பாம்பினைத் தேடினார். அப்பொழுது திடீரென்று பலத்த சிரிப்பொலி ஒன்று அங்கே கேட்டது. பாம்பாட்டிச் சித்தர் சிரிப்பு வந்த திசை நோக்கித் திரும்பினார். மிகப் பிரகாசமான ஒளியோடு சட்டைமுனிச் சித்தர் இவர் எதிரில் நின்றார். யார் நீங்கள்? எதற்காக இங்கே சுற்றித் திரிகிறீர்கள்? என்று பாம்பாட்டி சட்டைமுனியிடம் கேட்டார். “நான் கேட்கவேண்டிய கேள்வியை நீர் கேட்கிறீர்” இந்தக் காட்டில் வசிப்பவன் நான்; நாட்டிலிருந்து வந்தவன் நீ; காரணத்தை நீதான் சொல்லவேண்டும் என்றார் சட்டைமுனி. பாம்பு பிடிக்கும் வைத்தியர் நான். பாம்பு பிடிக்கத்தான் காட்டிற்கு வந்தேன் என்றார் பாம்பாட்டிச் சித்தர். நவரத்தினப் பாம்பை நீயே உனக்குள் வைத்துக்கொண்டு காடு எல்லாம் தேடுவது பயனற்ற செயல் என்றார் சட்டைமுனி. மிகுந்த உல்லாசத்தைக் கொடுக்கக் கூடிய பாம்பு உன் உடலுக்குள்தான் குடியிருக்கிறது. அது உன் உடம்பில் மட்டுமில்லை எல்லோருடைய உடம்பிலும் உண்டு. அதனை யாரும் அறிவதில்லை என்றார்.

**03) குண்டலினி சக்தி:**

இறைவனுடைய படைப்பில் மிகவும் அற்புதமானது இந்த மானுட சரீரம். இதற்குள் ஆதியிலிருந்தே ஒரு பாம்பு சுருண்டு படுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு குண்டலினி என்பது பெயர். தூங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாம்பு அறிவைச் சுருக்குகிறது.

அறியாமையாகிய இருளைத் தோற்றுவிக்கிறது. இதனால் இதன் நுட்பத்தை யாரும் அறிவதில்லை. மக்கள் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் இந்தப் பாம்பின் உறக்கம்தான் என்றார் சட்டைமுனி.

அரும்பெரும் இரகசியத்தை உணர்ந்து கொண்டேன். மேலான இந்த வழியை விட்டு நான் விலகமாட்டேன் என்று கூறிய பாம்பாட்டி தனது குருநாதராகிய சட்டைமுனியை வணங்கி எழுந்தார். “சுவாமி, நீங்கள் எனக்குக் காரண குரு” உங்களால் மெய்ப்பொருளை உணர்ந்து தெளியும் வழிமுறையை அறிந்து கொண்டேன். இனி நீங்கள் எனக்குப் போதித்த குண்டலினி தியான முறையில் தீவிரமாக ஈடுபட்டு என்னுள் இருக்கும் அந்த நவரத்தினப் பாம்பை பிடித்து ஆட்டுவேன். நான் பாம்பை ஆட்டி அடக்கியதன் பலனை இந்த உலகு அறியச் செய்வேன். உங்கள்மீது ஆணை. எனப் பாம்பாட்டிச் சித்தர் தனது குருநாதராகிய சட்டைமுனியைப் பார்த்துக் கூறினார்.

04) பாம்பாட்டிச் சித்தரின் சமுதாயப்பணி:

பலகாலம் தொடர்ந்து செய்துவந்த யோக சாதனையின் பலனாக அவருள் உறங்கிக் கிடந்த குண்டலினி பாம்பு விழித்து ஆடியது. உலகம் முழுவதும் ஒளிமயமாகத் தெரிந்தது. எல்லாவகையான சித்துக்களும் அவரிடம் வந்து சேர்ந்தன. உணவுப்பசி, உடற்பசி ஆகியவற்றைத் தீர்ப்பதற்காக ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் உலக மாந்தர்களின் ஆன்ம பசியைத் தீர்ப்பதற்காக உழைக்க வேண்டுமென்று உறுதி பூண்டார். இரவு பகல் என்று பாராமல் பல இடங்களுக்கும் சென்றார். உடற்பிணியினால் வாடும் மக்களின் பிணிகளை எல்லாம் சித்தமருத்துவத்திற்குரிய மூலிகைகளைப் பயன்படுத்திக் குணப்படுத்தினார். அநாதைகள், திக்கற்றவர்கள், சாதி சமய பேதங்களால் அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களைத் தேடிச் சென்று அவர்கள் தமது வாழ்க்கையில் செம்மையுறப் பற்பல வழிமுறைகளையும் ஞானத்தையும் போதித்தார்.

பாம்பாட்டிச் சித்தர் பாடிய 129 பாடல்கள் இன்று வழக்கில் உள்ளன. இவருடைய பாடல்கள் எளிய நடை, சொல்நயம், தெளிந்த உவமை கொண்டவையாக உள்ளன. சம்பிரதாயக் கருத்துக்களைக் கூறுவது போலத் தோன்றினும் அடிப்படையில் ஆழ்ந்த தத்துவம் கொண்டவை. பாம்பு வடிவாக மனிதர்களிடத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதன்மூலம் ஆன்ம தரிசனம் செய்வதை இப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனதும் இன்றைய நிலைக்கு அவர்களே காரணமாகக் காணப்படுகின்றார்கள். இன்று செய்யப்படும் செயல்கள் நாளை நடக்க இருப்பதைக் கட்டுப்படுத்தும் என்றே இந்து சமயத் திருநூல்கள் அனைத்தும் குறிப்பிடுகின்றன. “தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்” என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. நாம் இப்பொழுது எப்படி இருக்கிறோம்? என்ன சூழ்நிலையில் நாம் வைக்கப்பட்டுள்ளோம்? என்பது நாம் எப்படி இருந்தோம்? என்ன செய்தோம் என்பதைப் பொறுத்ததாகும். இதேபோல “இனி நாம் எப்படி இருப்போம்? என்ன சூழ்நிலைகளுக்கு ஆளாகுவோம். என்பதும், இன்று நாம் எப்படி உள்ளோம்? என்ன சூழ்நிலையில் இருக்கிறோம்? என்பதைப் பொறுத்தே அமையும். வினையால் விளைவது எதுவும் வராமல் போகாது. “நல்வினையால் ஒருவன் நல்லவன் ஆகின்றான்; தீவினையால் ஒருவன் தீயவன் ஆகின்றான் என்றே பிருகதாரண்யக உபநிடதமும் கூறுகிறது.

06) வினைப்பயன்:

ஆன்மாக்கள் செய்த வினைகளுக்கேற்ப பல்வேறு உடல்களைப் பெற்றுப் பல பிறவிகளை எடுக்கின்றன. எடுத்த பிறவிகளைச் சரியாகப் பயன்படுத்தி தவத்தினைச் செய்து இருந்தால் பிறவி நோய் நீங்கியிருக்கும். பிறவிகளில் மகத்தான பிறவியாகிய மானுடப் பிறவியை எடுத்தவர்களில் பலர் அதனைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைக்கின்றனர். தவயோகியாகிய திருமூல நாயனாரால் அருளப் பெற்ற பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் தமிழ் ஆகமம் என்று போற்றப்படுகிறது. தான் எடுத்த பிறவியில் தவத்தைச் செய்தமையால் ஆகமக் கருத்துக்களைத் தமிழில் தருவதற்காகச் சிவன் இப்பிறவியைத் தந்துள்ளார் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாகத் திருமூலர் விளக்குகின்றார்.

பின்னை நின்று என்னே-பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே
(திருமந்திரம்- 81)

மரங்களிலே காய்கள், கனிகள் இருந்தால்த்தான் யாரும் கல் எறிவார்கள். வெறும் மரத்திற்கு யாரும் கல் எறிவதில்லை. முற்பிறப்புக்களில் தீவினை செய்தவர்கள் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும். ஊழ்வினையை விட வேறு வலிமை மிக்கபொருள் எதுவும் இல்லை. முன்னைய பிறப்புக்களில் அறம் வழுவாது தவநெறியில் வாழ்ந்தவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்களாக இப்பிறப்பில் திகழ்வார்கள் என்பதைப் பாம்பாட்டிச் சித்தரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

காய்த்த மரம் அதுமிக்க கல்லடி படும்
கன்மவினை கொண்ட காயம் தண்டனை பெறும்
வாய்த்த தவம் உடையவர் வாழ்பவர் என்றே
வத்துத் திருவடி தொழுது ஆடு பாம்பே

06) குருவின் முக்கியத்துவம்:

ஆத்ம ஞானம் பெறுவதற்கு குருவின் துணை அவசியம் என்றே இந்து சமயத் திருநூல்கள் அனைத்தும் கூறுகின்றன. கருணையே வடிவான கடவுளின் கருணைகள் கணக்கற்றவையாகும். பக்குவமான ஆன்மாக்களை ஆட்கொண்டு அருள்செய்யும் பொருட்டு இறைவன் குருமூர்த்தமாய் மண்ணிலே எழுந்தருளுவான். பாம்பாட்டியாகவும், விஷக்கடி வைத்தியராகவும் இருந்த சித்தருக்கு மனித உடம்பின் மூலாதாரத்திலே பாம்பு போலச் சுருண்டு போய் இருக்கின்ற குண்டலினி சக்தியின் சிறப்பினை இவருடைய ஞான குருவாகிய சட்டைமுனிச் சித்தரே விளக்கியிருந்தார். வச்சிரம் மிகவும் உறுதியான பொருள் மூலா தாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்கள் ஊடாக மேலே எழுப்பி சித்தர்கள், ஞானிகள் உச்சியிலே அமிர்தத்தைச் சுவைப்பார்கள். இச்செயலை உச்சியிலே பிச்சை எடுத்தல் என்பர். சித்தர்கள் குண்டலினியை யோக சக்தியாக மாற்றுவார்கள்.

உலகியல் போகங்களை அனுபவிப்பதே வாழ்வின் நோக்கம் என்று வாழ்பவர்கள் ஜீவசக்தியாகிய குண்டலினியைப் போகசக்தியாக மாற்றிவிடுவார்கள். உறுதியான பொருளாகிய வச்சிரத்தில் பழுது ஏற்பட்டாலும் குண்டலினி சக்தியைச் சரியாகப் பயன்படுத்துகின்ற யோகிகளின் உடம்பிற்கு குறையெதுவும் ஏற்படாது குருவின் திருவடிகளைத் துதித்து வாழ்பவர்களின் உடம்பிலே தெய்வீக ஒளி பிரகாசிக்கும் எனக் குருவின் பெருமையைப் பின்வரும் பாம்பாட்டிச் சித்தரின் பாடல் விளக்குகிறது.

வச்சிரத்திற்கோர் பழுது வாய்க்குமாயினும்
வல்லுடம்புக் கொருகுறை வாய்த்திடாது
மெச்சுகட்டுள்ள எங்கள் வேத குருவின்
மெல்லடி துதித்து நின்று ஆடுபாம்பே.

உடம்பானது வினைப் போகங்களை அனுபவித்து முடிந்ததும் உயிரானது உடலை விட்டு நீங்கிவிடும். சுகபோகங்களை உடனிருந்து அனுபவித்த மனைவியும் மக்களும் இறந்தவருடன் கூட வரமாட்டார்கள். உயிரோடு வாழ்ந்த காலத்தில் கடைப்பிடித்த விரதத்தின் பயனும் ஞானமும் அன்றி வேறு எவையும் இறந்தவருடன் கூடச் செல்வது இல்லை.

பண்டம் பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப் பெண்டிரும் மக்களும் பின் செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநடவாதே.

(திருமந்திரம்- 144)

மக்கள், மனைவி, உற்ற சுற்றம் ஆகியோரில் எவரும் இறந்தவருடன் சேர்ந்து மாள்வதற்குத் தயாராக இல்லை. ஆகவே இந்த உலகியல் உறவுகள் எதுவும் கூடவரும் என்று நம்பாமல் உலகத்தின் சிருஷ்டி கர்த்தாவாக இருக்கின்ற இறைவனைத் துதித்து வணங்க வேண்டும் என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

மக்கள் பெண்டிர் சுற்ற மருமக்கள் மற்றவர்
மாளும்போது கூட அவர் மாள்வதில்லையே
தக்கவுலகனைத்தையும் தந்த கர்த்தனைத்
தாவித் தாவித் துதித்து நின்று ஆடுபாம்பே.

## 07) அகத்திலே ஆன்ம ஒளியைக் காணும் வழி:

தத்துவங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். உலகாயத தத்துவம், ஆன்மீக தத்துவம் என்பன அவையாகும். விஞ்ஞான பூர்வமாக உலகினை இயக்கும் ஐம்பூதங்களையும் அணு, புல், பூண்டு, புழு, பூச்சி முதலிய உயிரினங்களின் உடல், உயிர் தத்துவத்தையும் ஆராய்ந்து வெளியிடும் தத்துவங்கள் உலகாயத தத்துவம் எனப்படும். இறைவன் ஒருவனே உண்மைப் பொருள் என்பதையும் அவனே உயிர் உலகங்கள், ஐம்பூதங்கள் அனைத்துக்கும் ஆதாரமாக உள்ளான் என்பதையும் ஞான அனுபவத்தால் தெளிந்து வெளியிடும் கருத்துக்களை ஆன்மீக தத்துவம் என்று கூறலாம்.

இறைவனைக் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என மதவாதிகள் கூறுவார்கள். ஆனால் சன்மார்க்க சீலர்களாகிய சித்தர்கள் இறைவனை அகத்திலே கண்டு கண்டு களித்தனர். இந்த உடம்பு அழியாது; இது ஒளி உடம்பாக மாறும் என்று கூறினர். இறைவனாகிய பேரொளியில் கலந்து நிற்கும் என்றார்கள். அன்பு, தயவு, காருண்யம், பரிவு, இரக்கம் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தார்கள்.

சாதி சமய வேறுபாடுகள் அனைத்தும் அன்புக்குத் தடை எனக் கூறி அதனை வெறுத்தனர். இந்த உடம்பாகிய கப்பலை எப்பொழுதும் சரியாக ஓட்டக்கூடிய துணிவு இருத்தல் வேண்டும்; விருப்பு வெறுப்பற்று எதிலும் இருக்க வேண்டும் என்கிறார் பாம்பாட்டிச் சித்தர். கோபம் என்னும் மதயானை கொண்ட மதத்தை கூர்கொள் என்ற புத்தி அங்குசத்தால் கொல்ல வேண்டும் என்பார் திருமூலர். மனம் என்னும் குதிரையை நெறிப்படுத்துவதற்கு மதி என்னும் குதிரையைக் கடிவாளமாகப் போடவேண்டும். கோபம் பாவத்தைத் தரும் என்பதால் அதனை அறிவின் துணையோடு கட்டுப்படுத்துதல் வேண்டும். மனத்தை அலைய விடாமல் சினத்தை அடக்கினால் அகத்திலே தெளிவு தோன்றும். "தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்" என்ற திருமூலரின் வாக்கிற்கு அமைய அகம் சிவமயமாகி விடும். ஞானம் என்ற இடத்திற்கு எப்படிப் போவது என்பதை பின்வரும் சிவவாக்கியாரின் பாடல் விளக்குகிறது.

"மனமென்னும் குதிரையை வாகனமாக்கி
மதியென்னும் கடிவாளம் வாயினில் பூட்டிச்
சினமென்னும் சீனியின் மேற் சீராய் ஏறித்
தெளிவிடம் சாரிவிட்டு ஆடுபாம்பே"

எதை நீ பாவிக்கிறாயோ அதுவாக நீ ஆகிறாய். (யத் பாவ தத் பவதி) என உபநிடதம் கூறுகிறது. தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறி விடுகிறான். (தியானத் யாத்துரு தேய ரூபா) என்றே லலிதா சகஸ்ர நாமமும் குறிப்பிடுகிறது. உள்ளத்துக் குள்ளே இறைவனை உணரவேண்டும் புறக்கருவிகளாலும், அந்தக் கரணங்களாலும் இறைவனை அறிய வேண்டும். ஞானக் கனலை எழுப்பி வீதிப் புனலைச் செலுத்த வேண்டும். கள்ளப் புலன்களைக் கட்டுப்படுத்தி தியானப் பயிர்சி செய்துவர பரஞ்சோதியாகிய சிவ ஜோதியை சீவனுக்குள்ளே தரிசிக்கலாம்.

உள்ளத்துக் குள்ளேயே உணர வேண்டும்
உள்ளும் புறம்பையும் அறிய வேண்டும்
மெள்ளக் கனலை எழுப்ப வேண்டும்
வீதிப் புனலிலே செலுத்த வேண்டும்
கள்ளப் புலனைக் கடிந்து விட்டு
கண்ணுக்கு மூக்கு மேற்கான நின்று
தெள்ளு பரஞ்சோதி தன்னைத் தேடிச்
சீர்பாதம் கண்டோம் என்று ஆடுபாம்பே.

-பாம்பாட்டிச் சித்தர்-

(தொடரும்...

# சூரிய வழிபாடு

– திருமதி பொன்னையா செல்வக்காந்திமதி அவர்கள் –

சூரியனுக்கு விஷேச வழிபாடு

சீலமாய் வாழ சீர் அருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

-சூரிய துதி-

காசினி இருளை நீக்கி கதிரொளி ஆகிலங்கும்
பூசனை உலகோர் போற்ற புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசிஏழு உடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா எனை இரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

சூரியனுக்குச் சிறப்பாக ஹோமங்கள் யாகங்கள் செய்து அபிஷேக ஆராதனை, அர்ச்சனைகள் இங்கு செய்வது மிக உயர்வான பலன்களைத் தரும். சூரியனின் பூரண அருளாட்சியை பெற்றுத்தரும் செந்தாமரைப் புஷ்பம் கொண்டு சூரியனை அர்ச்சிப்பது சூரியனுக்கு மிகவும் பிரீதியை அளிக்கும்.

அரசியலில் அரசாங்கத்தில் நல்ல உயர் பதவிகளை வகிக்க விழைவோர், இங்கு சூரியனுக்கு சிறப்பாக ஹோமயாக முறையில் வழிபாடு செய்வதால், நினைத்தது நினைத்த வாறே அடையலாம். சூரியனின் அனுக்கிரகம் இன்றி எந்த ஒரு துறையிலும் பேர், புகழ், வெற்றி, செல்வாக்கு, கீர்த்தி, பிரதாபம், பிரபலம் அடைய முடியாது. எனவே சூரியனின் அருளாசி பெற்று உயர்வடைய இங்கு சூரியனுக்குச் சிறப்பு வழிபாடு செய்து கொள்ளவும்.

சூரியன் ஜாதகத்தில் பாதிக்கப்பட்டு பலம் குன்றி இருப்பவர்கள் சூரிய வழிபாட்டை முறையாகக் கடைப்பிடித்தால் சூரியதோஷம் நீங்கி வாழ்வில் நலமடைவர். சூரிய வழிபாடு செய்ய உகந்த கிழமை ஞாயிறு ஆகும். அதேபோல நட்சத்திரங்கள், கிருத்திகை, உத்திரம், உத்தராடம் வரும் தினங்களில் சூரிய வழிபாடு செய்வது மிக உத்தமம்.

திதியில் வளர்பிறை "ஸப்தமி" அன்று சூரிய வழிபாடு செய்யலாம். தினசரி வருகின்ற சூரிய ஹோரையில் சூரிய வழிபாடு செய்வது உத்தமம். "சூரிய கலை நடக்கும்போது எப்போது வேண்டுமானாலும், சூரிய தரிசனம் வழிபாடு செய்யலாம். உத்தம பலனை உறுதியாய்ப் பெற்றுத்தரும். கண்டிப்பாக சூரிய தரிசனம், வழிபாடு செய்யும் காலத்தில் சூரிய கலை நடக்க வேண்டும்! இது உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். சூரியனுக்குச் சிவப்புநிற வஸ்திரம், செந்தாமரைப்பூ மிகவும் பிரீதி தரக்கூடியது.

சூரியனுக்கு வெள்ளெருக்கு சமித்துக் கொண்டு யாகத்தீ எழுப்பி யாகம் செய்ய வேண்டும். கோதுமை, சர்க்கரைப் பொங்கல் செய்து ஆகுதி செய்து தீபாராதனை செய்து அர்ச்சனை செய்து தூபதீபம் காட்டி நைவேத்தியம் சமர்ப்பித்து சௌராஷ்டிர ராகத்தில் சூரிய கீர்த்தனைகளைப் பாடிப் போற்றி பிரார்த்தனை செய்து கற்பூர ஆராத்தி எடுக்க வேண்டும்.

இதனால் சூரிய பகவானின் அருள் கிட்டும். சூரிய கிரக தோஷங்கள் விலகி நலத்தை உண்டாக்கும்.

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 28. ஆணவம் இடையில் வந்தது அன்று

ஆசு ஆதியேல் அணைவ காரணம் என்? முத்தி நிலை
பேசாது அகவும் பிணி.

**பொருள்:**

ஆணவ மலம் ஆகிய குற்றம் உயிரிடத்தில் முதலில் இல்லாமல் இடையிலே ஒரு காலத்தில் வந்து பற்றியது எனில், அவ்வாறு வந்து பற்றுவதற்குக் காரணம் யாது? (காரணம் இன்றியே வந்து பற்றியது என்று சொன்னால்) உயிர் முத்தி பெற்ற நிலையிலும் அவ்வாணவம் காரணமின்றி வந்து பற்றும் என்றாகும்.

காரணம் வேண்டாதபோது எந்த நிலையிலும் எந்த நேரத்திலும் அது சொல்லாமலே வந்து பற்றும் என்றாகி, முத்தி என்பதே இல்லையாகி விடும். ஆதலால் ஆணவ மலம் இடையிலே வந்ததன்று. அஃது உயிர்களிடத்தில் தொன்றுதொட்டே உள்ளது.

**சொற்பொருள்:**

ஆசு- ஆணவ மலம் ஆகிய குற்றம், ஆதியேல்- உயிர்களிடத்தில் முதலில் இல்லாமல், இடையே ஒரு காலத்தில் வந்து பற்றியது எனில், அணைவ காரணம் என்- அவ்வாறு இடையிலே வந்து பற்றுதற்குக் காரணம் யாது? (காரணம் இன்றியே வந்து பற்றியது என்று கூறினால்) முத்தி நிலை- உயிர் முத்தி பெற்ற நிலையிலும், பிணி- அவ்வாணவமாகிய தடை, பேசாது- காரணம் சொல்ல வேண்டாமலே, அகவும்- வந்து அகப்படுத்துவதாகும்.

**விளக்கம்:**

இச்செய்யுளை வினாவும் விடையுமாகச் சுருங்கிய சொற்களைக் கொண்டு அமைத்துள்ளார் ஆசிரியர். அதன் பொருள் நிலை இனிது புலப்படுமாறு பின்வரும் முறையில் ஆசிரியர் - மாணவர் உரையாடலாக அமைத்துக் காட்டலாம்.

மாணவர்: ஆணவ மலம் எப்பொழுது உயிரைப் பற்றியது?

ஆசிரியர்: உயிர் முதலில் ஆணவ மலத்தின் தொடர்பின்றி இருந்தது என்று கருதித்தானே இவ்வினாவைக் கேட்கிறாய்.

மாணவர்: ஆம், ஆம்.

ஆசிரியர்: ஆணவமாகிய மாசு முதலில் இல்லையென்றால் உயிர் தூயதாக விளங்கியது என்றுதானே பொருள்.

மாணவர்: அப்படித்தான் கொள்ள வேண்டும்.

ஆசிரியர்: முதலில் தூய்மையாக இருந்த உயிரிடம் பின்னர் ஆணவ மலம் சேர்ந்தது என்றால் அதற்குக் காரணம் வேண்டும் அல்லவா?

மாணவர்: காரணம் வேண்டும் என்று நீங்கள் கூறுவது எதனால்? சற்று விளக்கிக்கூற வேண்டுகின்றேன்.

ஆசிரியர்: எந்த ஒன்றும் இடையில் வந்து சேருமானால், அதற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும். இதை விளக்குவதற்கு ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். ஒருவர் திருமணமே வேண்டா என்று வைராக்கியத்தோடு இருந்து விட்டார். வயது நாற்பதுக்கு மேல் ஆகிவிட்டது. தனியாகவே காலந்தள்ளி வந்தார். ஒருநாள் ஓர் அதிசயம் நடந்தது. அவர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வீட்டிற்கு அழைத்து வந்து குடும்பம் நடத்தத் தொடங்கி விட்டார்! அந்தப் பெண்ணைத் திருமணம் முடிப்பதற்கு எது காரணமாக இருக்கும் என்பது பலரும் ஆர்வமாய் கேட்கும் கேள்வியாக அமைந்துவிட்டது. அவர் முதலில் இருந்தபடி பின்னும் இருந்தால் அதற்குக் காரணம் தேடவேண்டியதில்லை. அப்படியின்றி இடையில் அந்தப் பெண் வந்து சேர்ந்தாள் என்றால் அம் மாறுதலுக்குக் காரணம் இருக்கத்தானே வேண்டும். இப்படி இடையில் வந்து சேர்கின்ற எந்நிகழ்வையும் ஆராய்ந்தால் அதற்குத் தக்க காரணம் இருத்தல் புலனாகும். அம்முறையில், முதலில் தூயதாய் இருந்த உயிரிடத்தில் பின்னே ஆணவ மலம் சேர்ந்தது என்றால் அதற்கு ஒரு காரணம் வேண்டும். அதற்கு நீ என்ன காரணம் சொல்வாய்?

மாணவர்: மாணவர்: தூயதாகிய உயிர் தனக்குக் கேடு விளைவிப்பதாகிய ஆணவத்தைத் தானே சென்று பற்றியிராது. ஆணவம் அறிவற்ற சடம் ஆதலால் அதுவும் உயிரை அறிந்து சென்று பற்றியிராது. இனி, மூன்றாவது பொருளாகிய இறைவன் பேரருள் உடையவன் ஆதலால் உயிருக்குத் துன்பத்தைத் தருவதாகிய ஆணவத்தை அதனோடு சேர்த்திருக்க மாட்டான். ஆகவே, எந்த விதத்திலும் காரணம் சொல்ல வழியில்லை. மற்று, இப்படிக் கொண்டால் என்ன?

ஆசிரியர்: எப்படிக் கொள்ளலாம் என்று சொல்லுகிறாய்?

மாணவர்: காரணம் இல்லாமலே எப்படியோ வந்து பற்றியது என்று கொண்டால் என்ன?

ஆசிரியர்: அப்படிக் கொண்டால் முத்தி என்பதே இல்லையாகி விடும்.

மாணவர்: நீங்கள் சொல்வது விளங்கவில்லை. முத்தி என்பது எப்படி இல்லாமற் போகும்?

ஆசிரியர்: முத்தி என்பது என்ன?

மாணவர்: உயிர் மலமாகிய மாசு நீங்கித் தூய்மையாய் விளங்கும் நிலை.

ஆசிரியர்: முதலில் தூய்மையாய் இருந்த உயிரைப் பின்னே மலம் வந்து பற்றும் என்று நீ சொன்னாய்.

மாணவர்: ஆம்.

ஆசிரியர்: அவ்வாறு பற்றுவதற்குக் காரணம் வேண்டுவதில்லை. காரணம் இன்றியே வந்து பற்றும் என்பதாகவும் சொன்னாய்.

மாணவர்: ஆமாம்.

ஆசிரியர்: அப்படியானால் மலம் நீங்கி முத்திபெற்ற உயிரையும் பின்னர் அந்த மலம் வந்து பற்றக்கூடும் அல்லவா? அது பற்றுவதற்குக் காரணம் வேண்டா என்று நீயே சொல்லி விட்டாயே. காரணம் வேண்டாதபோது அஃது எப்பொழுது வேண்டுமானாலும் வந்து பற்றலாம்தானே. முதலில் தூய்மையாய் இருந்த உயிரை எப்படிக் காரணமின்றியே வந்து பற்றியதோ அப்படியே முத்தி பெற்றுத் தூய்மையாய் விளங்கும் உயிரையும் அது காரணமின்றியே பற்றும் என்று ஆகிறதே. அங்ஙனம் மறுபடியும் மலம் வந்து பற்றுமானால் அந்நிலை கட்டுநிலையேயன்றி எப்படி முத்தி நிலையாகும்? ஆதலால் காரணமின்றியே மலம் வந்து பற்றும் என்று சொன்னால் முத்தி என்பதே இல்லையாகி விடும் என்பதை உணர்வாயாக.

மாணவர்: இப்பொழுது நன்றாக விளங்கி விட்டது. ஆணவமலம் இடையிலே வந்து பற்றவில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். அங்ஙனமாயின் உயிருக்கு ஆணவ மலத்தின் தொடர்பு எப்படி ஏற்பட்டது?

ஆசிரியர்: உயிர் ஒரு காலத்தில் ஆணவ மலத்தின் தொடர்பு இன்றி இருந்தது என்று சொன்னால் அல்லவா அதன் தொடர்பு எப்படி ஏற்பட்டது என்ற கேள்வியே எழும். சைவ சித்தாந்தம் அப்படிச் சொல்லவில்லை. உயிர் என்று உண்டோ அன்றே அதனிடத்தில் ஆணவ மலம் உண்டு. ஆகவே உயிர் தொன்றுதொட்டு ஆணவ மலத்தோடு கூடியே உள்ளது என்பதை அறிவாயாக.

**குறிப்பு:**

ஆணவ மலத்தை "ஆசு" என்ற சொல்லால் குறிப்பிடும் வழக்கமுடையவர் நம் ஆசிரியர். ஆசு- குற்றம். சிவப்பிரகாசத்தில் இச்சொல்லாட்சியைப் பல இடங்களிற் காணலாம். இந்நூலிலும் முன்னர் "ஆசுடன் அடங்கப் போக்குமவன்" என வந்துள்ளமை நாம் அறிந்தது.

ஆதி- தொடக்கம் உள்ளது; ஒரு காலத்து வந்தது. அகவும்- அகப்படுத்திக் கொள்ளும்.

### 29. உயிரின் பக்குவ காலத்தில் ஆணவம் நீங்குவதாகும்.

ஒன்று மிகினும் ஒளிகவரா தேல் உள்ளம்
என்றும் அகலாது இருள்.

**பொருள்:**

உயிரிடத்தில் ஆணவ இருள் இப்பொழுது மிகுந்திருந்தாலும் உயிர் திருவருள் ஒளியைச் சிறிது சிறிதாகப் பெற்று அந்த ஆணவ இருளைப் படிப்படியாக நீக்கிக் கொள்ளும். அங்ஙனம் இறைவனது திருவருள் ஒளியை உயிர் உணரவில்லை என்றால் ஆணவ இருளினின்றும் அஃது என்றுமே விடுபடாது போகும்.

**சொற்பொருள்:**

ஒன்று- ஆணவ மலமாகிய இருள், மிகினும்- உயிரிடத்தில் மிகுந்திருந்தாலும் (உயிர் திருவருள் ஒளியைச் சிறிது சிறிதாகப் பெற்று அந்த ஆணவ இருளைப் படிப்படியாக

நீக்கிக் கொள்ளும்) உள்ளம்- உயிர், ஒளிகவராதேல்- அவ்வாறு திருவருள் ஒளியைச் சிறிது சிறிதாக உணரவில்லையாயின், இருள் என்றும் அகலாது- ஆணவ இருள் அவ்வுயிரை விட்டு என்றுமே நீங்காது.

**விளக்கம்:**

உயிரிடத்தில் இருளும் உண்டு; ஒளியும் உண்டு. இருள் என்பது ஆணவ மலம்; ஒளி என்பது திருவருட் சக்தி.

உயிர் தனது பக்குவமின்மை காரணமாக நுண்ணிய திருவருள் ஒளியைப் பற்ற மாட்டாமல் பருப் பொருளாகிய ஆணவ இருளில் அகப்பட்டு அதில் அழுந்தி நிற்கிறது. இச்செய்தி நாம் முன்னே அறிந்ததுதான்.

இருளில் நிற்போர் என்றுமே இருளில் இருந்து விடுவதில்லை. இருளில் இருக்க விரும்புவதும் இல்லை. அவ்விருளை நீக்கிக் கொள்ளவே யாவரும் முயல்கின்றனர்; வழி தேடுகின்றனர். அதுபோல ஆணவமாகிய இருளிடை அகப்பட்டவரும் அதனை நீக்கிக் கொள்ளும் முயற்சியை இன்று மேற்கொள்ளவில்லையென்றாலும் இனிவருங் காலத்திலேனும் மேற்கொள்வர் என்பது உறுதி.

உலகில் அறியாமையில் நின்றோர் பின்னர் அதிலிருந்து நீங்கி அறிவு பெறுவதைக் காண்கிறோம். இஃது எதைக் காட்டுகிறது? ஆணவத்தில் பிணிப்புற்றவர் சிறிது சிறிதாக அதிலிருந்து நீங்கி வருகின்றனர் என்பதையே இது காட்டுகிறது. மாந்தர் பக்குவ நிலையில் உயர்ந்து, உயர்ந்து இறைவனைப் படிப்படியாக உணர்ந்து உணர்ந்து முடிவில் ஆணவத்தினின்றும் முற்றாக விடுபட்டு இறைவனை அடைவர்.

ஆசிரியர் உமாபதி சிவம் சிவப்பிரகாச நூலில் உயிர்களைக் குறிக்க வரும்போது "ஓங்கி வரும் பல வுயிர்கள்" (செ.33) என்கிறார். அறியாமையிற் கிடக்கின்ற உயிர்கள் ஆணவ இருளின் வலி முழுதையும் கெடுக்கும் பேரொளியாகிய திருவருளைப் படிப்படியாகப் பற்றிக்கொண்டு மேனிலை அடைதற்குரியவை என்பது கருதியே "ஓங்கி வரும்" என்ற அடைமொழி கொடுத்துக் கூறினார் எனலாம்.

(தொடரும்...

# குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| செப்ரெம்பர் 09 | ஆவணி 23 | புதன் | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப்ரெம்பர் 27 | புரட்டாதி 10 | ஞாயிறு | கடையிற்சுவாமி |
| ஒக்டோபர் 10 | புரட்டாதி 23 | சனி | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக்டோபர் 13 | புரட்டாதி 26 | செவ்வாய் | சங்கரபண்டிதர் |
| ஒக்டோபர் 27 | ஐப்பசி 10 | செவ்வாய் | திருமூலர் |

# இந்து மதத்தில் பிரார்த்தனை தரும் வெற்றி

-திரு வி. செல்வரத்தினம் அவர்கள்-

நம்பிக்கையோடு செய்யப்படும் பிரார்த்தனை துயரப்படுவோரின் துயரைப் போக்கும். இது நோயாளிகளின் உயிர்களை மீட்கும் என்கிறது வேதம். யோகத்திற்கும் தியானத்திற்கும் அடுத்த நிலையில் எல்லோராலும் கைக்கொள்ளக் கூடியது பிரார்த்தனையாகும்.

பிரார்த்தனை என்பது ஒரு மகத்தான சக்தி. மனதை ஒருமுகப்படுத்தி இறைவனிடம் இணைந்திருக்கும் முறையே பிரார்த்தனையாகும்.

மனித வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களைப் போக்குவதற்கு இந்துமதம் பிரார்த்தனையைச் சர்வ சஞ்சீவியாகக் கொண்டிருக்கிறது. பிரார்த்தனையை முறையாகச் செய்தால் பெரும் வெற்றி கிட்டும். மனநிம்மதியைப் பெறுவதற்காகப் பலரும் ஏதோ செயல்களையெல்லாம் செய்து நிம்மதியையடையப் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நிம்மதி கிடைப்பதில்லை. பிரார்த்தனை ஒன்றுதான் மனிதனுக்கு உண்மையான நிம்மதியைக் கொடுத்து மனதைத் தூய்மையாக்குகின்றது.

மேல்நாடுகளிலும்கூட எந்த நல்ல காரியம் செய்யத்தொடங்கும்போதும் பிரார்த்தனை யுடனேயே ஆரம்பிக்கிறார்கள். இப்படியும் ஒரு பிரார்த்தனை இறைவனே!. இந்த நாட்டையும் மக்களையும் பிடித்துள்ள கஷ்டங்களை நீக்கிச் சரியான பாதையில் வழிகாட்டு" என்பதே அந்தப் பிரார்த்தனையாகும். மேலும் இறைவனுக்குப் பூஜை பிணக்காரம் செய்வது மட்டும் பிரார்த்தனையாகாது.

எமக்குத் தேவை ஏற்படும்போதோ கஷ்டம் வரும்போதோ, பயத்தினால் துன்பம் ஏற்படும்போதோ, ஆசை ஏற்பட்டு நிறைவேறாதபோதோ பிரார்த்தனை செய்து அவற்றைப் பெறலாம்.

மனிதன் தன்னிடத்திலே உண்மையான வலிமையை வல்லமையைத் தேக்கி வைத்துக் கொள்ளவும் சாதனமாகவும் பிரார்த்தனை திகழ்கிறது.

மனதைச் சிதற விடாமல் ஒருமுகப்படுத்தி எண்ணங்களுக்கு வலிமை ஏற்றுச் செய்யப் படும் எந்த ஒரு முயற்சியும் - பிரார்த்தனையும் சந்தேகமற்ற வெற்றியை நமக்கு அளிக்கும் என்பது மனோதத்துவ விளக்கமாகும்.

மன நிலைப்படுத்துகின்ற பொழுது வேறு தகாத எண்ணங்கள் புகாவண்ணம் ஒன்றையே மனத்தில் நிறுத்தி மன ஒருமைப்பாட்டிற்கு முயல்வதே பிரார்த்தனை என்று கூறுகிறது வேதம்.

"நீ இறைவனிடம் உன் சக்திக்குத் தகுந்த வேலைக்காகப் பிரார்த்தனை செய்யாதே; வேலைக்குத் தகுந்த சக்திக்குப் பிரார்த்தனை செய்" என்று கூறுகிறார் மேல்நாட்டு அறிஞர் பிஷப்பிலிப் புருக்ஸ்.

மேலும் ஸ்ரீமதி ஆஷ்கூட், நல்லவைகளை அடைய நீங்கள் பாடுபட்டு உழையுங்கள், நல்ல காரணங்களுக்காக நீங்கள் செய்யும் உழைப்பு கடவுளுக்குச் செய்யும் பிரார்த்தனையாக அமைகிறது என்கிறார்.

ஆம்! பிரார்த்தனை என்பது கடவுளுடனான சம்பாஷணையாகும். அது மனத்தின் பாரத்தைக் குறைக்கிறது.

மேகங்கள் கலையும் வரை பொறுத்திருந்தால்த்தான் சூரிய ஒளியைப் பார்க்க இயலும். அதேபோல் அஞ்ஞானம் அகலும் வரையில் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால்த்தான் இறையருள் கிட்டும்.

நாள்தோறும் சில நிமிடங்களைப் பிரார்த்தனைக்காக ஒதுக்கி வையுங்கள். வேறு சிந்தனையின்றி கடவுளைப் பற்றி மட்டும் பிரார்த்தனை செய்யுங்கள்.

பின்னர் தங்கள் பிரச்சினைகளை இறைவனிடம் சாதாரண வார்த்தைகளால் முறையிடுங்கள். உங்கள் பிரார்த்தனைகள் உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் முழு நிம்மதியைத் தரும் என நம்புங்கள்.

பிரார்த்தனையின்போது தீய எண்ணங்கள் ஏற்படாமல் தூய உள்ளத்தோடு செயற்படுங்கள். நாம் பிறருக்காகப் பிரார்த்தனை செய்யும்போது ஆண்டவன் நமக்கு மிகவும் அருகில் இருக்கின்றான் என்பதை உணருங்கள்.

நாம் கடவுள் நினைப்புடன் என்றும் வாழ வேண்டியவர்கள். அதற்கு ஒரு வழி பிரார்த்தனையாகும். இறைவனுடன் கொள்ளுகின்ற உறவுதான் பிரார்த்தனை. அதன்மூலம் எமது எண்ணங்கள் இறைவனைப் பற்றியதாக மேல்நிலைக்கு உயர்த்துகிறோம்.

பிரார்த்தனை ஆத்மாவின் அத்தியாவசியத் தேவையாகும். ஒவ்வொரு முறையும் கடவுளின் பெயரைத் திரும்பச் சொல்லும்போதும் கடவுளின் அருகே நீங்கள் வருகிறீர்கள் என்கிறார் மகாத்மா காந்தியடிகள். அவர் பிரார்த்தனைமூலம் தான் மாபெரும் சாதனைகளை எல்லாம் நிலைநாட்டினார். நாம் கடவுளுக்கு அருகில் இருக்கும்போது எவ்வித அச்சமும் இருக்காது.

கடவுளைச் சிந்தித்தல், துதித்தல், நாமங்களை உச்சரித்தல், தோத்திரஞ் செய்தல் என்பவற்றில் ஈடுபடும் நேரம் தவப்பொழுதாக அமைகிறது. அவனைப் பற்றி "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்கிறார் மாணிக்கவாசகர்.

## எளிமையான வழிபாடு

தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான் எல்லா வழிபாடுகளினதும் சாராம்சமாகும். தீமை செய்பவன் தனக்கும் மற்றவர்களுக்கும் தீமை செய் கிறான். நன்மை செய்பவன் தனக்கும் பிறர்க்கும் நன்மையே செய்கின்றான். உடலும் உள்ளமும் தூய்மையின்றி கோயிலுக் குப் போவதும் வழிபடுவதும் பயனற்றதாகும். நேர்மையுடனும் தைரியமாகவும் பக்திச் சிரத்தையுடனும் வாழ்ந்தால் இறை வனை அடைவது உறுதி.

(தொடர்ச்சி...

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

– சுவாமி கிருஸ்ணானந்தா –
தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## 8.2. பிரமவித்தை

எல்லாம் எம்மைவிட்டுக் கழிகின்றபோது ஒன்றுமட்டும் எஞ்சியிருக்கின்றது. அந்த ஒன்றே பகவத்கீதையில் அடக்கப்பட்டுள்ள பிரமவித்தை பற்றிய தேடலின் குறிக்கோளாகும். அந்தக் குறிக்கோள் பிரமத்தைப் பற்றியதாகும். அது எதனையும் சாராத பூரணத்துவத்தைப் பற்றியது ஆகும். அதற்கு மேலும் அப்பால் செல்லமுடியாத உண்மையினையே அந்தப் பூரணத்துவம் என்று அழைக்கப்படுகிறது. அது அவ்வாறு அழைக்கப்படுவதற்கான காரணம், அது எதனையும் சாராது தனித்து நிற்கக்கூடியதாக இருப்பதனாலேயே ஆகும். அது எதையும் சாராத அறியாப் பொருளாகும். சமூகரீதியாக நீ என்னைச் சார்ந்திருக்கின்றாய்; நான் உன்னைச் சார்ந்திருக்கின்றேன். எனவே எமது நடைமுறை வாழ்க்கை அனுபவம் பரஸ்பரம் ஒருவரை மற்றவர் சார்ந்ததாகவே உள்ளது. அதாவது, அவ்வனுபவம் ஒன்றில் ஒன்று பரஸ்பரம் சார்ந்து தங்கியே இருக்கின்றது. ஆனால் பரப்பிரமமான பூரணத்துவமோ தனது இயல்புக்கும், தனது பண்புகளுக்கும், அவற்றை விளக்குவதற்கும் எதனையும் சார்ந்து தங்கியிருப்பதில்லை. எம்மைப் பொறுத்தவரையிலும், மற்று எதனைப் பொறுத்தவரையிலும் எமது இருப்பு மற்றவற்றின் இருப்பிலேயே தங்கி உள்ளது. உதாரணமாக இவ்வுலகில் எமது வாழ்க்கைக்காக நாம் பல்வேறு காரணிகளில் தங்கி இருக்கின்றோம். எமக்குச் சூரிய ஒளி, நீர், காற்று, உணவு, சமூக ஒத்துழைப்பு, பாதுகாப்பு இவை முதலான பல விடயங்கள் தேவையாக இருக்கின்றன. எமக்குப் புறத்தே உள்ள, நாம் தங்கியிருக்கின்ற, இவ்விடயங்கள் எமக்குக் கிடைக்காவிட்டால் அதன் விளைவாக எமது தனிப்பட்ட உயிர்வாழ்க்கை ஒரு சில தினங்களில் மறைந்து போய்விடும். இதனால் நாம் எமக்கென்று சுதந்திரமான அந்தஸ்து ஏதும் இல்லாதவர்களாகவே இருக்கின்றோம். நாம் எமது வாழ்க்கைக்கும், எமது இருப்புக்கும் மற்றவர்களில் தங்கி இருக்கின்றோம் இந்த உலகத்தில் தனிப்பட்டவர்கள், வஸ்துகள், பண்புகள், யாவும் பரஸ்பரம் தங்கி இருக்கின்றன. எனவே நாம் இந்த உலகம், சார்பானது என்றும், பூரண உண்மைத் தன்மை இல்லாதது என்றும் கூறுகின்றோம்.

எனினும், இந்த உலகத்திலுள்ள வஸ்துக்களின் சார்புத் தன்மையானது சார்புத் தன்மை இல்லாத ஒன்றின் இருப்புக்கான சாத்தியப்பாட்டைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. வஸ்துகள் சார்புத்தன்மை உடையன என்று எம்மை உணரச் செய்யும் ஏதோ ஒன்று இல்லை எனின் சார்புத் தன்மை பற்றிய கருத்து எமக்கு எழ முடியாது. வஸ்துக்களின் சார்புத்தன்மையை எம்மை உணர வைக்கக்கூடிய அந்த ஒன்று, தானே சார்புத்தன்மை

உள்ளதாக இருக்க முடியாது. எனவே சார்புத்தன்மை இல்லாத அந்த ஒன்றின் இருப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய அத்தியாவசியம் எமக்கு உள்ளது. உபநிடதங்களும் அவற்றைப் போன்ற ஆன்மீக நூல்களும் அதனைப் பரப்பிரமம் என்று பெயரிட்டு அழைக்கின்றது. எமது சொந்தப் புரிந்துகொள்ளலுக்கான விபரத்தின் பொருட்டு நாம் கொடுக்கின்ற ஒரு பெயரே பிரமம் என்பது ஆகும். எமது மனங்களைக் கொண்டு நாம் உணரக்கூடிய அல்லது எமது கண்களைக் கொண்டு நாம் பார்க்கக்கூடிய எதனையும் கடந்ததாகவே அது இருக்கின்றது. அந்தப் பூரணத்துவம் பற்றிய அறிவைத் தரும் பிரம்ம வித்தையே பகவத்கீதை ஆகும். பகவத்கீதையின் ஒவ்வொரு பாட முடிவிலும் அது பிரமவித்தை என்றே சுட்டப்படுகிறது.

## 8.3. உபநிடதங்கள்

பகவத்கீதையே ஒரு உபநிடதம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆனால் சாதாரண கருத்தில் அப்படிக் கூறுவது மிகப் புதுமையான ஒன்றாகும். நாமரூப வடிவங்களில் பகட்டாகத் தோன்றுவதற்குப் பின்னால் உள்ள வஸ்துக்களின் முக்கியத்துவத்தினுடைய ஆழங்களை அளந்து அறியும் ஆழ்ந்த மறைபொருள் போதனையே அதுவாகும். ஓர் உபநிடதம் என்றால் அது இரகசியமான மறைபொருள் போதனை ஆகும். கண்களைக் கொண்டு காணமுடியாத ஒன்றைப் பற்றியதாதலால் உபநிடதம் இரகசியமான மறைபொருளாகும். அது நாம் பார்க்கின்ற புறத்தோற்றங்களோடு தொடர்புடையது அன்று. உலகத்தின் நாமரூபங்கள் அந்த உபநிடதத்தின் ஆய்வுப் பொருள் அல்ல. அந்த நாமரூபங்களின் பின்னாலுள்ள ஒன்று எப்படி அவற்றோடு உறவு கொண்டுள்ளது என்பதே அதன் ஆய்வுப் பொருளாகும். அவற்றோடு அதனுடைய தொடர்பைப் புலன்கள் உணரமுடியாது. மனத்தினால்கூடப் போதியளவு சிந்திக்க முடியாது. இதனாலேயே அது இரகசியமான மறைபொருள் எனப்படுகிறது. அது இரகசியமானது ஆகவே அவ்வளவுக்குக் கருதப்படுவதால் அது ஒரு மறைபொருள் பற்றிய போதனை ஆகும். அதுவே உபநிடதம் ஆகும். உபநிடதங்கள் அவ்வாறு மறைபொருளின் போதனை ஆக இருப்பதனால் அவற்றின் போதனைகளது சாராம்சமாகக் கருதப்படும் பகவத்கீதையும் ஓர் உபநிடதம் ஆகும். மேலும் கீதையின் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அது "இது பகவத்கீதை என்னும் உபநிடதங்கள்" என்று பன்மையிலேயே குறிப்பிடப்படுவது எமக்குச் சுவாரசியமான ஒன்றாகவும் உள்ளது.

இந்தவகையில் கீதை ஓர் உபநிடதம் மட்டும் அன்று. அது சுருக்கமாக ஒன்று படுத்தப்பட்ட மிகச்சக்தி வாய்ந்த உபநிடதங்களாகவே தோன்றுகிறது. எனவே கீதையின் ஒவ்வொரு பாடமுமே ஒவ்வோர் உபநிடதமாகக் கொள்ளமுடியும். அதன் ஒவ்வொரு பாடமும் அதன் நிலையினால் ஒரு செய்தியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பகவத்கீதையின் ஒரு தனிச்சுலோகம்கூட ஒரு செய்தியாகக் கருதப்படக்கூடும் என்று கருதும் மனிதர்களும் அன்றுமுதல் இன்றுவரை இருந்து வந்திருக்கின்றார்கள். பகவத்கீதையின் சாதகர்கள் ஒரு சுலோகத்தில் இருந்து கூடத் தமது தூண்டுதலைப் பெற்று வந்திருக்கின்றனர். உலகில் ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கும்போது தனது வாழ்க்கையின் சிக்கல்களில் இருந்து தன்னை மீட்டெடுத்து உயர்த்திக் கொள்ள அவர் பகவத்கீதையின் எந்த ஒரு பக்கத்தைப் புரட்டினாலும் உடனடியாகத் தனது இதயத்தை ஊக்கப்படுத்தக்கூடிய ஒரு செய்தியை அங்கே காணலாம். எனவே அது அந்த உபநிடதங்களின் பன்மைத் தன்மையிலுள்ள

விசேடம் ஆகும். எனவே அந்த வகையில் அது ஒரு உபநிடதம் மட்டும் அன்று. எனவே எல்லா உபநிடதங்களின் முக்கிய மேலான சாராம்சத்தின் சுருக்கமாகவே பகவத்கீதை திகழ்கிறது.

### 8.4. கீதைப் பாடல்கள்

பகவத்கீதை எவ்வாறு உபநிடதங்களைப் பொறுத்தவரையில் பன்மையில் கூறப்படுகிறதோ அவ்வாறே அது கடவுளின் பாடல் மட்டுமன்றிப் "பாடல்கள்" என்றே ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பல்வேறு பாடங்களுக்கு ஊடாகவும் பல செய்திகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. மனித இயல்பில் கருதக்கூடிய ஒவ்வொரு நோய்க்கும் அது மருந்தாக அமைகிறது. அதேவேளை அது எல்லா ஆன்மீக சாத்திரங்களினதும் சாரமாகவும் கருதப்படுகின்றது. எங்கெங்கெல்லாம் என்னென்ன படிப்பினைகள் உள்ளனவோ அவற்றைத் தம்முள்ளே கொண்ட எல்லாச் சாத்திரங்களையும் ஏதோ ஒரு வடிவில் பகவத்கீதையில் காணலாம்.

### 8.5. மறைபொருள் பற்றிய கோட்பாடு

பகவத்கீதை மிக இரகசியமான மறைபொருள் பற்றிய ஒரு போதனை ஆகும். அது நாம் காணுகின்ற தோற்றங்கள்மீது நாம் கொண்டுள்ள பற்று உணர்வை மட்டும் திருப்தி செய்யாது அவை எல்லாவற்றுக்கும் பின்னணியில் மறைந்துள்ள மெய்ப்பொருளின் போதனையையும் நமக்குத் தருகிறது. ஓர் உணர்ச்சியைத் தற்காலிகமாகத் தூண்டுவதன்மூலம் எமது கற்பனையைத் திருப்தி செய்வதற்காக மட்டுமன்றி மெய்ப்பொருள் என்ற வார்த்தைக்குரிய முடிவான அர்த்தத்தில் எமக்கு நன்மை புரியும் உள்நோக்கத்தை அப்போதனை கொண்டிருக்கிறது. இது மெய்ப்பொருளின் இருப்புப் பற்றிய ஓர் அறிவு சார்ந்த கோட்பாட்டு வகையிலான செய்தி மட்டுமன்று. ஆனால் அம்மெய்ப்பொருளின் இயல்பு பற்றிய கோட்பாடு என்ற விசேட அம்சமும் அதில் உள்ளது உண்மையே.

### 8.6. யோகசாத்திரம்

பகவத்கீதையின் போதனை அம்மெய்ப்பொருளை உணர்ந்து அதனை அடைவதற்கான பாதையில் செல்வதற்கு வேண்டிய நடைமுறை வழிகாட்டலையும் தருகிறது. இந்த வகையில் பகவத்கீதை பிரம வித்தை மட்டுமன்றி ஒரு யோக சாத்திரமும் ஆகும். போதனையின் இந்த இரண்டு அம்சங்களையும் இணைத்துத் தரக்கூடிய வேறு சில நூல்களை மட்டுமே எம்மால் கண்டுகொள்ள முடியும். எமது வாழ்க்கையின் ஒரு பக்கத்தை மட்டும் அழுத்திக் கூறாது அவ்வாழ்க்கையின் எல்லாப் பக்கங்களையுமே சமனாக அழுத்திக் கூறுகிறது. எனவே இது ஒரு கோட்பாடாக இருக்கின்ற அதேசமயம் ஒரு நடைமுறையாகவும் உள்ளது. அதாவது, அது முதல் கோட்பாடாகவும் பின்னர் அக்கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் நடைமுறையாகவும் அமைகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட செயலிலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய நுண்முறை அல்லது நடைமுறையின் விளக்கமே கோட்பாடு என்று அழைக் கப்படுகிறது.

பகவத்கீதைக் கோட்பாட்டை நாம் நன்றாகப் புரிந்துகொண்டு விடுவோமாயின் எமது நாளாந்த வாழ்க்கையில் எப்படி அதனைச் செயற்படுத்துவது என்பதை நாம் அறிவோம். அவ்வாறு வாழ்க்கையை வாழும்போதே அக்கோட்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டு வாழ்வதே நடைமுறை ஆகும். எனவே பிரமவித்தையாகவும் யோக சாத்திரமாகவும் உள்ள பகவத்கீதை எம்மிடத்தே உள்ளது. அது பரப்பிரமம் பற்றிய விஞ்ஞானமாகவும் யோகம் பற்றிய நடைமுறைப் போதனையாகவும் அமைகிறது. அந்த யோகம் அந்தப் பரப்பிரமத்துடன் நம்மைத் தொடர்பு கொள்ளவைக்கக் கூடிய ஒரு கலை ஆகும்.

(தொடரும்...

## செல்வச் சந்நிதிப் பதிக்கு வாருங்கள்!

செல்வச் சந்நிதிப் பதிக்கு வாருங்கள்! - எங்கள்
செல்வமுத்துக் குமரன் புகழ் பாடுங்கள்!
வல்லமைகள் தந்து எம்மை வாழவைப்பான்! - இங்கு
வருந்துயர், பசிப்பிணிகள் போக்கி நிற்பான்!!

ஆற்றங்கரை மரநிழலில் கோவில் கொண்டான்! - தன்னை
அண்டிவரும் தொண்டருக்கு அருள்புரிவான்!
போற்றும் அடியார்கள் குறை தீர்த்து வைப்பான்! - இந்தப்
புவிவாழ்வில் எமக்கென்றும் துணை வருவான்!

நேர்த்திக் கடன் நிறைவேற்ற நிதம் வருவார்! - பக்தர்
நெஞ்சார நினைந்தவரின் பதம் பணிவார்!
பார்க்கின்ற இடமெல்லாம் பக்திமயம்! - நிதம்
பணிந்தவனைத் தொழுதாலோ, இல்லை பயம்!

அலைமோதும் கடலும் அர்த்து வாழ்த்துரைக்கும்! தொண்டைமான்
ஆறுமங்கு சலசலத்தே புகழ் கூறும்!
தலையாய பணிகள் முருகன் அருளால் சிறக்கும்! - அந்தத்
தலைவனைப் பாட நெஞ்சில் கவி பிறக்கும்!

காவடிகள் ஆடிவரும் சந்நிதியிலே! - பக்தர்
கந்தன் புகழ் பாடிநிற்பார் களிப்பினிலே!
ஆவலொடு அவன் அருளைப் பெறுவதற்கே - மக்கள்.
ஆயிரமாய் கூடிடுவார் அவன் தலத்தே!

-கி. குலசேகரன்-

# எதிர்த்து நில்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஒரு நல்ல வீரத் துறவியாவர். மிக இளமையில் துறவு மேற்கொண்ட வங்காள மைந்தன். அசகாய சூரர். அப்படியானவர் ஆறு குரங்குகளின் சேட்டை பொறுக்கமுடியாது அவதிப்பட்டார் என்றால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆகவேண்டும். அன்றொருநாள் வழியில் சென்றவரைக் கண்ட குரங்குகள் துரத்தின. பயந்து ஓடிக்கொண்டிருந்தவரைக் கண்ட பெரியவரொருவர் "எங்கே ஓடுகின்றீர்" என்றார். ஐயா! குரங்குகள் துரத்தி வருவது தெரியவில்லையா? என்றார். நகைத்த பெரியவர் "தம்பி; அது தான் குரங்கு; அதன் குணம் அறியாது கஷ்டப்படுகிறீர். அது கண்டது செய்யும். அதை ஓடி எவராலும் வெல்ல முடியாது." ஆம் ஐயா; தாங்கள் சொல்வது முற்றிலும் சரி. நான் ஓட அவை துரத்துகின்றன.

"சிறிய தடியெடுத்து அடிக்கப் போனால் அவை பெரிய கொட்டனோடு வருகின்றன. சிறிய கல் எறிந்தால் பாறாங்கல்லைக் கொண்டு மண்டையை உடைக்க உருட்டுகின்றன. மாளவேண்டியதுதானா? ஐயா; மீளமுடியாதா? சொல்லுங்கள்" தம்பீ! அவற்றை "எதிர்த்து நில்" "நீ ஓடாது நில்; திரும்பிப் பார்; குரங்குகளும் நின்று திரும்புவதைக் காண்பாய். நீ அவ்விடத்தில் சம்மணம் கட்டி உட்கார். அவைகளும் அவ்வாறே உட்காருவதைக் காண்பாய்; ஏனெனில் குரங்கு கண்டது செய்யும். நீவிர் குருவாக அமர்ந்து வெண்ணீறு பூசிப் பூசகராகிப் பூசை செய்வதுபோல் பாசாங்கு செய். அவையும் பூசை செய்யும். கள்ளுமரமேறிக் கள்ளு முட்டியை அகற்றிக் கள் குடிப்பதுபோல் பாசாங்கு பண்ணு குரங்குகளும் உண்மையாகவே கள்ளை மாந்தி வெறியேறி மயங்கும். மரத்திலிருந்து ஓர் இளநீர் பறித்துவந்து கத்தியினால் சிறிய துளை செய்து இளநீரைப் பருகி வழுவலை உண்க."

குரங்குகளும் ஆளுக்கோர் இளநீருடன் இறங்கி உனது கத்தியினால் துளைசெய்து இளநீர் குடித்து வழுவலை வழித்துத் திரட்டி விடவும் முடியாது தின்னவும் இயலாது ஒன்றின் தலையில் குரும்பையால் மோதி இறக்கவும் கூடும். ஏனெனில் குரங்கு "கடித்தது கரும்பு பிடித்தது இரும்பு". அத்தோடு கள்வெறி மயக்கமும் உண்டு. "குல்லா வியாபாரி ஒருவர் குரங்குகளோடு பட்ட பாடு நாம் சிறுவயதில் அறிந்ததுதானே?" ஆம் ஐயா! பள்ளியிலே பாடம் நடாத்திய குரங்கு பற்றியும் அறிவேன்.

"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" ஆயினும் நான் சொன்னபடி கேட்டு அதன்படி நடந்து அமைதிபெற்று கொண்டீர். இங்கு இதனூடு ஒரு தத்துவக் கருத்தும் வெளிப்படக் காணலாம். ஆறு குரங்குகள் எனப்படுவன நம் மனதில் படிந்துள்ள காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம் எனும் தீய குணங்கள் ஆறினையுமே குறிப்பனவாகும்.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

போகும் வழியில் காலைத் தேநீர் அருந்திச் செல்லலாம் என ஓர் சாலைஓரக் கடைக்குச் செல்கிறோம். தற்கால நவீன ஹோட்டல்களைப் போலில்லை. பழமைபேணும் வகையில் இருக்கைகளும் அடுப்புஉட்பட உபகரணங்களும் கையாளப்படுகின்றன. எளிமையுடன் மண்சட்டி பானைகளில் உணவு வகைகள் பேணப்பட்டிருந்தமையும் அவதானிக்க முடிந்தது. தேனீருக்கும் காலைச் சிற்றுண்டிக்குமாக ஓடர் கொடுத்தபொழுது அதன் முதலாளியே இவற்றைத் தயாரித்தவண்ணம் எங்களையும் உபசரித்தமை வியப்பைத் தந்தது. அத்துடன் அவர்களிற்கும் நல்லைக் கந்தனுக்கும் ஓர் தொடர்பு இருந்ததையும் அவதானிக்க முடிந்தது. ஆம் அந்த முதலாளி இங்கே போர்க்காலத்தில் இராணுவத்தில் பணியாற்றிய சிங்கள சகோதரர். அவர் யாழில் இருந்தவேளை இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணைத் துணைவியாக்கி அவர்களுக்கு ஒரு மகள். இக்குடும்பம் நல்லை முருகன்மீது பக்தி கொண்டவர்கள். இவர்கள் இப்போ தம் ஜீவனோபாயமாக இக்கடையை நடாத்திக் கொண்டிருப்பதையும் அறியமுடிந்தது. சுடச்சுட றொட்டியும் ரீயும் அருந்தியபின் சுவாமிகள் நாம் போகும் வழிதானே பொலநறுவைப் புராதன சிவனையும் ஒருமுறை தரிசித்துச் செல்லலாம்தானே என்று கூற எல்லோரும் அப்புராதன சிவன் ஆலயத்திற்குச் சென்றோம்.

ஆம்! அன்று 07.02.2015 சனி காலை 10.00 - 11.00 மணிவரையான பொழுதில் நாம் கண்டவற்றை அப்படியே எனது பாணியில் தருகின்றேன். இதனை இப்படியே இசையுடன் ஒரு அரைமணிநேர இசை அருளுரையாக ஓம் ரீ.வி நேயர்கள் பலர் கேட்டிருந்தார்கள். அதனைச் சுருக்கி ஞானச்சுடர் வாசகர்களுடன் பகிர ஆசைப்படுகிறேன்.

பண்டைய தலைநகராம் பாங்கான பொலநறுவையில்<br>
அன்று நான் கண்டவற்றை எடுத்தியம்புகின்றேன் உமக்கு<br>
அன்றோடு அருள்பொன்றி விடவில்லை என்று<br>
நன்றாகக் காட்டி நின்றார் நம் சிங்களச் சோதரர்கள்

சிங்களமும் செந்தமிழும் சேர்ந்தொலிக்கும் தீவின்<br>
எங்கும் எழில் ஓங்கும் அந்த பொலநறுவை மண்ணை<br>
பொங்கு புகழோடு ஆண்ட பராக்கிரமபாகு<br>
தங்கமென நெல் விளைக்க அமைத்த குளம் பார்த்தோம்

அருகினிலே அகழிதனில் அருவி நீரோட<br>
கருவறையை மட்டும் கொண்ட மண்டபத்தின் இலிங்க<br>
திருநிறை சிவனுக்கு எங்கள் சிங்களச் சோதரர்கள்<br>
அருமை மகவொன்றை வேண்டி அரும் பொங்கலிட்டார்.

ஆம் அன்பு வாசகர்களே அங்கே நாம் கண்ட காட்சிகள் இவை. கருவறை மட்டும் இடிபாடுகள் கொண்ட விதானத்துடன் காட்சி தருகிறது. ஏனைய மண்டபங்கள் இருந்த சான்றுகள் காணப்படுகின்றன.

கருவறையில் மூலஸ்தானத்தில் ஓர் லிங்கம் காணப்படுகிறது.

இதற்குக் கதவாக இப்போ எங்கள் மேசன்மார் கல் அரிக்கப் பாவிக்கும் கம்பிவலை பாவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் உக்கி ஒரு துவாரத்தினூடாக உள்ளே லிங்கத்தைப் பார்க்க முடிந்தது.

எங்கள் குழுவினர் தங்கள் கமராக்களுக்குள் இதனை அடக்கினர்.

அர்த்த மண்டபம் கூரையின்றிக் காணப்படுகின்றது.

நாங்கள் எதுவித முன்னேற்பாடுமின்றி வந்தமையினால் கற்பூர தீபம் மட்டும் ஏற்றி வழிபட முடிந்தது.

கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

கர்ப்பக்கிரகத்திற்கு ஒரு 20 மீற்றர் முன்பாக ஓர் கொன்றைமரம் அதன் கீழே 10-15kg அரிசி வேகக்கூடிய ஓர் பெரிய அலுமினியக் கிடாரத்தில் சிங்களச் சோதரர்களின் கூட்டம் ஒன்று மிகவும் பக்திபூர்வமாகப் பொங்கலிட்டுக் கொண்டிருந்தனர். 6-7 குடும்பத்தைச் சேர்ந்த 15-20பேர்.

அவர்களிடம் சென்று மெல்ல விசாரித்தபொழுது பின்வரும் தகவல்களைப் பெற முடிந்தது. இந்தக் காலத்திலும் இப்படி விசுவாசமுள்ள மக்கள் எங்களில் மட்டுமல்ல மாற்றுச் சமூகத்தினரிலும் இருக்கின்றார்களே என எண்ணத் தோன்றுகிறது. அதில்.

இந்த ஆலயத்தில் வந்து பொங்கலிட்டால் பிள்ளையில்லாதவர்களுக்கு பிள்ளைவரம் கிடைக்கும் என்று அங்கு அயல் கிராம மக்கள் பொங்குகின்றனர். இவர்கள் அருகிலுள்ள மின்னேரியாக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களிற் சில குடும்பத்தினர்க்கு பிள்ளைப் பாக்கியம் இல்லாதிருக்கின்றனர். இவர்களுக்காக சிவனை வேண்டிப் பொங்கலிடுகின்றனர்.

இதேபோல பொங்கலிட்டு பயன்பெற்ற குடும்பங்கள் பல இக்கிராமங்களில் உண்டென் றும் அதில் ஓரிரு குடும்பங்களும் இப்பொங்கலில் தங்கள் குழந்தைகள் சகிதம் வந்திருந்ததையும் அறிய முடிந்தது.

அது மட்டுமல்ல அதில் ஒருவரின் பெயர் ஸ்ரீபன் எனவும் அறியமுடிந்தது. அப்போ நீங்கள் கிறிஸ்தவரா என வினாவியபொழுது இல்லை ஐயா. எனது தந்தையாரின் உற்ற நண்பர் கிறீஸ்தவர் அவர் பெயர் ஸ்ரீபன். அவர் அகால மரணமாகிவிட்டார். அவரது நட்பின் வலிமையால் எனக்கு அவரது கிறிஸ்தவப் பெயரை எனது தந்தையார் வைத்துள்ளார். அவ்வளவே. எம்முடன் வந்தவர்கள் எல்லோரும் வாயடைத்து நின்றோம். சாதி, சமயம் என எமக்குள் அடிபடும் எம்மவர்களுக்கு அன்பின் வலிமையைக் காட்ட கந்தன் ஏற்படுத்திய காட்சியில் ஒரு பகுதி என்பது சிறியேனின் பணிவான கருத்து.

மந்திரமில்லை, பூசை இல்லை. ஏன் மணிகூட இல்லை, திருமுறை இல்லை. ஆனால் வழிபாடு நடக்கிறது. யாரோ ஒரு ஐயர் வெள்ளிக்கிழமைகளில் வருவாராம். கதவைத் திறந்து பூசை பண்ணுவாராம். கண்ணப்பன் பாணியில் அனைத்தும் கச்சிதமாக நடந்ததைக் கண்டோம்.

(காட்சி தொடரும்...

# சன்மார்க்க போதகங்கள்

– திரு கா. சின்னப்பா அவர்கள் –

அந்தணர்க் கழகு பந்த மகற்றல்
ஆறுதல் பெற்றிட நீறு புனைந்திடு
இறக்குமுன் தீவினை மறக்க முயற்சிசெய்
ஈற்றி லழியும் சோற்றுத் துருத்தி
உறவின ரெவரையும் மறவா திருந்திடு
ஊக்கமாய்த் தீமையை நீக்க முயற்சிசெய்
எத்தரு ணத்தும் சத்தியம் தவறேல்
ஏக்கம் மனதைத் தாக்குதல் நிச்சயம்
ஐய னருளால் உய்வதற் கெண்ணு
ஒப்புர வேற்றுத் தப்பிதம் தவிர்த்திடு
ஓர்ம முள்ள நீர்மையனா யிரு
ஔவையை மறப்போன் தவ்வையைச் சார்வன்
கன்ம வசப்படி நன்மை யணையும்
காலனை வெல்லும் சீலம் தேடு
கிட்ட விருக்கும் துட்டரை நீக்கு
கீத நாதனின் பாதம் பற்று
குருவிலா வித்தையால் ஒருபயனில்லை
கூற்றுதைத் தோனைப் போற்றிடு நிதமும்
கெட்ட குணத்தால் நட்டம் விளையும்
கேள்விமுயன்று வேள்வி விலக்கு
கைகூசாது செய்பல தர்மம்
கொடுப்போ ரெவரையும் தடுத்தல் தவறு
கோப மடக்கிப் பாவம் பகைத்திடு
சரியென் பதைநீ பெருமை யுடன்புரி
சாலம் செய்பவர் கோலம் கவனி
சித்திரப் பயிற்சி மெத்தவும் நன்று
சீதனம் நகைக்காய் மாதரை மணந்திடேல்
சுற்றத் தவர்க்கு நற்றுணை புரிந்திடு
சூடுடை யோரை நாடிடும் நோய்கள்
செய்யு முதவியை மெய்யன்போடு செய்
சேக்கிழார் புராணம் வாக்கினி லமைத்திடு
சைவ சமயம் மெய்பல உணர்த்தும்
சொல்வ தெதையும் நல்லா யுணர்ந்துசொல்

சோறிட் டவர்க்கு மாறு செய்யாதே
தந்தர மெதையும் சிந்தையா லகற்று
தாசிக ளெவரிலும் நேசம் வையாதே
திங்க ளணிந்த சங்கரன் பதம்துதி
தீமை மனதின் தூய்மையைக் கெடுக்கும்
துறவிக ளீரன்பதம் மறவ திருப்பர்
தூற்றும் பெண்களைக் கூற்றும் வெறுக்கும்
தெய்வ பக்தி உய்வதற் கேது
தேசத் தொண்டில் ஆசைவை யென்றும்
தையல ரெவர்க்கும் மெய்யன்பு காட்டு
தொந்தர வெதாலும் சிந்தையைக் கெடாதே
தோகையர்க் குதவி சாகும் வரைபுரி
நல்லவர்க் கொருவித அல்லலும் புரியேல்
நாவினா லனேக சேவைகள் புரியலாம்
நித்தமும் வாயால் அத்தனைப் போற்று
நீரிற் குமிழி பாரிலெம் தேகம்
நுட்ப புத்தியால் பெட்பெமெக் கமையும்
நூல்பல கற்கும் சால்பை யடைந்திடு
நெசவு தொழிலால் அசைவுறா திருந்திடு
நேர்மை நெறியால் பாரிற் புகழ்பெறு
நைந்து வருந்தும் மைந்தரைத் தேற்று
நொந்தவ ரெவரின் சிந்தையும் தேற்று
நோன்பிற் சிறந்தது மாண்புறு சீவியம்
பன்னரு நற்குணம் உன்னிடத் தமைத்திடு
பாவையர் கற்பைத் தேவரும் போற்றுவர்
பிழையை நீக்கி விழைவுடன் நன்மைசெய்
பீடுடன் எவர்க்கும் கூடிய உதவிசெய்
பெற்றோர்க் கென்றும் நற்றுணை புரிந்திடு
பேதமை நிறைந்த மாதரைத் திருத்து
பைகொடு போவோர் செய்வர் மாதீமை
பொன்றுங் காலம் என்றும் நிகழும்
போலிச் சைவர் சில மிழப்பர்
மனப்பெல வீனம் அனைத்தையும் கெடுக்கும்
மாசறு சிந்தை தேசுறச் செய்யும்
மின்னல் நேர்வாழ்வு தன்னை நம்பாதே
மீறும் மைந்தர் சோறிலா தலைவர்

முக்கா லமும்நீ தக்கது புரிந்திடு
மூட ருறவு கேடுறச் செய்யும்
மெத்த நல்ல சுத்தம் நாடு
மேலோர் வாழ்த்துச் சாலவும் நன்று
மைவிழி யாரில் வையா திருமனம்
மொழிபல கற்று எழிலுடன் வாழ்ந்திடு
மோரைப் பருகி வென்னீரையும் பாவி
வறுமை வரினும் சிறுமையை நாடேல்
வாட்ட முறாது நற்தேட்டம் பெருக்கு
விட்ட துர்ப்பழக்கம் தொட்டிடல் தீது
வீணரைக் கண்டு நாணுதல் நன்று
உல்கிலெப் பாசமும் மலைவுறச் செய்யும்
ஊரவர் வாழ்த்த நற்பேருடன் வாழ்ந்திடு
வெட்டெனப் பேசும் துட்டரை விலக்கு
வேலையில்லா தோர் சீல மிழப்பர்
வைதிடும் பழக்கம் செய்திடும் தீமை
ஒற்றுமை யெவர்க்கும் பெற்றிடும் நற்புகழ்
“ஓம்” என உரைப்போர் தீமையால் விலகுவர்.

## தொண்டைமானாற்றங்கரை உறைந்து அன்பர்க்கு கருணை மழை பொழி சந்நிதிப் பெருமானே

உன்பாத மலரின்றி உபசாந்தநிலை தருவதற்கு
உற்றதுணை பிறிதொன்றில்லை!
உன்நாம ஜெபமின்றி உள்ளங் குவிந்திட
உபாயமது வேறொன்றில்லை!!
உன் கருணையில்லையேல் என்கவலை தீராது!!
உண்மை இதில் ஐயமில்லை!!
பாராமுகம் செய்திடில் பக்தரும் ஏங்குவார்!!
பண்டிதரும் மதி மயங்குவார்!!
கன்னியர்கள் இருவருடன் என்னைக் கடாட்சம் வைத்து
அருளல் வேண்டும் தொண்டைமானாற்றங்கரை
உறைந்து அன்பர்க்கு கருணைமழை பொழி
சந்நிதிப் பெருமானே!!!

-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



–திரு இரா. செல்வவடிவேல்

ஸ்ரீ கருடபுராணம் எனும் நூல் என்னிடம் ஏற்படுத்திய தாக்கங்கள் அதிகம். இந்தப் புராணத்தின் கருப்பொருள் - நோக்கம் இன்றைய சமூகத்திற்கு எப்படியாவது சென்றடைய வேண்டும் என்று விரும்பினேன். இதன் காரணமாக ஆலயச் சொற்பொழிவுகளில் கருடபுராணக் கருத்துக்களை அதிகளவில் சொல்லி வந்தேன். கருடபுராணம் கேட்ட அன்பர்கள் என்னிடம் சில வினாக்களைக் கேட்டார்கள். அவற்றுக்கு முடிந்தவரை பதில் கூறினேன். இந்தக் கேள்விகளின் அடிப்படையில் சில கருத்துக்களைத் தொடர விரும்புகிறேன்.

மனிதன், வாழ்வாங்கு வாழப் பிறந்தவன். இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. பிறவிகளில் அரிதான மானிடப்பிறவி ஆன்ம ஈடேற்றத்தை நோக்கமாகக் கொண்டது. நம்முடைய சமயம் இல்லறத்தூடாக வீடுபேறு அடைவதனையே பெரிதாக உயர்வாகக் கருதுகிறது. இல்லறத்தில் கடைப்பிடிக்கவேண்டியவற்றை புராணங்கள் கதைகளாகத் தந்துள்ளன. ஆனால் கருடபுராணம் கதையாக அல்லாமல் விதிகள் போன்று கடமைகளை வகுத்துத் தந்துள்ளது. இவற்றைப் பற்றி நிற்கும்போது குடும்பத்திலும் தனிநபருக்கும் இன்பமான மனநிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய உலகம் பணவருவாயை நோக்கிய சமூகமாக மாறியுள்ளது. இதனைத் தவறு என்று கூறமாட்டேன். "பணமில்லாவிடின் பிணம்" என்று சொன்னவர்களும் நாங்கள்தான். எனவே பணமீட்டல் என்பது தவறாகாது. எங்கே தவறு ஏற்படுகிறது என்றால் பணமீட்டு முறையில்தான் என்பது வெளிப்படையானது. எந்த முறையினைப் பின்பற்ற வேண்டும்;

அல்லாவிடில் ஏற்படும் விளைவு என்ன என்பதை எச்சரிக்கை செய்யும் முறையை ஒழுங்கு படுத்துவதற்கு கருடபுராணக் கருத்துக்கள் துணை நிற்கின்றன.

செய்யும் குற்றங்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதை "நரகம்" பற்றிய விடயங்கள் எடுத்துக் கூறுகின்றன. உட்கொள்ளும் உணவின் தரம், அதில் செய்யப்படும் கலப்படம் பற்றி சுகாதாரப் பகுதியினர் எடுத்துக்கூறி வருகின்றனர். உணவில் கலப்படம் செய்தால் ஐந்தாண்டுகள் சிறை என்பது மனிதச் சட்டத்தின் தண்டனை. இந்தத் தண்டனையை விடப் பெரிய தண்டனை ஒன்று உள்ளது என்பதுதான் "நரகம்" பற்றிய கருத்தாகும். "நரகங்களும் தன்மைகளும்" எனும் தலைப்பிலான பகுதி விரிவுபடுத்தப்பட்டு வேறு ஊடகங்கள் வழியாகவும் - சினிமா, முகப்புத்தகம், நெற் பிரசாரப்படுத்தப்பட வேண்டும்.

சில நரகங்களை மையப்படுத்திய கருத்துடன் ஒரு சினிமாப்படம் (அந்நியன்) வெளிவந்தது. உணவுக் கலப்படம் செய்தவனை நாயகன் கொதிக்கும் எண்ணெயில் இடுகிறான். அந்தக் காட்சி பார்ப்பவர்களின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியது. நல்ல விடயங்களை சினிமாவினால் நாசூக்காகச் சொல்ல முடியும்.

இன்றைய சூழ்நிலையில் கலாசாரச் சீரழிவு என்பது மிகவும் முக்கிய விடய மாகவுள்ளது. அனைவரும் இவ்விடயம் தொடர்பாக கவலைப்படுகிறோம். ஆனால் இந்நிலையை மாற்றுவதற்கு என்ன வழி என்று சிந்திப்பதில்லை. என் குடும்பத்தில் இப்படி நடக்காவிட்டால் சரி, பக்கத்து வீடு பாழாகிப் போனால் எனக்கென்ன என்ற மனப்பான்மை வளர்ந்துவிட்டது. இவை நமது பண்பாட்டை அழிக்கும் என்பது திண்ணம். இந்த நிலையில் கருடபுராணம் குறிப்பிடும் நரகம் பற்றிய கருத்துக்கள் இளம் சமூகத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

சைவ சமயத்தவர் மறுபிறப்பு என்பதனை ஏற்றுக்கொள்பவர்கள். எனவே அடுத்த பிறப்பு பற்றியும், பிதுர்க்கடன் செய்வது பற்றியும் தெளிவான விளக்கம் அவசியமாகும். பிதுர்க்கடன் செய்வது பற்றிய விதிமுறைகள் சிதைந்து வருவதைக் காண்கிறோம். ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற முறையில் விதிகளைக் கூறி வருகிறார்கள். இங்கு சரியானது எது? என்று வினாத் தொடுக்காதவர்கள் இல்லை. என்னிடம் ஒரு அன்பர் கேட்டார் "ஒரு வீட்டில் மரணம் ஏற்பட்டு இருபதாம் நாள் அதே வீட்டில் பிறப்பு ஒன்றும் நிகழ்ந்தால், துடக்குக் கழிப்பது எப்போது" என்றார். ஒரு பெரியவர் கூறியிருக்கிறார் "பெரிய உயிர்தான் முக்கியம். மரணத்தின் முப்பத்தோராம் நாள்தான் செய்யவேண்டும்". இப்படியான குழப்பங்களுக்கு சரியான பதில் என்ன? கருடபுராணம்தான்! இறுதி நிகழ்வை கருதித்தான் துடக்கு கழிக்கப்பட வேண்டும் என்பதுதான் சரியானது.

இவ்வாறு அந்தியேட்டி, ஆண்டுத் துவசம் போன்றவை சரியான கிரியை முறைகள் பின்பற்றிச் செய்யப்படல் வேண்டும். மாதாமாதம் செய்யப்படும் மாசியத்தை எப்படிச் செய்கிறோம். பன்னிரெண்டு மாதத்துக் கிரியையும் ஒரே நாளில் முடிப்பதும், இதனை அரைகுறையாகச் செய்வதையும் காண்கிறோம். இவை ஒழுங்கு படுத்தப்படல் வேண்டும்.

அண்மையில் ஒரு மரண வீட்டில் தந்தையார் இறந்து விட்டார். மகன் வெளிநாட்டில் இருந்து வருவதற்கு ஐந்து நாட்கள் எடுத்தன. ஒருவாறாக வந்து சேர்ந்தார். இறுதிக்

கிரியைகள் செய்யப்பட்டன. அங்கு மகனுடன் வேறு ஒருவரும் சேர்ந்து கிரியைகள் செய்தார்கள். விசாரித்தபோது மகனுக்கு லீவு இல்லை. இரண்டொரு தினங்களில் மீண்டும் பயணமாகி விடுவார் எனவே அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்காக சின்னம்மாவின் மகனும் சேர்ந்து கிரியை செய்கிறார் என்பதனை அறிந்தேன். வெளிநாட்டு வாழ்வில் இந்த இக்கட்டான நிலை ஏற்படுகிறது என்பதனை மறுக்க முடியாது. ஆனால் நமது முறைகளுக்கு மாறான காரியங்களைச் செய்யக்கூடாது. அந்த வீட்டில் பிறந்த பெண்ணுக்கும் கிரியை செய்ய உரித்திருக்கிறது என்பதனை கருடபுராணம் தெளிவுபடுத்தியுள்ளது. பெண்ணுக்கு உரிமையில்லை என்பது தவறானதாகும்.

அடுத்த பிறப்புக்கு கொண்டுசெல்லக் கூடியவை எவை? தான் பெற்றுக்கொண்ட கல்வியும் நல்வினையும் மட்டும்தான் என்பதனை மறந்துவிடக்கூடாது. தான தருமம் செய்வது பற்றிய கருத்தும் கருடபுராணத்தில் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. "தர்மம்" செய்கையில் எந்தப் பிரதியுபகாரமும் கருதப்படாமல் நிர்மலமான மனதுடன் செய்யப்படல் வேண்டும். பெயர், புகழுக்காகச் செய்யப்படுபவை - அவை தர்மங்களாக இருப்பினும் இருள் சேர் நல்வினையாகவே கருதப்படும் என்பது தெளிவானதாகும். அத்தகையவர்களும் உரிய தண்டனையைப் பெறுவர்.

திருவள்ளுவர் வினைகளை வகைப்படுத்தும்போது தீவினை, இருள்சேர் நல்வினை, நல்வினை என்று பிரித்திருப்பதனை இங்கு நோக்கலாம்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(குறள் 5)

இதற்கு உரைநடை செய்தவர்கள் "இறைவனின் உண்மையான இயல்புகளை, நாம் உளமாரப் பாடி வணங்கினால், அறியாமையால் தோன்றும் நல்வினை, (இருள் சேர் நல்வினை) தீவினை என்ற இருவகை வினைகளும் நம்மை வந்து அடையவே மாட்டா!" என்று உரை செய்துள்ளமை கவனிக்கப்படல் வேண்டும். "அறியாமையால் தோன்றும் நல்வினை" என்பது சிந்திக்க வேண்டியதாகும். ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறு கின்றன. தனது டாம்பீகத்தைக் காட்டுவதற்காக நடைபெறும் திருவிழாக்களைக் கண்டு வருகிறோம். இதுதான் இருள்சேர் நல்வினையாகும்.

(தொடரும்...

## சகல ஞானமும்!

அறிவுள்ள வனாலென் அறிவில்லாதவனானா
லென்ன அனைவர்க்கும் மருள் பவனவனே
அறிவில்லாதவனிவ னென இகழ்ந்தால்
அடியவர்க்கிரங்கி அருள் காட்டுவான் முருகன்
பொறிபுலன் வழிபல செய்திகளைத் தந்து
அற்புதங்கள் காட்டியுதனை ஒருங்கிணைத்து
நெறிவழிகாட்டும் சந்நிதியானருள் சான்
றாகும் சகல ஞானமுண்டாகும் காண்!

*-இராம ஜெயபாலன்-*

**தமிழகத் திருக்கோயில் வரிசை:**

# திருவதிகை

–வல்வையூர் அப்பாண்ணா–

கடலூர் மாவட்டம் - பண்டுருட்டியிலிருந்து 2கி.மீ தூரத்தில் இருக்கிறது "திருவதிகை" திருக்கோவில். சென்னை - கடலூர் - விருத்தாசலம் - விழுப்புரம் - சிதம்பரம் ஆகிய பெருநகரங்களிலிருந்து அடிக்கடி திருவதிகைக்கு பேருந்து வசதிகள் உண்டு.

மிகப்பெரிய கோவிலான திருவதிகை அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்றாகும். சிவனின் வீரச்செயல்கள் நடைபெற்ற எட்டு ஊர்களில் உள்ள சிவ ஸ்தலங்களை "அட்ட வீரட்டத் ஸ்தலங்கள்" என்கிறோம். இத்தலம் திரிபுரம் எரித்த வீரத்தலம். திரிபுரம் எரித்ததால் திரிபுராரி, புராரி, திருபுராந்தகர் என்றெல்லாம் இங்குள்ள சிவனுக்குத் திருநாமங்கள் உண்டு.

அப்பரின் தமக்கையார் திலகவதியார் தங்கியிருந்து திருத்தொண்டு செய்துவந்த தலம். சூலைநோயின் துன்பந் தாளப்பெறாத அப்பர் பெருமான், யாருமறியாமல் திருப்பாதிரிப்புலியூரை விட்டு நீங்கி, இங்கு வந்து, தமக்கையாரைக் கண்டு தொழுது, திருநீறு பெற்றுப் பெருவாழ்வு வந்ததென- அவர் பின் சென்று, அதிகைப் பிரானை அடிபணிந்து "ஆற்றேன் அடியேன்" எனக் "கூற்றாயினவாறு" பதிகம் பாடி, சூலைநோய் நீங்கப் பெற்ற திருத்தலம் இது. சுருங்கச் சொன்னால் சைவத்துக்கு நாவுக்கரசரை வழங்கிய பெருமைமிகு தலமிதுவே.

"கூற்றாயினவாறு" பாடி முடிந்ததும், "நற்றமிழ் எடுத்துப் பாடியவனே! நீ நாவுக்கு அரசன் எனும் பொருள் விளங்க 'நாவரசன்' என அழைக்கப்படுவாய்" என ஒரு அசரீரி எழுந்தது. தேவார மூவருள் காலத்தால் மூத்த மருள்நீக்கியாரை "திருநாவுக்கரசர்" என இறைவன் பெயர்சூட்டி மகிழ்ந்த ஸ்தலமும் இதுவே.

இக் கோவிலின் மிக நெருக்கமாக ஓடும் நதி "கெடில நதி" எனப்படுகிறது. "அதிகை" என்பது கோவிலின் மிகப் பழைய பெயர். அதனால் இரண்டையும் இணைத்து "அதிகைக் கெடில வீரட்டானம்" என நாவரசர் தேவாரப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பன்னிரு திருமுறைகளின் காலத்திற்குப் பின்னர் தோன்றியதே "மெய்கண்ட சாத்திரம்" எனப்படும் பதினான்கு நூல்கள். அவற்றுள் ஒன்றான "உண்மை விளக்கம்" எனும் நூலின் ஆசிரியரான "மணிவாசகங் கடந்தார்" அதிகையைச்சேர்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இறைவன்: வீரட்டேஸ்வரர், வீரட்டநாதர், அதிகைநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி
தலமரம் : கொன்றை
தீர்த்தம் : கெடில நதி

கோவிலுக்கு முன்புள்ள 16கால் மண்டபத்தைத் திருநீற்று மண்டபம் என்கிறார்கள். இதற்கு எதிராக அப்பர் மடமும் அருகே திலகவதியார் மடமும் உள்ளது. ஏழு நிலைகளையுடைய

உயர்ந்த ராஜகோபுரம். கோபுர வாயிற் தூண்களில் நிறைந்த சிற்பங்கள். வலப்பக்கத்தில் சற்று உயரமாக திரிபுரமெரித்த கோலச் சிற்பங்கள் சுதையினால் அழகுற வடிவமைக்கப் பட்டுள்ளது. வாயிலின் இரு புறங்களிலும் நடனக் கலையின் 108 கரணங்களை விளக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோபுர வாசலுக்கு மிதித்து ஏறும் படிக்கட்டின் இரு புறத்திலும் அழகான நடன மாதரின் உருவங்களைத் தத்ரூபமாகப் பார்த்து மகிழ்கிறோம்.

உட்புறத்தில் இன்னொரு பதினாறு கால் மண்டபம் காணப்படுகிறது. மண்டபத்தின் இடது பக்கம் "சக்கர தீர்த்தம்" எனப்படும் தீர்த்தக்குளம் உள்ளது. இம் மண்டபத்தில் புகும்போது முதலில் உள்ள இரு தூண்களில் (ஒன்று) சுப்பிரமணியத் தம்பிரான் (அமர்ந்த நிலையில்) சிற்பமும், (இரண்டு) இதற்கு நேர் எதிர்த் தூணில் இவரது சீடரான சிவஞானத் தம்பிரான் (நின்ற நிலையில்) சிற்பமும் உள்ளது. இவர்கள் இருவருமே இக் கோவிலைத் திருத்திச் செப்பனிட்டவர்கள் என்றும், இவர்களே அப்பர் பெருமானுக்கு பத்துநாள் விழாவை ஆரம்பித்தார்கள் என்றும் கூறுகிறார்கள்.

உட்கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. கவசமிட்ட கொடிமரம் - கொடிமரத்து விநாயகர் - முன்னால் நந்தி - வலப்பக்கம் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. "தேவசபை" என்றழைக்கப்படும் இந்த மண்டபத்திலேயே, வருடத்தில் ஆறு தடவைகள் நடைபெறும் நடராஜர் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

உட்கோபுரம் தாண்டி உள்ளே சென்றால் உயரமான நந்தி. ஒரு பக்கம் விநாயகரும் மறுபுறம் முருகனும் உள்ளனர். பிரகாரத்தைச் சுற்றிவர ஆரம்பிக்கிறோம். வலமாக வரும்போது அப்பர் சந்நிதி (உற்சவ மூர்த்தி) உள்ளது. சேக்கிழார் முதலான அறுபத்துமூவர் மூலத் திருமேனிகள் உள்ளன. அடுத்து ஸ்தல விருட்சமான கொன்றை மரம். பக்கத்தில் திலகவதியார் சந்நிதி. அடுத்து சனீஸ்வரர் சந்நிதியும் - அமர்ந்த நிலையில் அப்பர் சந்நிதியும் (மூல மூர்த்தம்) அடுத்தடுத்து காணப்படுகின்றன. தலையில் உருத்திராக்க மாலையும் - கையில் உழவாரமும் கொண்டு அப்பர் பெருமான் அமர்ந்திருக்கும் காட்சி அற்புதமானது.

விநாயகர் சந்நிதி, பஞ்சமுக சிவலிங்கம், வரிசையாக பல சிவலிங்கத் திருமேனிகள், யாகசாலை, நவக்கிரக சந்நிதி - இத்தனையும் கடந்து வந்து நடராஜர் சந்நிதியை அடைகிறோம். பக்கவாசல் படிகள் ஊடாக உள் மண்டபத்தை அடைந்தால் நேரே மூலவர் சந்நிதி. கிழக்கு நோக்கிய பெரிய சிவலிங்கத் திருமேனி. ஆவுடையாரும் பெரியது. பதினாறு பட்டைகள் கொண்ட பெரிய லிங்கபாகம். அழகிய - அளவான - அலங்காரத்துடன் வீரட்டேஸ்வரர் அருள்பாலிக்கிறார். வீரட்டநாதர், அதிகைநாதர், கெடில நாதர் எனப் பல திருநாமங்களால் அழைக்கப்படுகிறார் அவர். கருவறையோடு இணைந்தபடியுள்ள முன் மண்டபத்தில் உற்சவத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன.

சில்லுகள் பூட்டப்பட்ட தேர் போன்ற அமைப்புடன் - பூமியில் நிழல் சாயாதபடி - அடி பருத்துக் காணப்படுகின்றது கருவறையின் அமைப்பு. திரிபுரம் எரித்தபோது தேரில் புறப்பட்டதைக் காட்டும் விதத்திலான எண்கோண வடிவினாலான கருவறை அமைப்பு இது. கருவறையைச் சுற்றிவரும்போது, கருவறையின் புற அமைப்பு நம் கண்களைக் கவருகிறது. குடைவரைச் சிற்பங்கள் போல- உட்குடைவும் - பக்கவாட்டு வளர்த்தியுமாக உள்ள புற அமைப்பில்

கோஷ்ட மூர்த்தங்களாக தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கையம்மன் ஆகியோர் இந்தக் குடைவரையினுள் அமர்ந்துள்ளனர். சண்டிகேஸ்வரர் தனிச் சந்நிதியில் உள்ளார்.

சுவாமி சந்நிதானத்திலிருந்து வெளியே வந்து சுவாமிக்கு வலதுபக்கம் சென்றால் அம்பாள் சந்நிதி வருகிறது. அம்பிகைக்கு திரிபுரசுந்தரி - பெரியநாயகி எனும் திருநாமங்கள் உண்டு. ஐயனுக்கு வலது பக்கம் அம்பிகை சந்நிதி அமர்ந்திருக்கும் கோவில்கள் மிகக் குறைவு. சுவாமி சந்நிதிபோல கிழக்குப் பார்த்தபடியுள்ள அம்பிகை நின்ற திருக்கோலத்தில் அழகு சொரூபமாக அருள் பாலிக்கிறார்.

பாண்டிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு சீர்காழியை அடைந்த ஞானசம்பந்தர், அங்கிருந்து புறப்பட்டு பல திருக்கோவில்களைத் தரிசித்தபின், திருப்பாதிரியூர்ப் பெருமானை வணங்கிக்கொண்டு அதிகை வீரட்டானத்தை வந்தடைந்தார். அங்கே வீரட்டேஸ்வரர் பூத கணங்கள் புடைசூழ திருநடனத்தைக் காண்பித்தார். இறைவன் திருநடனம் கண்டு மெய்மறந்து நின்ற சம்பந்தர் இவ்வாறு பாடுகின்றார்.

"எண்ணார் எழில் எய்தான் இறைவன் அனல் ஏந்தி
மண்ணார் முழுவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறை பாடப் பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவ நின்றாடும் வீரட்டானத்தே"

அதிகைக் கோவிலுக்கு மிக அண்மையில் உள்ள "சித்தவட மடம்" சரித்திரச் சான்று பகருவது. சுந்தரர் திருத்தல யாத்திரையின்போது அதிகைக் கோவிலை அண்மித்தவர், நாவுக்கரசர் தம் கைகளால் உழவாரப் பணிசெய்து வாழ்ந்த அதிகை மண்ணை தாம் கால்களால் மிதிக்க அஞ்சி, சித்தவட மடத்தில் தங்கியிருந்தபோது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. சுந்தரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, வயது முதிர்ந்த பெரியவர் வடிவில் வந்த எம்பெருமான், தாமும் மடத்தில் படுத்துறங்குவதுபோலப் பாசாங்கு செய்து, மூன்றுமுறை சுந்தரர் தலைமீது தம் காலடி படும்படி திருவடி தீட்சை கொடுத்து மறைந்தருளினார். சுந்தரருக்குத் திருவடி தீட்சை கொடுத்த "சித்தவட மடம்" இப்போது "சிவனாண்டி மடம்"- "சித்தாந்த மடம்" என்றெல்லாம் பேசப்படுகிறது.

"நாவுக்கரசருக்கு சூல நோய்க்கான தீர்வு. சம்பந்தருக்கு நடனத் திருக்கோலம் காட்டியமை. சுந்தரருக்குத் திருவடி தீட்சை" என தேவார மூவேந்தர்களுக்கும் திருவருள் பொழிந்து மூவராலும் பாடல்பெற்ற திருவதிகைத் திருக்கோவில் அனைவரும் தவறாது தரிசிக்க வேண்டிய அற்புதத் திருத்தலம்.

தேவார மூவரில் மூத்தவர் திருநாவுக்கரசர். இவர் பாடிய முதல் தேவாரப் பாடல் திருவதிகையில்த்தான் தோன்றியது. இதன்படி, தேவாரத் தலங்களிலேயே முதல் தலமாக விளங்கும் பெருமைக்குரியதும் திருவதிகைத் திருத்தலமே.

"நீதியால் வாழமாட்டேன் நித்தலும் தூயோனல்லேன்
ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள் வைக்கமாட்டேன்
சோதியே சுடரே உன்தன் தூமலர்ப் பாதங்காண்பான்
ஆதியே அலைந்து போனேன் அதிகை வீரட்டனீரே"

-அப்பர்-

# புரட்டாதிமாத வாராந்த நிகழ்வுகள்

04.09.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "பக்திப்பாடல்"

வழங்குபவர்கள் :- திரு கிருபாகரராசா குழுவினர்

[ஆவரங்கால்]

---

11.09.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

வழங்குபவர் :- சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

---

18.09.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

04.09.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள்

[ஆசிரியர், அ.மி. கல்லூரி]

**213ஆவது மலர்**

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை]

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

